

# வழியுரிமை

## ஒரு மீள் குடியேற்றப் பயணம்

சாமிநாதன் விமல்

ஷாணி ஜயவர்தன அவர்களது
'பாதைக்கான உரிமை'
எனும் புத்தகத்தை தழுவி எழுதப்பட்டது

ஜுலை 2013
ஆய்வுத் தொடர் இலக்கம் 05 - 2013

cepa
centre for poverty analysis

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழியுரிமை

## ஒரு மீள் குடியேற்றப் பயணம்

With Compliments
CEPA
Centre for Poverty Analysis
29, Gregory's Road, Colombo 07.
Tel : 011 - 2676955-8 Fax : 0112676959
E-mail : info@cepa.lk

**சாமிநாதன் விமல்**

ஷாணி ஜயவர்தன அவர்களது
'பாதைக்கான உரிமை'
எனும் புத்தகத்தை தழுவி எழுதப்பட்டது

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் (CEPA) வெளியீடு

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன்

2013

09 OCT 2013
8886(P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
363.1256

© வறுமை ஆராய்ச்சி நிலையம் 2013

முதலாம் பதிப்பு — 2013

இலங்கைத் தேசிய நூலகத்தின் வெளியீட்டுத் தரவுகளின் பதிவேடு

விமல், சாமிநாதன்

வழியுரிமை ஒரு மீள்குடியேற்றப்பயணம் / சாமிநாதன் விமல்

கொழும்பு வறுமை ஆராய்ச்சி நிறுவனம், 2013

ப. 85 செமீ. 21

ISBN 978-955-1040-65-9

i 363.1256 டிவி 23 ii தலைப்பு

1. அதிவேகபாதை

இந்த வெளியீட்டின் பதிப்புரிமையானது வறுமை ஆராய்ச்சி நிலையத்திற்குரியது. இந்த நூலின் எந்தவொருபகுதியையும் ஆசிரியரினதும் வெளியீட்டாளரினதும் அனுமதியுடனே மறுபதிப்பு செய்ய முடியும்.

வறுமை ஆராய்ச்சி நிலையத்து வெளியீடுகளின் வரிசைக்குள் தற்போது ஆய்வுகள், தொகுக்கப்பட்ட இதழ்கள், செயல்முறை கட்டுரைகள் மற்றும் சாராம்ச கட்டுரைகள் என்பன உள்ளடங்குகின்றன. இந்த நூலில் வெளிபடுத்தப்படுகின்ற பொருள்விளக்கங்களும் முடிவுரைகளும் ஆசிரியருடையவை என்பதையும் அவை வறுமை ஆராய்ச்சிற்கான நிலையத்தினதோ அல்லது வெளியீட்டு அனுசரணையாளர்களினதோ கொள்கைகளையோ அல்லது கருத்துகளையோ பிரதிபலிக்கப்படுகின்றவையாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள புகைப்படங்களானது வறுமை ஆராய்ச்சி நிலையத்து பணியாளர்களினதாகும்.

இந்த வெளியீடு தொடர்பான சகல விசாரணைகளையும் கீழ்வரும் முகவரியுடன் மேற்கொள்க.

**ISBN : 978-955-1040-65-9**

வறுமை ஆராய்ச்சி நிலையம்
29, கிறெகறிஸ் வீதி, கொழும்பு 07, இலங்கை.
தொலைபேசி ஹ+94 (011) 2676 955 — 8 இ 2667967 — 8
தொலைமடல் ஹ+94 (011) 2676 959
மின்னஞ்சல்ஹ info@cepa.lk
இணையத்தளம்ஹ www.cepa.lk

அச்சுப் பதிவுஹ முத்ரன பிரின்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்,
69/2இ வாட் பிளேஸ்,
கொழும்பு 07.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாமிநாதன் விமல்

எழுத்தாளரும் சிங்கள தமிழ் பரஸ்பர மொழிபெயர்ப்பாளருமான சாமிநாதன் விமல் யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழக மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறையில் ஒரு சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார்.

இது **ஷாணி ஜயவர்தனவினால்** Right of Way எனும் மையக்கருவில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட புத்தகத்தை தழுவி எழுதப்பட்டதாகும். அதேபோல் அவர் வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் அதிவேகபாதை தொடர்பான மீள்குடியேற்ற செயன்முறையில் ஒரு சுயாதீன மதிப்பீட்டுகுழுவாக செயற்பட்டு பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையிலானதாகும். இப்புத்தகத்தில் அடங்கியுள்ள சகல தகவல்களும் வறுமைஆராய்ச்சி நிலையத்தின் அக்கண்காணிப்பு செயன்முறையிலிருந்து பெறப்பட்டவையாகும்.

**வறுமை ஆராய்ச்சி நிலையம்** (CEPA) வறுமை ஆராய்ச்சி நிலையமானது வறுமையுடன் சார்ந்த அபிவிருத்தி விடயங்களை தெளிவாக புரிந்துக்கொள்ள உதவும்பொருட்டு தொழில்சார்ந்த சேவைகளை வழங்கும் ஒரு சுயாதீன நிறுவனமாகும். சுயாதீன பகுப்பாய்வுகளை வழங்குதல், அபிவிருத்தி செயற்பாட்டாளர்களுடைய ஆற்றலை வளர்ச்சியடைய செய்தல் மற்றும் கொள்கை ரீதியான செல்வாக்குகளுக்கான வாய்ப்புகளை தேடல் என்பனவற்றின் மீது இந்த நிறுவனம் பெரும் ஆர்வத்தை கொண்டுள்ளது. சந்தை தேவைகளுக்கு பதிலளிக்கும் அதேநேரம் வலுவான அனுபவ சான்றுகளைக்கொண்ட பின்னணியுடன் சேவைகளை வழங்குவதற்கான ஒரு பலமான திசைப்படுத்தலின் செல்வாக்குக்கொண்டதாக வறுமை ஆராய்ச்சி நிலையம் உள்ளது. வறுமை ஆராய்ச்சி நிலையம் இந்த சந்தை திசையமைப்பை வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளின் வழியாக மேற்கொள்ளப்படுகின்றதாக உள்ளதுடன் அகன்ற ஐந்து கருப்பொருள் புலங்களுக்குள் சுயாதீனமான ஆய்வுகளை மேற்கொள்ளும் நிகழ்ச்சி நிரலைக்கொண்டதாகவும் உள்ளது. முரண்பாட்டிற்குப் பிந்திய அபிவிருத்தி, எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலைமை, குடிபெயர்வு, உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் என்பன இந்த ஐந்து கருப்பொருள் புலங்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

இலங்கையின் முதலாவது அதிவேக சாலையை அமைப்பதன் காரணமாக தங்களுடைய வீடுகளை, சொத்துகளை மற்றும் சீவனோபாயங்களை இழந்த மக்கள் அனைவருக்கும் இந்த நூலினை காணிக்கையாக்குகின்றோம். அவர்களுடைய அநுபவங்களே இதில் பதிவாகியுள்ளன. தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்தின் கீழ் மீள்குடியேற்றல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக தொழில்நுட்ப உதவி செயல்திட்டத்திற்கு நிதி வழங்கிய ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி கிடைக்காத பட்சத்தில் இந்த புத்தகம் வெளிவருவதென்பது சாத்தியபாடற்றதொன்றாகும். குறிப்பிட்ட செயல் திட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அறிவின் உந்துதலாக இந்த வெளியீடு வெளிவருகிறது. இதன்போது தெற்குபோக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்து செயலாற்று பணிப்பாளர் மற்றும் பணியாளர் குழாம் வழங்கிய உதவிகளுக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தயோகத்தர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கும் வறுமை ஆராய்ச்சி நிலையம் தன்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கின்றது. அத்துடன் இந்த ஆய்விற்காக தங்களுடைய பெறுமதிமிக்க பங்களிப்புகளை வழங்கியவர்களான தற்போதைய மற்றும் முன்னால் வறுமை ஆராய்ச்சி நிலையத்தை சார்ந்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

வறுமை ஆராய்ச்சி நிலையம் 2006 இல் இருந்து 2010 வரை தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்துடன் இணைந்து கொழும்பு – மாத்தறை அதிவேக நெடுஞ்சாலையை அமைத்தல் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றல் மற்றும் நஷ்டஈடு வழங்குதல் தொடர்பான கண்காணிப்பில் ஈடுபட்டது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தனி மிகப்பெரிய நெடுஞ்சாலை செயல்திட்டமான இத்திட்டம் காரணமாக பாதிக்கப்பட்ட நபர்களிடம் பதற்றம், அதிருப்திகள் மற்றும் எதிர்ப்புகள் நிலவியதன் காரணமாக இந்த நஷ்டஈடு மற்றும் மீள்குடியேற்றல் பணிகளை நிறைவேற்றல் என்பது ஒரு இலகுவான காரியமாக அமையவில்லை. இடம்பெயர்ந்தவர்களுக்கும் அதேபோல இந்த செயல் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு மீள் குடியேற்றல் செயல்பாடுகளுக்கான ஏனைய சேவைகளை வழங்கிய, கண்காணிப்பில் ஈடுபட்ட மற்றும் ஆலோசனைகளை வழங்கியவர்களுக்கும் கூட இதன் பின்விளைவுகள் கிடைத்தன.

கிடைக்கப்பெற்ற பெருமளவிளான வாழ்க்கை அனுபவங்களின் காரணமாகவும், காலம் கடந்துவிட்டதன் காரணமாகவும் மக்களால் மேற்கொள்ளப்பட்ட தியாகங்களை மறக்கும் மற்றும் கஷ்டங்களை பொறுத்துக்கொள்ளும் போக்கையும் நாங்கள் கொண்டுள்ளோம். இந்த நூலானது இடம் பெயர்ந்து சென்ற மக்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றியும், அவர்களுடைய வாழ்க்கையின் மீது இந்த செயல் திட்டத்தின் பல்வேறுபட்ட பாதிப்புகளை பற்றியும் ஆவணப்படுத்தலுக்கு எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகும். இது நான்கு வருடங்களுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்ட ஒரு கட்டமைப்பு ரீதியான கண்காணிப்பு செயற்பாட்டினை அடித்தளமாக கொண்டுள்ளது. இதன்போது ஆராய்ச்சிற்கு உட்பட்ட குடும்பத்தார்களின் எண்ணிக்கையானது நாநூறாக உள்ளதுடன், பாதிக்கப்பட்ட குடும்பத்தார்களைக்கொண்ட 30 ற்கும் மேற்பட்ட குழுக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம். மேலும் குடியிருப்பாளர்கள், நிபுணர்கள், உள்ளூராட்சி உத்தியோகத்தர்கள் மற்றும் வழங்குனர்கள் என்ற வகையில் நாநூற்று ஐம்பதுக்கும் அதிகமான தனிநபர்களுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களை இந்த ஆய்வு கொண்டுள்ளது. இதற்கான தகவல்கள் பிரதானமாகவே 2006 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டதுடன் 2007 இல் இருந்து 2010 வரை தொடர்ச்சியாக ஒழுங்கான இடைவெளி நேரங்களில் சேகரித்துக்கொண்ட சீவனோபாயங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாய வளங்கள் மற்றும் மீள்குடியேற்றல் தளங்கள் சார்ந்த விடயங்களையும் இந்த ஆய்வு கொண்டுள்ளது.

பாதை அமைக்கும் பணியை தங்களுடைய அடிப்படையான கடமையாகக்கொண்ட பொறியியலாளர்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவை கூட இந்த செயல்திட்டத்தின் சமூக நிகழ்ச்சிகளை எவ்வாறு அமுல்படுத்தியது என்பதையும், அத்துடன் முகங்கொடுத்த இடர்களையும், வாதாடுகின்ற சந்தர்ப்ப நிலைகளையும் இந்த ஆய்வானது எடுத்துக்காட்டுகின்றது. அதேபோல உண்மையான வாழக்கை நிலவரங்களுக்குள் பல்வேறு வழிகளில் செயல்பட்டு பல்வேறு வழிகளில் பிரதிச்செயலை காட்டியவர்களான பல்வேறுப்பட்ட மக்கள் குழுக்களுடன் குறிப்பிட்ட பொறியியலாளர்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் எவ்வாறு பணி பரிந்தார்கள் என்பதையும் காட்டுகின்றன. இந்த செயல் திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் போன்றே அத்துடன் இணைந்து பணியாற்றியவர்களும் இதில் உள்ளடங்குகின்றனர். இச்சைக்குட்படாத மீள்குடியேற்றல் சார்ந்த தேசியக் கொள்கையில் உள்ளடக்கும் அதன் மூலக்கோட்பாடுகள் முதன் முதலாக பெரும் எடுப்பில் அமுலாக்கப்பட்டமை தொடர்பான ஒரு நுண்ணறிவையும் இந்த நூல் வழங்குகின்றது. அதன்வழியாக பகிர்ந்துக்கொள்ளப்படும் பெறுமதிமிக்க அனுபவங்களானது இதணையொத்த நிலவரங்களில் இதனையும் விட சிறப்பானதாக செயல்படுத்துவதற்கு வழிவகுப்பதாக அமையும். இறுதியாக பாதையை உருவாக்குவதற்கு முந்தியதான இடங்களையும் சூழ்நிலைகளையும் காண்பியப்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சியானது, அதிவேக நெடுஞ்சாலையில் செல்லும் பொது மக்களாகிய நாங்கள் உணர்ந்துக்கொள்ள வேண்டிய சிலதை குறிப்பிடுகின்றதாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## உள்ளடக்கம


| | | |
|---|---|---|
| முதலாம் அத்தியாயம் | : பாதை அமைத்தல் | 1 |
| இரண்டாம் அத்தியாயம் | : அத்திவாரமிடுதல் | 11 |
| மூன்றாம் அத்தியாயம் | : குடியேற்றல் | 39 |
| நான்காம் அத்தியாயம் | : மறுபடியும் பயிரிடுதல் | 51 |
| ஐந்தாம் அத்தியாயம் | : வியாபாரங்களை மீள்தொடங்குதல் | 63 |
| ஆறாம் அத்தியாயம் | : பாதை நிர்மாண பணிகளுடன் செயலாற்றுதல் | 75 |
| ஏழாம் அத்தியாயம் | : முன்னோக்கி நகர்த்தல் | 87 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் அத்தியாயம்

# பாதை அமைத்தல்

இலங்கையின் முதலாவது நுழைவு கட்டுப்பாட்டைக்கொண்ட அதிவேக நெடுஞ்சாலையானது கொழும்பு மாத்தறை அதிவேக பாதை, தெற்கு அதிவேக பாதை மற்றும் தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டம் என பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. 2011ஆம் ஆண்டின் பிற்பகுதியில் திறந்துவிடப்பட்ட இச்சாலையானது மேல் மாகாணத்தின் கொட்டாவ (கொட்டாவ என்ற இடமானது கொழும்புப் புறக்கோட்டையில் இருந்து இருபத்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ளது) என்ற இடத்தில் இருந்து தொடங்கி தென்மாகாணத்தின் மாத்தறை வரையான 128 கிலோ மீற்றர் நீளத்தைக் கொண்டதாகும். லங்கா புவத் எனப்படும் தேசிய செய்தி முகவர் நிலையத்தின் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்து அறிக்கையின்படி இதற்காக உத்தேசிக்கப்பட்ட செலவுத் தொகையானது 85 பில்லியன் ரூபாய் ஆகும். இலங்கை அரசாங்கம், சர்வதேச ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கி (JBIC) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) என்பன இணைந்து நிதி வழங்கும் இத்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக வீதி அபிவிருத்தி அதிகார சபை (Road Development Authority) செயற்படுகிறது.

வறிய மக்களுக்கு தொழில் வாய்ப்புகளை கொண்டுவரும் இந்த அதிவேக நெடுஞ்சாலையானது பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு மாற்றத்தைக்கொண்டு வருகின்றதொன்றாக அமையும் என்று அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் எதிர்வு கூறுகின்றன. இச்சாலையின் வழியாக பயணத்தை மேற்கொள்வதன் மூலம் பயணத்திற்கான நேரம் அரைவாசிக்கும் மேல் குறையும் என்ற காரணத்தால் இப்பாதை பொது மக்களாலும் பெரும் வியாபாரிகளாலும், - குறிப்பாக சுற்றுலாத்துறையைச் சார்ந்தவர்களாலும், பொருள் உற்பத்தித் துறையைச் சார்ந்தவர்களாலும் - வரவேற்கப்படுகின்றது. அதேநேரம் அதிவேக நெடுஞ்சாலையானது ஒரு நாட்டினதுடைய அபிவிருத்தியின் ஒரு கட்டாயமான சுட்டியாக பார்க்கும் மக்களும், முகவர்களும் இந்த சாலை பற்றிய நன்நம்பிக்கையை கொண்டவர்களாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் வரைப்படம்: தெற்கு அதிவேக சாலை செல்லும் வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளார்கள். இருந்தபோதிலும் இதன் காரணமாக அதிகளவிலான பாதிப்புகளும் மிக குறைந்த இலாபங்களுமே கிடைக்கும் என்ற எண்ணத்தைக்கொண்ட உள்ளூர் சமுதாயங்களைச் சார்ந்தவர்கள் இது பற்றிய கவலையையும் அச்சத்தையும் வெளிபடுத்துகிறார்கள். அவர்கள் தங்களுடைய வீடுகளையும், காணிகளையும் இழந்துப்போவதை விரும்புவதில்லை என்பதுடன் இந்த பெரிய நிர்மாணிப்பு செயல் திட்டம் காரணமாக தங்களுடைய வாழ்க்கை முறைமையின் மீது ஏற்பட்ட இடையூறுகளுக்கு முகங்கொடுத்தும் உள்ளார்கள். ஏற்கனவே இருந்திருக்கின்ற சமாந்தர கடலோர காலி பாதையை பயன்படுத்திக்கொள்ளும் இச்சமுதாயத்திற்கு இப்பாதை நிர்மாணத்தால் இழந்துப்போகின்றவைக்கு நியாயத்தை வழங்கும் அளவுக்கு இச்சாலையால் திருப்திகரமான பலன்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் அவர்களிடம் நிலவுதாக இல்லை.

## வழி

தேசிய மட்டத்தில் சனத்தொகையின் அடர்த்தியானது ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 351 என்ற அளவில் இருக்கும்போது இந்த அதிவேக சாலையை அமைக்க பயன்படுத்தப்பட்ட காணிகளில் அது ஒரு சதுர கிலோமீற்றருக்கு 940 என்ற அளவில் உச்ச மட்டத்தில் உள்ளது. இந்த சனத் தொகையின் கால்வாசி மக்கள் பிரதானமாகவே அரை—நகரத்து மற்றும் கிராமிய குடியிருப்பாளர்களாக உள்ளார்கள். அத்துடன் அவர்கள் உத்தியோகப்பூர்வமானதான வறுமைக்கோட்டிற்கு கீழ் வசிக்கின்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. பெரும்பாலான காணிகள் சுற்றுசூழலியல் ரீதியாக (ecologically) பலவிதமானத்தன்மையையும் அதேபோல புவி அமைப்பியல் ரீதியாக (geologically) பல்வகையானத்தன்மையையும் கொண்டுள்ளவையாகும். இக்காணிகளில் பெரும்பாலானவை பயிரிடப்பட்டவையாகும். இப்பிரதேசத்து மக்களில் பலரைப் பொறுத்தவரை விவசாயமே பிரதான பொருளாதார செயற்பாடாக உள்ளது. பள்ளத்தாக்குகளில் நெற் பயிர் செய்கையையும், மேட்டு நிலங்களில் தேயிலை, இறப்பர் மற்றும் கறுவா பயிர்செய்கையையும் இவர்கள் மேற்கொள்கிறார்கள். சில காடுகளின் வழியாகவும், சதுப்பு நிலங்களின் வழியாகவும், அதேநேரம் களு கங்க, பெந்தொட்ட கங்க மற்றும் ஜிங் கங்க என்ற ஆறுகளை உள்ளடக்கியதாக ஐந்து ஆறுகளின் நீர் பிடிப்பு நிலங்களின் (catchments) வழியாகவும் இந்த நெடுஞ்சாலை செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயல்திட்டமும் அதில் உள்ளடங்கும் மீள்குடியேற்றத்திற்கான அடிப்படை கொள்கைகளும்

வேறொரு தெரிவு இல்லாத காரணத்தால் ஒரு புதிய இடத்திற்கு மக்கள் குடியேற செல்லும் நிலைமையை குறிக்க இச்சைக்குட்படாத இடப்பெயர்வு (involuntary displacement) என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக சமீப காலத்து தசாப்தங்களில் இலங்கை வாழ் மக்கள் பலர் உள்நாட்டு போர் காரணமாகவும், மகாவலி அபிவிருத்தி செயற்திட்டம் காரணமாகவும் இவ்வாறான இடப்பெயர்வுகளை சந்தித்துள்ளார்கள். தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டம் காரணமாக 1, 338 குடும்பங்கள் இடம்பெயர்ந்தன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அபிவிருத்தி செய்யப்படும் 32 நிலப்பகுதிகளில் 509 குடும்பங்கள் காணி உரிமை பெற்றுள்ளன. சனத்தொகை அடர்த்தியானத்தன்மை மிக அதிகமான பிரதேசங்களை தவிர்த்துக்கொண்டு இந்த நெடுஞ்சாலையை கொண்டுச் செல்ல ஜாக்கிரத்தையானதும், நிதானமானதுமான முயற்சிகள் இந்த செயல் திட்டத்தால் மேற்கொள்ளப்படாமல் இருந்திருப்பின் இடம்பெயர வேண்டிய சனத்தொகை மேலும் அதிகமாகி இருக்கலாம். சிலநேரம் சுற்றுசூழலுக்கும் விவசாயத்திற்கும் குறிப்பிடத்தக்க இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம். இக்காணிகளின் பெரும்பகுதி விவசாய நிலங்கள் ஆகும். நெல், தேயிலை, இறப்பர் மற்றும் கறுவா பயிர்களைக் கொண்டிருந்த காணிகளை இழந்ததன் காரணமாக ஏறக்குறைய 4,000 குடும்ப அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களைத் தவிர ஏறக்குறைய 550 குடும்ப அங்கத்தவர்கள் மறைமுகமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதிவேக சாலையை அமைக்க பயன்படுத்தப்பட்ட காணிகளில் விவசாய தொழிலாளர்களாக மற்றும் பெருந்தோட்ட தொழிலாளர்களாக வேலை செய்தவர்களும், மூடப்பட்ட தொழில் முயற்சிகளில் (enterprises) வேலை செய்தவர்களும் இவ்வாறு மறைமுகமாக பாதிக்கப்பட்டவர்களுள் அடங்குகிறார்கள். இந்த சாலையின் இடைமாற்றம் (interchange) பகுதிகள் அபிவிருத்தியடைந்த பின்பு இன்னொரு குழு இடம்பெயர நிர்ப்பந்திக்கப்படலாம். நகர அபிவிருத்தி வலயமும் அதிவேக பாதை காரணமாக பாதிப்புக்கு உட்படலாம். "மிக சிறந்த நன்மைக்காக" என்ற வகையில் அபிவிருத்திக்காக சிலரால் மேற்கொள்ளப்படும் தியாகமாக இச்செயல் திட்டம் அங்கீகரிக்கப்படுகிறது. எனவே இடம் பெயர்ந்த மக்களின் உரிமைகளை பாதுகாக்குமாறு கோரும் வளங்களை வழங்குபவர்களுடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கமளித்தல், மற்றும் முறைப்படுத்தல் முயற்சிகளுக்கு உதவும் பொருட்டு இச்சைக்குட்படாத மீள்குடியேற்றல் சாந்த தேசிய கொள்கையின் (National Involuntary Resettlement Policy) மூலக்கூறுகளை இத்திட்டம் ஏற்றுக்கொள்கின்றது. இந்த இச்சைக்குட்படாத தேசிய மீள் குடியேற்றக் கொள்கையின் முக்கிய மூலக்கூறுகளின் ஒன்றாக மீள்குடியேற்றல் திட்டத்திற்கு மாற்றீடுகளை தேடல் வேண்டும் என்பது அதேபோல அந்த மாற்றீடுகளுக்குள்ளேயும் இயலுமானளவு விசாரித்தலின் வழியாக இச்சைக்குட்படாத மீள்குடியேற்றலை தவிர்க்கின்றதாக இருக்க வேண்டும் என்பதுமேயாகும். எனவே கொழும்பு - மாத்தறை அதிவேக நெடுஞ்சாலைக்கான தொடக்க தொழில் நுணுக்கங்களைக்கொண்ட ஒழுங்குமுறைகள் சமூக மற்றும் பொருளாதார விளைவுகளை குறைக்கும் அல்லது தவிர்த்துக்கொள்ளும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதாக இருந்தன. எவ்வாறாயினும் சிலரை பொறுத்தவரை வீடுகளையும் சீவனோபாயங்களையும் கைவிட வேண்டிய நிலைமையானது தவிர்க்க முடியாத ஒன்றாகியதுடன், இச்சைக்குட்படாத தேசிய மீள் குடியேற்றல் கொள்கையானது ஏனைய வழிகளில் பாதிக்கப்பட்டதும், இடம்பெயர்ந்ததுமான மக்களின் இழப்பிற்கு நியாயமான நஷ்டஈட்டையும் இயல்புநிலையடைவதற்கு போதியளவு ஆதரவை வழங்குவதற்கும் ஒத்துக்கொள்ளப்பட்டதொன்றாகும்.

"தனி நபர்களோ அல்லது ஒரு சமுதாயமோ அவர்களுடைய காணிகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இழந்துவிடும்போது தான், அல்லது அவர்களுடைய சீவனோபாயக் கருவிகளோ அல்லது சமூக உறவுமுறைகளோ கட்டாயமாக இழக்கப்படும் போதுதான் ஒரு செயல்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லமுடியும் என்றால் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதுடன் காணிகளை, வசிப்பிடங்களை, உட்கட்டமைப்புகளை, வளங்களை, வருமான மூலங்களை மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவ வேண்டும். அவ்வாறு செய்யும்போது அது அவர்களுடைய பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளை குறைந்தப்பட்சம் செயல்திட்டம் கொண்டுவருவதற்கு முந்திய மட்டத்திற்கு கொண்டு வருவதாக இருக்க வேண்டும்"(Operational Manual, Involuntary Resettlement, ADB பக்கம் 02).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டம்

## செயல் ஒழுங்கு

மக்களுடைய வாழ்க்கையில் எற்படக்கூடிய இடையூறுகளை குறைக்கும் நோக்கில் தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்தில் காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழு (Land Acquisition and Resettlement Committee) என்ற பெயரில் நஷ்டஈடு நிர்ணையிக்கப்படுவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. சீவனோபாயங்களை இழந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்குதல் போன்றே சந்தை பெறுமதிக்கு அப்பால் சென்று "சீர்படுத்தப்பட்டதன் பின் பெறுமதியை" (replacement value) கொண்டதாக அந்த நஷ்டஈடு கணிக்கப்படுவது, மீள் குடியேற்றல் அமுலாக்கல் திட்டத்தின் இன்னொரு அடிப்படையான விடயமாக இருந்தது. இதன்போது காணி உறுதிகள் இல்லாதவர்களுக்கும் கொடுப்பனவுகளை வழங்குவதும், அவர்களுடைய சீவனோபாயங்களை மீள்தொடங்குவதற்கான உதவிகளை வழங்குவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மேலும் இச்செயல்திட்டத்தில் "மிகவும் எளிதாக பாதிக்கப்படக்கூடிய" (vulnerability) என்ற கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதாவது ஏற்படும் மாற்றங்களின் காரணமாகவோ அல்லது பாதையமைத்தல் காரணமாகவோ சில குழுக்கள் ஏனையவர்களை விட அதிகமான பிரதிகூலமான பாதிப்புகளுக்கு உட்பட்டார்கள் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. பாதையமைக்கும் செயல் திட்டத்தை வகுக்கும்போது வீடுகளை கட்டி முடிக்கவும், வேலைகளை மீள் தொடங்குவதற்கும் உதவும் பொருட்டு மேலதிகமான கொடுப்பனவுகளையும் உதவிகளையும் பெறக்கூடியவர்களாக கீழ்வரும் ஆறு பலவீனமான (vulnerable) குழுக்கள் இனங்காணப்பட்டன.

1) பெண்களை குடும்பத் தலைவைர்களாகக்கொண்ட குடும்பங்கள்.

2) வயோதிப குடும்பங்கள்

3) அங்கவீன அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள்

4) வறுமைக்கோட்டின் கீழ் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள்.

5) ஒரு ஏக்கருக்கு குறைவான காணியுள்ள குடும்பங்கள்

6) சிறுபான்மை இனக் குடும்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில திசை மாற்றங்கள்

எவ்வாறாயினும் எல்லா விடயங்களும் திட்டத்தின்படியே நடைப்பெற்றன என்று கூற முடியாது. வீதி அபிவிருத்தி அதிகார சபை 2000ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்து 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் முடிவுக்கு கொண்டுவரக்கூடிய இலக்கை கொண்டிருந்தாலும் 2006ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலேயே அது சாத்தியமாகியது. செலவை குறைத்துக்கொள்ளும் நோக்கத்தில் இந்த செயல் திட்டம் கால அட்டவணைகளின்படி வேலை செய்வதில் கவனம் செலுத்தினாலும் சிலநேரங்களில் அது எதிர்மறையான விளைவுகளையும் கொடுத்தது. உயர் அதிகாரித்துவங்களால் தீர்க்க வேண்டிய சில பிரச்சினைகளையும் அது உருவாக்கியது. பல சந்தர்ப்பங்களில் பாதை அடிச்சுவடியில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஒவ்வொரு மாற்றத்தின்போதும் வீதி அபிவிருத்தி அதிகார சபை பல்வேறு குழுக்களிடம் இருந்தும், குடும்பங்களிடம் இருந்தும் எழும்பிய எதிர்ப்புகளுக்கு முகங்கொடுத்தது. இவற்றிக்கு மேலாக பாதிக்கப்பட்ட மக்களிடம் நிலவிய அவநம்பிக்கைகளும் அதிருப்திகளும் கூட செயல் திட்டம் முடிவடைவதை தாமதமாக்கின.

ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நெடுஞ்சாலை செல்லும் வழியை சார்ந்த திட்டத்திற்கு மாற்றங்களை கொண்டுவந்தபோது அதற்கு எதிராக சவால்விட்டு 2001ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 49 பேர்களைக்கொண்ட ஒரு குழு மேன்முறையீடு நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. ஆயினும் இதில் இரு முறைபாடுகள் 2003ஆம் ஆண்டு மே மாதத்தில் நிராகரிக்கப்பட்டன. மேன்முறையீடு நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து 42 குடும்பங்கள் உச்ச (supreme) நீதி மன்றத்திற்கு சென்றன. உச்ச நீதி மன்றம் அதன் தீர்ப்பை 2004ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வழங்கியது. மத்திய சுற்றாடல் அதிகார சபையால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டதொரு பாதை வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்றும், சுற்றாடல் பாதிப்பு மதிப்பீடுகளுக்கான (Environmental Impact Assessment) ஆய்வுகளை மேற்கொண்டு இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் அந்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் முன்அறிவித்தலை பெற உரிமையுள்ளவர்கள் என்பதையும் இலங்கை அரசியல் யாப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை முறைப்பாட்டாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்துள்ளார்களா? என்பது பற்றி கவனம் செலுத்த வேண்டும் என்பதும் இந்த தீர்ப்பில் உள்ளடங்கியிருந்தன. காணி சுவீகரிப்பு சட்டத்தின் (Land Acquistion Act) கீழ் அரசால் வழங்கப்பட வேண்டிய நஷ்டஈட்டிற்கு மேலதிகமாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 75,000 ரூபாய் வீதம் வழங்க வேண்டும் என்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதேநேரம் இந்த மேன்முறையீடு சார்ந்த செலவுகளை கருத்தில்கொண்டு 150,000 ரூபாய் வழங்க வேண்டும் என்பதும் குறிப்பிட்ட தீர்ப்பில் உள்ளடங்கிருந்தது. பல பில்லியன் ரூபாய் பெறுமதியைக்கொண்ட ஒரு தேசிய செயல்திட்டத்துடன் பார்க்கும் போது "மிக மிக அற்பமான" பெறுமதியைக் கொண்டதாக உள்ள அடக்கமான நிலத்துண்டையோ அல்லது சிறிய குடிசையையோ தியாகம் செய்யயும்படி அவரை நிர்பந்திக்க முன்பு ஒரு நியாயமான செயல்முறைக்கொண்டதாக அவருடைய உரிமையை முன்னமே தீர்மாணிக்க ஒரு எளிய கிராமவாசிக்கு சட்ட ரீதியான உரிமையின்படி செயற்படுவதற்கு அனுமதிக்கப்படுவதாக இருந்தால் அது அவருடைய உரிமைகள் மீறப்படுவதை முழுமையாகவே அலட்சியம் செய்யும் பாரபட்சமான நிலையை தவிர்ப்பதாக அமையும். அவருடைய சொத்தின் பெறுமதி சிறியது, நஷ்டஈட்டிற்கான அவருடைய உரிமையோ மிகவும் பெரியது.

இக்குடும்பங்களில் சில தமது முறைபாடுகளை ஆசிய அபிவிருத்தி வங்கியின் காவல்நிலை இயந்திரம், விசேட செயல்திட்ட வசதிவழங்குனர் அலுவலகம் மற்றும் மனிலா என்ற இடத்தில் அமைந்துள்ள முறைபாடுகளை பற்றி கவனம் செலுத்தும் அலுவலகத்திடம் கொண்டு சென்றன. சமரச நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்பே செயல் திட்டம் முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருந்ததுடன் காணி சுவீகரித்தல் செயற்பாடு முடிவடையும் வரை பல வருடங்கள் இச்செயல்திட்டத்து செயற்பாடுகள் தாமதமாகின. இதுவும் 2005 ஆம் ஆண்டில் முடிவுக்கு கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்டிருந்த இந்த செயல்திட்டம் தாமதமாக காரணமாகியது.

### சிக்கலான நிலைமையுடன் வேலை செய்தல்

செயல் திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவருதல் அதாவது கோட்பாடுகளை பிரயோக நிலைக்கு கொண்டுவருதல் என்பது இலகுவாக இருக்கவில்லை. ஆயினும் அதில் ஈடுபட்ட அனைவரையும் பொறுத்தவரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது புதிய அனுபவங்களையும், புதிய அறிவையும் தருவதாகவே இருந்தது. இதற்கு ஓர் உதாரணத்தை எடுத்து கூறுவதாக இருந்தால், எளிதாக பாதிக்கப்படக்கூடிய நிலைமையானது (vulnerability) தொடக்கத்தில் நம்பி இருந்ததைவிட மிகவும் சிக்கலானது என்பதையும் அது பலமுகங்களைக்கொண்டுள்ளது என்பதையும் தெளிவாக்கியது. மிகவும் கடுமையானதாகிய எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலைமையானது மக்களின் இடமாற்றல் (relocation) காரணமாக மேலும் கடுமையான நிலையடையும் என்பதை இந்த செயல்திட்டம் எதிர்பார்க்கவில்லை. உண்மையாகவே மக்களின் இயல்பு நிலையடைதல் செயற்பாடானது அதிகாரிகளால் எதிர்பார்த்ததைவிடவும், மக்கள் நம்பியதை விடவும், மெதுவாகவே இடம்பெற்றன என்றாலும் சில சாதகமான மாற்றங்களின் அறிகுறிகளும் தென்பட்டன. இங்கு படிப்பினையாக அமைந்தது யாதெனில், அதிவேக நெடுஞ்சாலையின் காரணமாக இடம்பெயரவைக்கப்பட்ட மக்களின் மீதான சாதகமான விளைவுகளை போன்றே பாதகமான விளைவுகளும் எதிர்கால சான்றுகளாக இனி வரும் சில வருடங்களில் தொடரும் என்பதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் அத்தியாயம்

# அத்திவாரமிடுதல்

### குறிப்பிடத்தக்கதொரு வித்தியாசம்

காணி சுவீகரித்தல், நஷ்டஈடு வழங்குதல் மற்றும் மீள் குடியேற்றல் என்ற விடயங்களை சார்ந்ததாக நிலவும் இலங்கை சட்டத்தில் இருந்து தீவிரமானதொரு மாற்றத்தை கொண்டதாக இந்த செயல்திட்டத்தின் மீள்குடியேற்றல் நடைமுறைப்படுத்தல் திட்டம் அமைந்திருந்தது. காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவானது (Land Acquisition and Resettlement Committee) குறிப்பிட்ட செயல் திட்டத்தின் ஒரு முக்கியமான பொறிமுறையாக கவனிக்கப்பட்டது. இந்த காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவானது பொதுவாக அரசு தேவைக்காக தனியார் காணிகளை சுவீகரிக்கும்போது பயன்படுத்தப்படுகின்ற *1950*ஆம் ஆண்டு *09* இலக்கத்தைக்கொண்ட சட்டத்தை (Land Acquisition Act No.9 of 1950) விட குறிப்பிடத்தக்க வித்தியாசத்தைக் கொண்டதாக இருந்தது. அதாவது காணி சுவீகரிப்பு சட்டமானது இடம் பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரங்களையோ அல்லது சீவனோபாயங்களையோ மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவருவதுடன், அவை சார்ந்த விடயங்களில் பரந்தளவில் கவனம் செலுத்தப்படக்கூடியதொன்றாக இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதொரு வித்தியாசம் ஆகும்.

காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவின் மூலமாக மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றல் அமுலாக்கல் திட்டமானது இலங்கையில் நடைமுறையிலுள்ள காணி சுவீகரிப்பு செயல்முறையில் நிலவும் சில முக்கியமான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு முயற்சித்தது. இக்குழுவின் செயல்திட்டமானது அடிப்படையில் இரு முக்கியமான மூலாம்சங்களைக் கொண்டதாக அமைந்திருந்தன.

*1)* எல்லா வகையான இழப்புகளும் (வீடு, சொத்துகள் மற்றும் சீவனோபாயங்கள்) உள்ளடக்கப்படுவதாகவும், மீள்பொருத்தப்படுவதற்கான பெறுமதியை (replacement value) கவனத்தில்கொண்டும் நஷ்டஈடு கணிக்கப்பட்டது. அத்துடன் தற்காலிகமாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்தல், ஆவணங்களை தயார்ப்படுத்தல், உபயோகமான பொருட்களை வேறு இடத்திற்கு கொண்டுசெல்லல் மற்றும் உரிய இடத்தில் மீள் வைத்தல் என்பனவற்றிக்கான செலவுகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) நட்டஈடு வழங்குதலை தீர்மானிற்கும் செயற்பாடு மேற்கொள்ளப்படும்போது மக்களும் பங்குக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்கியதுடன், ஆலோசனைகளையும் வழங்கியது. இதன்போது காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழு புதிய இடத்தில் குடியேறவுள்ள குடும்பங்களுக்கும், அந்த மீள் குடியேற்றலின் வழிகாட்டிகளான அரசு உத்தியோகத்தர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் சபையாக செயற்பட்டது. இதனை மிகவும் இலகுபடுத்தும் நோக்கில் ஒரு குடும்பம் பெற வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை தீர்மாணிக்கும் இறுதி பொறுப்பை காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழு ஏற்றுக்கொண்டது. இந்த குழுவின் கூட்டங்களானது ஒரு கூட்டத்தை கூட்டுமாறு கேட்டுக் கொண்டவர்களுக்கு மாத்திரமன்றி எல்லா குடும்பங்களுக்கும் பொதுவானதாக இருந்ததுடன் மக்களுக்கு தங்களுடைய கருத்துக்களை பகிர்ந்துக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்கியது. வீடுகள், காணிகள், பயிர்கள் மற்றும் தொழிற்முயற்சிகள் ஆகியவற்றினை இழந்தவர்களுக்கு நியாயமான நஷ்டயீட்டை வழங்குவதற்கான சமரச பேசுவார்த்தைகளுக்கு இந்த சபை உதவியது.

பிரதேச செயலாளரை (அல்லது அவருடைய பிரதிநிதியை) தலைவராகக்கொண்டும் குறிப்பிட்ட பிரதேசத்து மதிப்பீடு உத்தியோகத்தர் (valuation officer), நில அளவை மேற்பார்வையாளர் (Superintendent of Surveys), வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், கிராம சேவகர் மற்றும் குடும்பங்களின் பிரதிநிதிகள் என்பவர்களைக்கொண்டதாக காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழு அமைந்திருந்தது. எனவே அது தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும், உள்ளூர் தொழிற்திறனையும் வழங்குபவர்களைக்கொண்டிருந்தது. தொடக்கத்தில் அது இழந்த சொத்துகளுக்கான பண ரீதியான நஷ்டயீட்டை வழங்குவதை கருத்தில்கொண்டு அமைக்கப்பட்டதாக இருந்தாலும் உண்மையாகவே அது பின்பு மீள்குடியேற்றல் சார்ந்த எவ்வகையான மனக்குறைகளையும் (grievance) முன்வைக்கக்கூடிய சபையாக மாறியது. இக்கூட்டங்கள் மக்களுக்கு அவர்களுடைய பௌதிக ரீதியான சொத்துகளை சார்ந்த பிரச்சினைகளை முன்வைப்பதற்கான வெளியாக மாத்திரமல்லாமல் ஒரு சொத்து மதிப்பிடுதலின்போது உள்வாங்கிக்கொள்ள கடினமானவையான அவர்களுடைய குடும்ப நிலைமை, வறுமை, இயலாமை போன்ற கஷ்டங்களையும் முன்வைக்கும் களமாக காணப்பட்டது. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துரையாடல்களும் சமரச பேச்சுகளும் பல கட்டங்களாக நீடித்து இடம்பெற்றன. சுவீகரிக்கப்பட்ட காணித்துண்டும் எதிர்பார்க்கப்பட்ட நஷ்டயீடும் மிகவும் குறைந்த அளவில் கொண்டிருந்த சிலரை தவிர பெரும்பாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் நூறுவிதமான குடும்பங்கள் காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழு கூட்டங்களுக்கு சமூகமளித்தன. காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழு கூட்டங்கள் பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்டமையானது மக்களுக்கு அதில் இலகுவாக பங்குக்கொள்ளக்கூடிய வசதியை வழங்கியதுடன் பிரதேச செயலகம் என்பது அரசு நிர்வாக முறைமையின் மிகவும் உள்ளூர்மயமாக்கப்பட்ட மட்டமாகவும் இருந்தது.

தங்களுடைய பிரச்சினைகளை காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவிடம் முன்வைத்தலானது மக்களை பொறுத்தவரையில் பலதரப்பட்ட உணர்வுகளைக்கொண்டதொன்றாக இருந்துள்ளது என்பதை புரிந்துக்கொள்ளக்கூடியதாக இருந்தது. தங்களுடைய பிரச்சினைகளைப் பற்றி முறைபாடு செய்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமையானது அனுகூலமானதொன்றாகவும் நம்பிக்கையூட்டுகின்றதொன்றாகவுமே சிலர் கருதினார்கள். ஆயினும் உத்தியோகத்தர்களின் முன் ஆஜராகுதல் என்பது பணியவைக்கும் ஒன்றாகவும் அச்சமடைய செய்யும் ஒன்றாகவும் இன்னும் சிலர் கருதினார்கள்.

"காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழு என்பது ஒரு சிறந்த முடிவுதான். அப்படியானதொன்று இருக்கவில்லையென்றால் எங்களுடைய கதி அதோ கதி தான். நாங்கள் எங்களுக்கு கிடைக்கக்கூடியதை பற்றி இதில் வைத்து பேசி அதன் தொகையை கூடிக்கொள்ளலாம். மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் போது நடந்தவையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போர்து உண்மையாகவே இது எவ்வளவோ நல்லம்" (குடும்பத்தார், ஆண், வயது 27, 2006).

8886(8)

"வீதி அபிவிருத்தி அதிகார சபையில் இருந்தும் பிரதேச செயலகத்தில் இருந்தும் (காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழு) உத்தியோகத்தர்கள் வந்திருந்தார்கள். எனக்கு முன் ஐந்தாறு பேர்கள் இருந்தார்கள். நான் தனியாக இருந்த படியால் என்னால் ஒன்றுக்குமே சரியாய் பதில் சொல்லவோ யோசிக்கவோ முடியவில்லை. நான் தட்டாந்தனியாக நின்றனான். சரியாக நீதி மன்றத்தில் நிற்கிறது போல தான் இருந்தது" (வியாபார நிலைய உரிமையாளர், ஆண், வயது 75, 2006).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேலைகள் தொடங்கி முடிவடையும் வரை எங்களால் எங்களுடைய முழு பிரச்சினைகளையும் சொல்லக் கூடியதாக இருந்தது. அரசாங்கத்தின் உயர் மட்டத்து உத்தியோகத்தர்கள் கூட எங்கள் எல்லோருடைய பிரச்சினைகளும் கேட்டுக் கொண்டார்கள். அவர்களால் நெகிழ்ச்சியான போக்கை கடைபிடிக்க முடிந்தது. இரண்டு பக்கத்து கதையையும் கேட்க அவர்களால் முடிந்தது" (விவசாயி, ஆண், வயது 60, 2006).


"அந்தரமாக இருந்தபடியால் சொல்லவேண்டிய சிலதை சொல்ல நான் மறந்திட்டேன். வீடு இருந்த காணியில் ஒரு கிணறும் ஒரு கல் வேலியும் இருந்தது. அது பற்றி அந்த நேரத்தில் என்னால் சொல்ல முடியவில்லை. எனவே எனக்கு அவற்றிக்கு நஷ்டஈடு கிடைக்கவில்லை" (குடும்பத்தார், பெண், வயது 46, 2006).

உள்ளூராட்சி உத்தியோகத்தர்களினதும் அதேபோல தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்து உத்தியோகத்தர்களினதும் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவானது தீர்மாணங்களை எடுக்கும் விடயத்தில் ஒரு வசதி வழங்குனராக செயல்பட்டது என்பது பொது உடன்பாடாக உள்ளது. மக்கள் பிரதேச செயலாளரையும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதேச உத்தியோகத்தர்களையும் சந்தித்த எல்லா நேரத்திலும் காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழு அங்கத்தவர்கள் அவர்களுடன் சேர்ந்து இருந்தார்கள். அதன்போது புதியவர்களாக இருந்தவர்கள் மதிப்பீடு மற்றும் நில அளவை உத்தியோகத்தர்களாவர். உடன்பாடுகளை மேற்கொள்ள செல்லும் காலத்தை குறைக்க எடுத்த முயற்சிகளில் காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழு வெற்றிக்கண்டது. இயலுமானளவு குறுகிய காலத்திற்குள் சட்ட ரீதியான செயற்பாடுகளை அமுல்படுத்தக்கூடிய வழிகள் உள்ளன என்பதை காட்டுவதாக தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் அமுல்படுத்திய வழிகள் இருந்தன. இது உண்மையாகவே செயற்திட்டத்திற்கும் அதேபோல அதன் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கும் சிறப்பானதாக உள்ளது" (தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி திட்டதின் அலுவலக பணியாளரொருவர், 2006). வீடும் சொத்தும் இழந்த, விவசாய காணிகளை இழந்த, வணிக ரீதியான காணிகளை இழந்த மற்றும் விவசாயம் அல்லாத வேறு காணிகளை இழந்த என்றவகையில் எல்லாவகையான இழப்புகளுக்கும் காணி சுவீகரித்தல் சட்டத்தின் 17ஆம் பகுதியின் கீழ் நிர்ணையிக்கப்படும் நஷ்டயீட்டை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சராசரியாக இரு மடங்காக அதிகரிக்க காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவால் முடிந்தது.

**அட்டவணை ஒன்று: இழப்பை வகைப்படுத்தலின்படி கிடைத்த நட்டஈட்டின் சதவீதம்**




மூலாதாரம்: மீள்குடியேற்றல் அலுவலக கோப்புகள், வறுமை ஆராய்ச்சி நிலையத்து குடும்ப ஆராய்ச்சி, 2006.

சொத்துகளை மீள்பொருத்தல் மட்டம், குறிப்பாக வீடுகளை கட்டுதல் என்பது மீள் பொருத்தல் பெறுமதிக்காக செலுத்தப்பட்ட தொகையை அல்லது அதற்கு மிகவும் நெருங்கிய மட்டத்தை காட்டியது. மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகள் பொதுவாக இரு எதிரிடை குழுக்களுக்கும் நன்மைபயக்குவதாக இருந்தது. அதாவது குழுவால் பார்க்கப்பட்ட குடும்பங்கள் குறிப்பானதாக மிகவும் எளிதாக பாதிக்கும் நிலையில் (vulnerable) இருக்க வேண்டும் என்றும் தங்களுடைய பிரச்சினைகளை பற்றி திருப்தியடையும் வரை வாதிடக்கூடிய நிலையில் எல்லா தகவல்களையும் நன்றாக அறிந்துக் கொண்டவர்களாக குடும்ப அங்கத்தவர்கள் இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. "நான் விசாரித்துக்கொண்டுபோனபோது மற்றவர்களுக்கு நல்ல நட்டஈடு கிடைத்திருக்கிறது என்று அறிந்துக்கொள்ள முடிந்தது. அப்போது நான் கேட்டனான் ஏன் எனக்கு குறைந்ததாக தந்துள்ளது என்று. தொடக்கத்தில் ஒரு பேர்சஸ் காணித்துண்டுக்கு ஆயிரத்து முன்னூறு ரூபாய் என்றபடி தான் மதிப்பீடு செய்திருந்தது. தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தின் எல்லா உத்தியோகத்தர்களுக்கும், அதிகார சபைகளுக்கும் நான் தொடர்ச்சியாக எழுதிக்கொண்டு இருந்தேன். பிறகு அவர்கள் ஒரு பேர்சஸ் இரண்டாயிரம் ரூபாய் என்று தங்களுடைய மதிப்பீட்டை மாற்றினார்கள். நான் எனது முயற்சியை கைவிடாமல் தொடர்ச்சியாக முடியுமான அளவு எல்லா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகளுக்கும் முறைபாடு செய்துகொண்டே இருந்தேன். கடைசியாக அவர்கள் ஒரு பேர்சாஸிற்கு ஏழாயிரம் ரூபாய் என்றபடி வழங்க உடன்பட்டார்கள். நான் இந்த நட்டஈட்டை எற்றுக்கொள்ளவில்லையென்றால் நட்டஈட்டை இரத்து செய்யப்போவதாக எனக்கு ஒரு கடிதம் கிடைத்தபோது நான் அதனை ஏற்றுக் கொண்டேன்" (குடும்பத்தார், பெண், வயது 55, 2006).

## சில குறைபாடுகள்

காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழு ஒரு சனநாயக ரீதியான செயற்பாட்டை கொண்டிருந்தாலும் அதன் மதிப்பீடு அளவுகோல்கள் உட்பட்டதாக தீர்மாணம் எடுக்கும் சில பார்வைகள் தெளிவற்றதாக தான் இருந்தன. எனவே அதிருப்தியையும் பதற்றத்தையும் அது உருவாக்கியது. ஒரே மாதிரியான பிரச்சினைகளுக்கு வழங்கப்பட்ட தீர்ப்புகள் வேறுபட்டவையாக இருந்தன என்பது பரவலாக நிலவிய கருத்தாகும். "ஒரு நியாயமான தன்மை இருக்கவில்லை. ஒரு ஆளுக்கு ஒரு பேர்சஸ் காணித் துண்டுக்கு நாற்பதாயிரம் ரூபாய் என்றவகையில் வழங்கி அந்த காணிக்கு அடுத்ததாக இருந்த காணிக்கு ஒரு பேர்சஸ் ஏழாயிரம் ரூபாய் என்றபடி தான் தந்தார்கள். சிலருக்கு ஆகக்குறைந்த மட்டத்து நஷ்டயீடு மட்டுமே கிடைத்தது. ஒரு பேர்சஸ் காணி ஒன்பதாயிரம் ரூபாய் என்றபடி நஷ்டயீடு வழங்கப்பட்டதாக இருந்தாலும் பிரதான பாதைக்கு கிட்ட காணிக்காரார்களுக்கு ஒருபேர்சஸ் காணித்துண்டிற்கு இருபத்தையாயிரம் ரூபாய் என்றபடி வழங்கியிருந்தார்கள்" (விவசாயி, ஆண், வயது 64, 2006).

மீள்குடியேற்றல் நடைமுறைப்படுத்தல் திட்டத்தில் வருகின்ற உரிமையளித்தல் மற்றும் பெறுமதி (entitlement and value) என்ற திட்ட வரம்பிற்குள் எல்லா சமரச முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பிட்ட திட்ட வரம்பு பற்றிய தெளிவு மக்களிடம் மிகவும் குறைந்ததாகவே இருந்தன. இந்த செயல்திட்டத்தின் சகல அம்சங்களையும் கொண்ட தகவல்களை குடும்பங்களுடன் பகிர்ந்துக்கொள்ள உத்தியோகத்தர்கள் முயற்சிகளை மேற்கொண்டலும் அவை ஒழுங்காகவும் முறையானதாகவும் இசைவானதாகவும் இடம்பெறவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களும், அந்த தீர்மானங்களுக்கான அடித்தளங்களும் எழுத்து வடிவத்தில் உடனடியாக பகிர்ந்தளிக்கப்படவில்லை. கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்ட நஷ்டஈட்டுக்கான சம்மதத்தை வழங்கும் கையொப்பத்தை பாதிக்கப்பட்ட மக்களிடம் இருந்து பல பிரதிகளில் உடனடியாக எடுத்துக்கொண்டார்கள். ஆயினும் அடைந்த உடன்பாடுகளை குறிப்பிடுகின்ற முறையானதொரு ஆவணம் கூட்டத்தின் இறுதியில் வழங்கப்படவில்லை. அவ்வாறானதொன்று கேட்கப்பட்டபோது சட்டபூர்வமான அதிகாரத்தை வழங்காத கையெழுத்து தகவல்களால் திருப்தியடைய வேண்டியதாகியது. காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவின் இறுதி தீர்மானங்களை உள்ளடக்கிய ஆவணம் அதாவது கொடுப்பனவுகளின் விபரங்களையும் உள்ளடக்கியதான ஆவணம் காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவின் இறுதி கூட்டமும் முடிந்து நட்டஈட்டு கொடுப்பனவுகளையும் வழங்கி ஆறுமாதத்தில் இருந்து ஒரு வருடம் வரையான காலம் சென்ற பின்பே மக்களுக்கு கிடைத்தது. இது கூட்டத்தின்போது காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவின் தீர்மானங்களுடன் உடன்பட்டவர்களுக்கிடையேயும் கூட அதிருப்தியையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்தது. அதேநேரம் அது ஆலோசனை நடவடிக்கை யொன்றில் பங்குக்கொள்ளும்போது ஏற்படும் சாதகமான உணர்வுகளை சிதைக்கப்பதாகவும் அமைந்தது.

குவிமையமாக்கப்பட்ட விடயத்துடன் மக்கள் பங்குக்கொள்ளக்கூடிய சாத்தியபாடு குறைவாக இருந்ததன் காரணமாகவும், அதேபோன்று இந்த செயல்திட்டத்து பரப்பளவு காரணமாகவும், செயல்திட்டம் கொண்டிருந்த ஆலோசனை அணுகுமுறையானது பணியாளர் குழாமை பொறுத்தவரை பெரும் சவாலாக தான் அமைந்தது. இதற்கு மேலதிகமாக எல்லைகளை வகுத்தலிலும் உறுதியான தீர்மானங்களை எடுப்பதிலும் சிறிதளவிலான வழிகாட்டல் இருந்ததுடன் அது காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழு மிகவும் வெளிப்படையாக செயல்படுவதை இலகுவாக்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் உயர் தர குழு


விசேடமான சில பிரச்சினகளைப் பற்றி கவனம் செலுத்தும் முகமாக சில நிறுவன கட்டமைப்புகளையும் செயல்முறைகளையும் அபிவிருத்திச் செய்துக்கொண்டு இச்செயல் திட்டம் கள நிலை யதார்த்தங்களுக்கு மறுமொழி வழங்கும்போது கவனிக்கத்தக்கதான நெகிழ்ச்சித்தன்மையை காட்டியது. 2003ஆம் ஆண்டில் அதாவது மீள் குடியேற்றல் செயற்பாடுகளின் இடையோட்டத்தின் போதே காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் "உயர் தர" குழுவின் செயல்பாட்டினை அறிமுகப்படுத்தியது. பெரும்பாலான சமயங்களில் காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக அமைந்திருந்தாலும் கூட குடும்பங்களுக்கும், இக்குழுவிற்கும் இடையில் நட்டஈட்டுத் தொகையை பற்றிய உடன்பாடுக்கு வர முடியாத சந்தர்ப்பங்கள் இருந்தமையானது இவ்வாறு காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் "உயர் தர" குழுவை அறிமுகப்படுத்துவதற்கு காரணமாகியது. எனவே காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவின் தீர்மானங்களைப் பற்றி முறைபாடு செய்யக்கூடிய ஒரு பொது மன்றம் தேவையாக இருந்தது. இரண்டாம் அட்டவணையில் காணப்படுகின்றதைப் போன்று ஒரு நபர் உதவிநாடி மேற்கொள்ள வேண்டிய பன்முக மட்டத்தைக்கொண்ட முறைப்பாடுகள் இருந்தமையானது அதற்கான காரணமகும்.

தெற்குப் போக்குவரத்து அபிவிருத்தி செயல் திட்டத்திற்குள் நட்டஈடு சம்பந்தப்பட்ட மனக்குறைகள் சார்ந்த இறுதி மதிப்புரைகளுக்கு பொறுப்பாக இருந்த காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் உயர் தர குழுவானது தொடர்புடைய அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் மிக உயர் மட்டத்து உத்தியோகத்தர்களைக்கொண்டதாக அமைந்திருந்தது. துறைமுக மற்றும் நெடுஞ்சாலை அமைச்சுச் செயலாளர், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சுச் செயலாளர், பிரதான மதிப்பீட்டாளர், நில அளவை செயலாளர் நாயகம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகமையாளர் என்பவர்கள் இந்த காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் உயர் தர குழுவில் உள்ளடங்கியிருந்தார்கள். செயல்திட்ட உத்தியோகத்தர்களின் கருத்தின்படி 04% வீத குடும்பங்கள் காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் உயர் தர குழுவின் பொறிமுறையை நாடிச்சென்றுள்ளது. எவ்வாறாயினும் மிக அதிகமானதாக மாறுபாடுகளை உருவாக்காமல் இருப்பதில் இந்த குழு கவனமாக இருந்தது. அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை இரண்டு: நட்டஈடு சார்ந்ததாக முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளின் மட்டங்கள்.**




மூலம்: வறுமை ஆராய்ச்சி நிலையம் 2010

இதனிடம் முறைபாடுகளை மேற்கொண்ட எல்லோருக்கும் எப்பொழுதும் தீர்வு கிடைத்தன என்று கூற முடியாது. சிலரால் மட்டுமே ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு தீர்வை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

"காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவை சார்ந்த ஆக்கள் சொன்னதை ஏற்றுக்கொள்ள நான் விரும்பவில்லை. நான் மீண்டும் பண்டாரகம என்ற இடத்தில் அமைந்தள்ள அந்த காரியாலயத்திக்கு சென்றபோது காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் உயர் தர குழுவிடம் முறைபாடு செய்யுமாறு எனக்கு சொன்னார்கள். அமைச்சுச் செயலாளர் கூட இந்த காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் உயர் தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவில் இருந்தார் என்று தான் நான் நினைக்கின்றேன். தங்களால் தர கூடியதாக உள்ளது அவ்வளவு தான் என்றும் அதனை அதிகரிக்க கூடிய நிலைமையில் தாங்கள் இல்லையென்றும் அவர்கள் கூறினார்கள். எனவே நான் வெளியில் வந்துவிட்டேன்" (விவசாயி, ஆண், வயது 54, 2006).

"காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் உயர் தர குழுவுடன் பேசி கிடைத்த முடிவை பற்றி எனக்கு திருப்தி. நான் சொன்னதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதனால் தான் காணியை விட்டு செல்ல நான் சம்மதித்தேன்" (குடும்பத்தார், ஆண், வயது 58, 2006).

ஆயினும் காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் உயர் தர குழு கூட எவ்வாறு தீர்மானங்களை மேற்கொண்டது என்பது பற்றிய பகிரங்கமான விளக்கங்களை கொண்டிருக்கவில்லை. இக்குழுவிடம் சென்ற மக்கள் சிலர் கூறியதன்படி நீதி மன்றங்களின் வழியாக நீண்ட நாட்களாக நீடித்து செல்லும் நடவடிக்கைகளுக்கு செல்வதை விட இக்குழுவின் தீர்மானங்களை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். மேலும் அவர்கள் பரிகாரம் கிடைக்காமல் போகும் அபாயத்தை எதிர்கொள்ள விரும்பாமையும், நட்டஈடு குறைந்துப்போகும் நிலைமைக்கு முகங்கொடுக்க விரும்பாமையும், அவர்கள் தங்களை தங்களாலே பிரதிநிதித்துவம் செய்ய இயலாது என்று உணர்த்தியமையும், நீதிமன்ற வழக்கொன்று தொடுத்தல் இயலாமை இதற்கு காரணங்களாக இருக்கலாம்.

## குறை நிவர்த்தி குழுக்கள்

இந்த செயல்திட்டத்தால் அமைக்கப்பட்ட முறையானத்தன்மைகள் குறைவான குறை நிவர்த்தி குழுக்கள் (Grievance redress committees) குறைந்தளவில் முறைசார் தன்மைக்கொண்டவையாக இருந்தன. எனவே அவற்றிக்கு மேலதிகமாக மாவட்ட மட்டத்தில் அரை – கட்டமைப்பு அமைப்புகளும் (semi-structured bodies) இருந்தன. சமயோசிதமாகவும் மிக குறைந்த செலவில் தரமானதாகவும் முறைபாடுகளை பற்றி நடவடிக்கைகள் எடுக்கக்கூடியதும், செயல்திட்டத்தின் ஆயுட்காலம் முழுவதிலும் செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு நிறுவனமாகும் என்பதற்கு உத்தரவாதமளிக்கும் நோக்கில் இந்த குறை நிவர்த்தி குழுக்கள் தாபிக்கப்பட்டன. குறை நிவர்த்தி குழுக்கள் 2002 ஆம் ஆண்டில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டபோது மக்கள் அவை பற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் அரிதாகவே அறிந்துவைத்திருந்தார்கள். எனவே 2005 ஆம் ஆண்டில் இவை மறுகட்டமைக்கப்பட்டன. அதன்படி அவை மக்களுக்கு மிகவும் பரிச்சயமான இடமொன்றாகிய பிரதேச செயலகங்களில் இயங்கத் தொடங்கின. இவ்வாறு 22 குறை நிவர்த்தி குழுக்கள் இயங்கின. தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்தின் பிரதேச உத்தியோகத்தர்கள், சமுதாய மட்டத்து மத்தியஸ்த்தர் நிறுவனமாகிய இணக்க சபை, ஒரு அரசசாரா நிறுவன பிரதிநிதி மற்றும் ஒரு சமுதாயத்து தலைவர் என்பவர்கள் இந்த குறை நிவர்த்தி குழு அங்கத்தவர்களாக இருந்தார்கள்.

இக்குழுவின் விசாரணைகள் இடம்பெறும்போது கிராம சேவகர், தெற்குபோக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போன்ற எந்தவொரு அரசு அல்லது அரசு சாரா உத்தியோகத்தரையும் அதில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளும் உரிமை இக்குழுவிற்கு இருந்தது.

அரசு பொது நடைமுறைப்படுத்தல் செயற்பாட்டுடன் சமாந்தரமான கட்டமைப்புகளின் வழியாக நடைமுறைப்படுத்தப்பட்ட தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்திற்கு குறைபாடுகளை பற்றி கவனம் செலுத்துகின்ற நிபுனத்துவங்கொண்ட நிறுவனம் தேவையாக இருந்தது. காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழு போன்ற செயல்திட்ட நடைமுறைப்படுத்தல் காலப்பிரிவில் மட்டுமே இயங்கிய செயல்திட்டத்து ஏனைய பிரத்தியேகமான நிறுவனங்களைப்போல் இல்லாமல் இந்த குறை நிவர்த்தி குழுக்கள் முழு செயல்திட்ட கால எல்லைக்குள்ளேயும் இயங்குகின்றவையாக வடிவமைக்கப்பட்டதுடன் நஷ்டயீடு மதிப்பிடுதல் சார்ந்தாக இல்லாமல ஏனைய எல்லாவகையான மனக்குறைகளை பற்றியும் கவனம் செலுத்துவதை நோக்கமாகக்கொண்டும் வடிவமைக்கப்பட்டன.

தங்களுடைய சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதை கட்டாயப்படுத்துதலிலும் கண்காணிப்பதிலும் காட்டிய பலவீனம் இந்த குறை நிவர்த்தி குழுக்களின் பிரதானமான பலவீனங்களில் ஒன்றாக இருந்தது. ஒரு சிபார்சுடன் குறைநிவர்த்தி குழுவின் செயல்பாடு முடிவுக்கு வருவதையும், ஒரு மூன்றாம் தரப்பினால் அதனை நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாக இருந்தமையும் பிரச்சினைகளை உருவாக்கின. குறைநிவர்த்தி குழு கலந்துரையாடலின் போது எடுத்த தீர்மானங்களை அமுலாக்குவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான நிறுவனங்கள், தனிநபர்கள் செயல்பட்டதுடன் அது இறுதி தீர்மானமாகவும் இருந்தது. ஆயினும் குறைநிவர்த்தி குழு அதன் சிபார்சுகளை கட்டாயப்படுத்துவதற்கு தேவையான நேரடியான அதிகாரத்தை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே கொண்டிருந்தது.

"குறை நிவர்த்தி குழுவிடம் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு நாங்கள் தீர்வுகளை முன்மொழிந்தாலும் அந்த தீர்மானங்கள் அமுல்படுத்தப்பட்டதா இல்லையா என்பது பற்றி எங்களுக்குத் தெரியாது. அந்த புகார்கள் மீண்டும் வந்ததாக இருந்தால், மீண்டும் மீண்டும் முறைபாடு செய்யப்படுவதாக இருந்தால் அதன் அர்த்தம் அந்த பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை என்பது தான். பிரச்சினை அது அல்ல. முறைபாடுகள் மீண்டும் கிடைக்காமை என்பது அந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டது என்பதும் அல்ல" (குறைநிவர்த்திக் குழுத் தலைவர், கரண்தெனிய, 2006).

## உரித்துரிமைகள்

அதிவேக நெடுஞ்சாலை காரணமாக தமது வீடுகளை இழந்த குடும்பங்களிடம் இரு தெரிவுகள் முன்வைக்கப்பட்டன. மீள் குடியேற்றல் தளங்களிலோ அல்லது அவர்களால் தெரிவுச்செய்துக்கொள்ளப்படும் இடங்களிலோ வசிக்கச் செல்லல் என்பது ஒரு தெரிவாகும். காணி சுவீகரிப்பு சட்டத்திற்கு அப்பால் சென்று தங்களுடைய காணிகளுக்கு ஆவணமய உரித்துரிமைகள் இல்லாதவர்களுக்கும், கைப்பற்றிக்கொண்டிருந்த காணிகள் தங்களுடைய சொந்த காணிகளாக இல்லாமல் இருந்தவர்களுக்கும் நஷ்டயீடு வழங்கப்பட்டமையானது இரண்டாவது தெரிவாகும். அவர்களுக்கு மீள்குடியேற்றல் தளங்களில் மாற்று காணித்துண்டுகள் கிடைக்கப்பெற்றன. பணம் அல்லாத நட்டஈடுகளில் "காணிக்காக காணி" என்ற கொள்கையானது குறிப்பாகவே காணிகளை வாங்கி குடியேற முடியாது வளங்களும் இயல்மையும் குறைந்தவர்களாக இருந்த மிகவும் வறிய குடும்பங்களுக்கு குறிப்பாக பிரயோசனமானதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது அட்டவணை: மாதிரி ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட குடும்பங்களினது காணி உரிமைத்துவமும் பால்நிலையும்

| உரிமைத்துவத்தின் வகை | மதிப்பிடப்பட்ட சனத்தொகை வீதம் | ஆண | பெண் |
|---|---|---|---|
| தனி உரிமை | 65.3% | 69.1% | 30.9% |
| பங்கு உரிமை | 19.3% | 72.3% | 27.7% |
| பங்கு விளைச்சல் | 1.8% | 66.7% | 33.3% |
| குத்தகை | 1.5% | 100.0% | 0.0% |
| தனியார் காணியில் அத்துமீறிய வசித்தல் | 4.5% | 73.3% | 26.7% |
| அரசுக் காணியில் அத்துமீறிய வசித்தல் | 5.6% | 63.2% | 36.8% |

மூலாதாரம்ஹ வறுமை ஆராய்ச்சி நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட மாதிரி ஆராய்ச்சி, 2006

மீள்குடியேற்றல் அமுலாக்கல் செயல் திட்டத்தின் சமத்துவம் மீதான பொறுப்பினை சுட்டிக்காட்டுகின்ற குறிப்பிடத்தக்கதொரு குறியீடாக காணியற்ற நபர்களுக்கான பரிகாரம் இருந்தது. தங்களுடைய வீடுகளுக்கான உரிமைப்பத்திரங்களை கொண்டிருந்தவர்களைப் போலவே இல்லாதவர்களும் மீள் குடியேற்றல் தளமொன்றில் ஒரு வீட்டுக்காணியை பெறுவதற்கு தகுதியானவர்களானார்கள். உரிமைபத்திரம்கொண்டிருந்தவர் 20பேர்சஸ் காணித்துண்டுற்கு தகுதிக்கொண்டவரானார். அவருக்கான முழு நஷ்டயீட்டில் இருந்து அதன் விலை குறைக்கப்பட்டது. உரிமைபத்திரம் இல்லாதவராக இருந்தவர்கள் 10 பேர்சஸ் காணித்துண்டுற்கு உரிமையுடையவரானார்கள் என்பதுடன் அவர் மிகவும் கடுமையாக பலவீ—னமான குடும்பத்தை சார்ந்தவராக இருந்த சந்தர்ப்பங்களில் அவை அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

மீளவும் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய பொருட்களுக்காகவோ அல்லது பொருட்களின் தேய்மானத்திற்காகவோ என்று குறைக்காமல் பொருட்களையும் உழைப்பையும் முழுமையாகவே புதிய இடத்தில் தாபித்துக்கொள்வதற்கான செலவுக்காக வீட்டு உரிமையாளர்கள் பண நட்டஈடு பெறுவதற்கு உரிமையுடையவர்களானார்கள். வீட்டை இழந்தவர்களுக்கான நட்டஈடு பெறுமதி தீர்மாணிக்கப்படும்போது உரிமைத்துவத்தின் வகை, சுவீகரிக்கப்பட்ட காணியின் அளவு, ஒரு அபிவிருத்தியடைந்த பிரதேசத்திற்கான தூரம் மற்றும் வீட்டின் தரம் என்பன கவனத்தில்கொள்ளப்பட்டன. தற்காலிக வாடகைக்கொடுப்பனவு, உடன்பட்ட திகதியில் இடத்தைவிட்டு செல்கின்றமைக்காக வழங்கப்படுகின்ற நட்டஈட்டின் 25% என்ற தூண்டுதல் கொடுப்பனவு என்ற வகையான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய கொடுப்பனவுகளும் மற்றும் இடமாற்றத்திற்கான ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுப்பனவு என்றவகையிலான ஏனைய கொடுப்பனவுகளும் பெறுவதற்கு பாதையமைப்பு காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் உரிமையுள்ளவர்களானார்கள். மீள்குடியேற்றல் தளங்களுக்கு வெளியில் குடியேறிய மக்கள் உபயோகங்களைப் பெறுவதைப் போலவே ஒரு மேலதி—கமான சுயமாக புதிய இடத்தில் குடியேறுவதற்கான கொடுப்பனவு ஒன்றினையும் பெற்றுக்கொண்டார்கள்.

வாடகை வசிப்பிடங்களில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் ஒரு தற்காலிக வாடகை கொடுப்பனவுக்கும், இடமாற்றத்திற்கான கொடுப்பனவுக்கும் மட்டுமே உரிமையுடையவர்களாக இருந்தார்கள். எவ்வாறாயினும் நடைமுறையில் அவர்களும் கூட மின்சாரம், தண்ணீர் போன்ற சேவைகளும் சுயமாக புதிய இடத்தில் குடியேறுவதற்கான கொடுப்பனவும் என்றவகையில் காணி வீடு உரிமைப்பத்திரங்கள் உள்ளவர்களுக்கு கிடைக்கும் எல்லா இடப்பெயர்வுக் கொடுப்பனவுகளையும் பெறுவதற்கு தகுதியானவர்களாகவே கவனத்தில் கொள்ளப்பட்டார்கள். அவர்களுக்குள் சிலர் ஏனைய கொடுப்பனவுகளுடன் ஒரு காணித்துண்டையும் கொள்வனவு செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள்.

"பத்து வருடமாக நாங்கள் .....வுடைய வீட்டில் தான் வாடகைக்கு இருந்தோம். ஒரு மாத வாடகை நூறு ரூபாய். ஒரு காணித்துண்டை விலைக்கு வாங்கக்கூடிய பண வசதி எங்களிடம் இருக்கவில்லை. முந்தி எங்களுக்கென ஒரு காணித்துண்டு இருக்கவில்லை. இப்போது எங்களுக்கு சொந்தமாக 30 பேர்சஸ் காணி இருக்கிறது (தெற்குப் போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்தால் வழங்கப்பட்ட நஷ்ஈடு பணத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஒன்று). எங்களுக்கு ...... என்ற இடத்தில் ஒரு காணித்துண்டு தந்தது தான். அது கன தூரம் என்றபடியால் நாங்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை" (ஒரு குடும்பத்தார், ஆண், வயது 43, 2006).

## விவசாயக் காணிகள்

இந்த செயல்திட்டம் விவசாயக் காணிகளை இழந்த குடும்பங்களுக்கு வழங்க வேண்டிய நட்டஈட்டில் பல தோற்றங்களைக்கொண்டதாக வகுக்கப்பட்டிருந்தது. காணியை முழுமையாகவே வேறொரு இடத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வனவுக்கான செலவு, பயிர் இழப்பிற்கான சந்தை பெறுமதி, எதிர்காலத்தில் இழந்துப்போகும் உற்பத்திக்கான பண நட்டஈடு மற்றும் சீவனோபாயத்தை மீள் அமைத்துக்கொள்வதற்கான மாணியமாக பதினைய—ாயிரம் ரூபாய் பணம் என்ற வகையில் அவை அமைந்திருந்தன. ஆயினும் அதிகமான கொடுப்பனவுகள் சீவனோபாயங்களை கவனத்தில்கொள்ளாமல் காணி இழந்தமைக்கான நட்டஈடு என்று பதிவு செய்யப்பட்டுள்ளன. பயிர்கள் இழப்பு, மரங்கள் இழப்பு, வருங்கால உற்பத்தி பெறுமதி மற்றும் சீவனோபாயங்களை மீள் அமைத்துக்கொள்ளல் என்ற வகையில் தனித்தனியான கொடுப்பனவுகளாக இல்லாமல் காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவால் தீர்மானிக்கப்பட்டதான விவசாய காணிகளின் இழப்பிற்கான மொத்த பண நட்டஈடாக இவற்றினை கவனத்தில் கொள்கின்றதாக திட்ட உத்தியோகத்தர்கள் கூறினார்கள்.


எழுத்துமூலமான வழிகாட்டல்கள் இருக்கவில்லை என்றாலும் விவசாய காணிகளுக்கான நட்டஈடு வழங்கப்பட்ட முறையில் நான்கு வகையான தன்மைகள் இருந்தன என்று கூறலாம். அதாவதுஹ

1) உடைமைத்துவ வகை. (தனி உடைமைத்துவம் / தனி உடைமையாக இல்லாத)
2) பயிர்வகை (நெல் / நெல் அல்லாத)
3) சுவீகரிக்கப்பட்ட அளவு
4) அபிவிருத்தியடைந்த பிரதேசத்திற்கு அண்மித்த தன்மை என்பனவாகும்.

இவற்றிக்கு மேலதிகமாக நிலத்துண்டின் மேற்பரப்பு பண்புகள் (சாய்வான நிலத்துண்டு, நிலத்தின் செழிப்பு) போலவே குடும்பங்களின் பண்புகளையும் (ஏற்பட்ட இழப்புகளின் கடுமையானத்தன்மை மற்றும் காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவிடம் ஒரு முறைப்பாட்டை முன்வைக்கக்கூடிய ஆற்றல் போன்றவையும்) உத்தியோகத்தர்கள் வித்தியாசங்களை பற்றி விளக்கப்படுத்தலின் போது மேலதிகமான அளவுகோல்களாக குறிப்பிட்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரு மூன்று: தெரிவுசெய்யப்பட்ட சில பிரதேச செயலகப் பிரிவுகளில் விவசாய சொத்துகளுக்காக வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையின் வேறுபாடுகள்.**




மூலாதாரம்: மீள்குடியேற்றல் அலுவலக கோவைகள், குடும்ப ஆராய்ச்சி, 2006

சுவீகரிக்கப்பட்ட விவசாய காணிகளுக்காக ஒரு பேர்சஸ் காணிக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையானது கணிசமான அளவு மாறுபாட்டைக்கொண்டதாக இருந்தமையை மேலுள்ள அட்டவணை காட்டுகின்றது. கொட்டாவ என்ற இடத்தில் இருந்து மாத்தறை வரையிலான அதிவேக நெடுஞ்சாலையின் முழு நீளத்திற்கும் அதே மாதிரியானத்தன்மையை காணக்கூடியதாக இருந்தது.

காணி சுவீகரிப்பு சட்டத்தின் 17ஆம் பகுதியின் கீழ் நட்டஈட்டிற்கும் காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவின் கீழ் நட்டஈட்டிற்கும் இடையிலான நட்டஈட்டுத் தொகை சார்ந்த இந்த மாறுபாட்டை பொதுவாக காணக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு நிலையையும் தனித்தனியாக எடுத்து அணுகும் போதியளவு நெகிழ்ச்சித்தன்மை கொண்டதான அமுலாக்கப்படுதலின்போது இது எதிர்பார்க்கவேண்டியதொன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்டஈட்டுக்கான வழியலகுகள் (parameters) ஒளிவுமறைவற்றதாகவும் (transparent) பொது மக்களுடனான அகன்ற பங்கு கொள்ளலைக்கொண்டதாகவும் இருக்கும்போது இது எதிர்பார்க்கக்கூடியதொன்று தான். இடம்பெயர்ந்த மக்களுக்கிடையில் நிலவிய அதிருப்திக்கு காரணமாகிய மிகவும் பொதுவான காரணங்களுக்குள் இதுவும் ஒன்றாகும்.

## வியாபாரங்கள்

பதிவுசெய்யப்பட்ட முறைமையான தொழில்முயற்சிகள் (enterprises) போன்றே முறைசாரா தொழில்முயற்சிகளும் வேறு அனைத்து தொழில்முயற்சிகளும் இந்த செயல் திட்ட அமுலாக்கல் திட்டத்தின் கீழ் நட்டஈடு பெறுவதற்கு தகுதியுடையதாகின. அவற்றிக்குள் மளிகைக்கடைகள், கட்டடப்பொருட்கள் விற்பனை நிலையங்கள், வெதுப்பகங்கள், அரிசி ஆலைகள் மற்றும் எண்ணெய் ஆலைகள், செங்கல் மற்றும் தும்புத் தொழில் பட்டறைகள் மற்றும் மோட்டார் வண்டி சுத்திகரிப்பு நிலையங்கள் என்பன உள்ளடங்கின. அவை ஒரேவகையான நஷ்டஈட்டுத் தொகைகளுக்கும் குடும்பங்களுக்கும் கிடைத்தது போன்று புதிய இடத்தில் மீள் தாபித்துக்கொள்வதற்கான கொடுப்பனவுக்கும் உரிமை கொண்டவையாகின. இந்த பதிவுசெய்யப்பட்ட வியாபாரங்களை மீள் இயங்க வைப்பத்தில் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கப்பட்டவையாக இருந்தபோதும் இனிவரும் மூன்று வருடகால வருமானத்தை நட்டஈடாக பெறுவதற்கு தகுதியுடையதாகின. பதிவுச் செய்யப்படாத வியாபாரங்கள் என்ற வகையை எடுத்துக்கொண்டால் சிறியளவிலான முறைசாரா வியாபாரத்திற்கு இழந்துப்போகும் வியாபார வருமானத்தை ஒரு மாதத்திற்கு பதினையாயிரம் ரூபாய் என்ற வகையில் ஆறுமாத காலத்திற்காக தொண்ணூராயிரம் ரூபாய் என்றளவில் நஷ்டஈடு வழங்கப்பட்டது. பதிவுசெய்யப்படாத ஒரு பெரும் வியாபாரத்திற்கு வழங்கப்பட்ட வியாபார வருமான இழப்பு நட்டஈட்டுத்தொகையானது குறிப்பிட்ட வியாபாரத்தின் மதிப்பீட்டின் மீது தங்கியிருந்ததுடன் வியாபாரத்தின் தன்மை மற்றும் சுவீகரிக்கப்பட்டதன் காரணமாக நேர்ந்த இழப்பு என்பனவும் அதன்போது கவனத்தில்கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்குக்கொள்ளும் உரிமையும் பிரதிநிதித்துவத்தின் அவசியமும்

அதிவேக நெடுஞ்சாலைக்காக காணிகள் சுவீகரிக்கப்பட்டதன் விளைவாக நேரடியாக பாதிக்கப்பட்ட குடும்ப அங்கத்தவர்களின் தொகையின் 52%ற்கு அதிகமானவர்கள் பெண்கள் ஆவார்கள். ஆயினும் அவர்கள் பிரதானமாகவே ஆண்களின் தலைமைத்துவத்தின் கீழ் வாழ்பவர்களாவர். பால்நிலையை கருத்திற்கொள்ளாமல் சிறந்த பங்குக்கொள்ளலையே செயல்திட்ட பணியாளர்கள் முக்கியப்படுத்தினார்கள். "என்னுடைய கணவன் காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவின் கூட்டங்களுக்கு சென்றபோது காணியின் உரிமையாளர் நீங்கள் அல்ல உங்களுடைய மனைவி என்றபடியால், அவள் தான் இந்த கூட்டத்தில் பங்குக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்கள்" (குடும்பத்தார், பெண், வயது 64, 2006). ஆயினும் தாங்கள் பெண்கள் என்ற காரணத்தால் பெண் குடும்பத்தார்களை கரிசனையுடன் கவனத்தில்கொள்ளவில்லை என்பதற்கான சில உதாரணங்களும் உள்ளன. "காணி சுவீகரிப்பு இடம்பெற்றபோது என்னுடைய கணவன் வெளிநாட்டில் இருந்தார். அவர் வரும்வரை நான் தான் அந்த வேலைகளில் ஈடுபட்டேன். நான் ஒரு பெண் என்றபடியால் அவர்கள் எனக்கு குறைவான நட்டஈடு தான் தந்துள்ளார்கள் என்பது தான் என்னுடைய கணிப்பு" (குடும்பத்தார், பெண், வயது 39, 2006).

ஆண்கள் போன்றே பெண்களும் காணி உரிமைக்கொண்டவர்களாக இருந்தாலும் செயல் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களாக அடையாளங் காணப்பட்டவர்களுக்குள் பெண்களை விட ஆண்களே அதிகமாக இருந்தார்கள். சொத்துகள் ஆண் நபர்களின் பெயரில் உள்ளமை அல்லது ஆண் மற்றும் பெண் இணையுரிமைத்துவத்தை கொண்ட சொத்துகள் ஆண் உரிமையாளரின் பெயரில் பதிவு செய்யப்படுவதை இப்பிரதேசங்களில் நிலவுகின்ற ஒரு பாரம்பரியமாகவே காணலாம். எனவே செயல்திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களாக உத்தியோகபூர்வமாக அடையாளங்காணப்பட்ட மக்களின் 30% மட்டுமே பெண்களாக இருந்தார்கள். விவசாயம், வீடு மற்றும் விவசாயமல்லாத சொத்துகள் எனபனவற்றினை இழந்தவர்கள் என்ற வகைப்படுத்தலை சார்ந்தாக நோக்கும்போது இப்பகுதியினர் உள்ளடங்குகின்றனர். வர்த்தக ரீதியான சொத்துகள் என்ற வகையில் பார்க்கும்போது இந்த சதவீதம் மேலும் தீவிரமாக வீழ்ச்சியடைந்து 07% வீதம் மட்டுமே பெண்களின் பெயர்களைக்கொண்டதாக இருந்தது. வீட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தளமாகக்கொண்ட ஒரு சிறிய தொழில் முயற்சியானது மிகவும் அரிதாகவே ஒரு வர்த்தக சொத்தாக அடையாளங்காணப்படுகிறது. எனவே இது நிகழக்கூடியதொன்று தான். எவ்வாறாயினும் ஆண்களால் மேற்கொண்டுவரப்பட்ட அவ்வாறான வருமான உற்பத்தி செயற்பாடுகளை வர்த்தக சொத்தாக அடையாளங்காணப்பட்டமைக்கு உதாரணங்கள் உள்ளன.

பிரதான குடும்ப அங்கத்தவராக அடையாளங்காணப்பட்டவர்களாக இருந்தாலும் இல்லாவிடிலும் பல பெண்கள் சமரச பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டார்கள். "பல முடிவுகளுடன் தான் நாங்கள் அங்கு சென்றோம். குறிப்பிட்ட உத்தியோகத்தர் வரும்வரை காத்திருக்க சொன்ன போது நாங்கள் அவர் வரும்வரை காத்திருந்தோம். எல்லா அலுவல்களும் முடிந்து நாங்கள் நட்டஈட்டை பெற்றக்கொண்ட போது பிரதான காரியாலயத்தில் வைத்து வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்களுக்கு நன்றி சொன்னோம். திரு....வுடன், திரு....வுடன் நாங்கள் கனநேரம் கதைத்துள்ளோம். அவர்கள் நல்லா உதவி செய்தார்கள். நல்ல ஒத்துழைப்பை வழங்கினார்கள். நாங்கள் இரண்டு பேர் (தாயும் மகளும்) தான் வீதி அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்திற்குப் போனோம். காகிதக்கட்டுகளையும் தூக்கிக்கொண்டு தன்னால் ஏறி இறங்கி கஷ்டப்பட முடியாது என்று அப்பா கூறினார். இந்த வேலைகள் முடிந்த பின்பே நான் வேலைக்குப் போக தொடங்கினேன்"(குடும்பத்தார்கள், பெண்கள், வயது 58 மற்றும் 26, 2006).

## புதிய இடங்கள், புதிய வீடுகள்

14% ஆன காணித்துண்டுகள் பாதைக்காக அகற்றப்பட்ட வீடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. அத்துடன் இழந்த வீடுகளுக்கும், வீட்டுடன் கூடிய காணிகளுக்கும் பண ரீதியான நட்டஈடும் புதிய இடத்தில் வீட்டை கட்டுவதற்கான காணியும் என்ற வகையில் நட்டஈடுகளும் வழங்கப்பட்டன. இடம்பெயாந்த குடும்பங்களின் 60% வீதம் அவர்களுடைய சொந்த காணிகளில் அல்லது அவர்களால் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட காணிகளில் குடியேறுவதை தேர்ந்தெடுத்தக்கொண்டது. ஒரு நடைமுறைச் சார்ந்த மாற்றீடோ அல்லது ஒரு காணியை கொள்வனவு செய்யக்கூடிய பண வசதியோ இல்லாதவர்களாக இருந்த இடம்பெயர்ந்தோர் தொகையின் மிகுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40% வீதமான பகுதியினருடைய தெரிவானது செயல் திட்டத்தால் வழங்கப்பட்ட 32 மீள் குடியேற்றல் தளங்கள் ஆகும். “எங்களுக்கு சொந்தமாக ஒரு காணி விலைக்கு வாங்கும் அளவுக்கு காசு இல்லாதபடியால் நாங்கள் அப்படி செய்தோம். ஒரு இட்சம் ரூபாய் காசு கொடுத்து காணி வாங்க யாரால் முடியும்? எங்களுக்கு நட்டஈடு கிடைத்தவுடனே சனம் தங்களுடைய காணிகளின் விலையை ஏற்றினார்கள். இவர்களிடம் பணம் கிடக்கிறது, எனவே எடுப்பார்கள் என்று தான் அவங்களுடைய எண்ணம். நாங்கள் எல்லாத்தையும் ஆரம்பத்தில் இருந்து தான் தொடக்க வேண்டும் என்று அவங்கள் மறந்திட்டார்கள்” (குழுமைய கலந்துரையாடல், தொடங்கொட, 2006).

அபிவிருத்திச் செய்யப்பட்ட காணியொன்றினை பெறுதல் என்பது இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான ஒரு உரிமையாக மீள் குடியேற்றல் அமுலாக்கல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டதாக இருந்த காரணத்தால் மீள்குடியேற்றல்தளங்கள் உருவாக்கப்பட்டன.


தனிநபர்களாக காணிகளை கொள்வனவு செய்தல் என்பது செலவு அதிகம் என்ற காரணத்தாலும் காணிகள் மட்டுப்படுத்தப்பட்டளவிலே உள்ளன என்ற காரணத்தாலும் இடம்பெயர்ந்த மக்கள் சிக்கலான நிலைமைக்கு முகங்கொடுத்திருந்தார்கள். இந்த சிக்கலில் இருந்து விடுதலைப்பெறுவதற்கு உதவும் நோக்கில் வீதி அபிவிருத்தி அதிகார சபை பெரியளவிலான காணிகளை பெறுவதற்கு காணி உரிமையாளர்களுடன் (அரசு அல்லது தனியார்) பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்கள். இது குறிப்பிட்ட சமுதயாங்களுக்கு சமூக பிளவுகள் ஏற்படுவதை தவிர்த்துக்கொண்டு தங்களுடைய சொந்த இடத்திற்கு சமீபமானதொரு இடத்தில் எல்லோரும் சேர்ந்து மீள் குடியேற உதவியது.

செயல்திட்ட வரைபின்படி மீள்குடியேற்ற தளங்கள் தெரிவுச்செய்யப்படும் போது குறிப்பிட்ட சமுதாயத்துடன் கூடிப்பேசி ஆலோசனைகள் மேற்கொண்டு செயல்பட்டதுடன் பாதிக்கப்பட்ட கிராமங்களில் இருந்து ஒரு கிலோமீற்றருக்கு குறைவான தொலைவிலும், பிரதான நெடுஞ்சாலையில் இருந்தும் பாடசாலைகளில் இருந்தும் ஒரு கிலோ மீற்றருக்கு குறைவான தொலைவிலும் ஒரு நகரம் மற்றும் மருத்துவ வசதிகள் கொண்ட இடத்தில் இருந்து ஆறு கிலோ மீற்றருக்கு குறைவான தொலைவிலும் மீள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றல் தளங்கள் தெரிவுச்செய்யப்பட்டன. இந்த மீள் குடியேற்ற தளமானது தண்ணீர், வடிகால், மின்சாரம், உட்புற பாதைகள் என்பனவற்றினைக்கொண்டதாக அபிவிருத்திச் செய்யப்பட்டதொன்றாக இருந்தது. மீள்குடியேற்ற தளங்கள் தெரிவு செய்யப்பட்டபோது அதி உச்சக்கட்ட ஆலோசனைகள் பெறப்பட்டிருந்தாலும் இறுதி முடிவானது எப்பொழுதும் உடன்பாடுகளின் வழியாகவே தான் பெறப்பட்டதென்பதில்லை. புனித எட்வார்ட் என்ற பெயரைக்கொண்ட மீள்குடியேற்ற தளத்தைப்போன்ற சில தளங்களின் இறுதிமுடிவின் போது குடும்பங்கள் பலமான நிலையில் இருந்தன. ஆயினும் தியகம போன்ற மீள்குடியேற்றல் தளங்களை பொறுத்தவரை அது பிரதானமாகவே வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தீர்மானமாக தான் இருந்தது.

**உரு நான்கு: "மீள்குடியேற்ற தளம் யாரால் தெரிவு செய்யப்பட்டது?" என்பது பற்றிய குடும்பங்களின் கருத்து.**




மூலாதாரம்: குடும்ப ஆராய்ச்சி, 2006

மீள்குடியேற்றல் அமுலாக்கல் திட்டத்தால் நிர்ணையிக்கப்பட்டதான தேவைகளும் மக்களின் தெரிவும் காரணமாக மக்களுடைய சொந்த வீடுகளில் இருந்தும் கிராமங்களில் இருந்தும் இயலுமானளவு நெருங்கியதாக மீள்குடியேற்ற தளங்கள் அமைக்கப்பட்டன. அதன் விளைவாக கட்டியமைக்கப்படும் நெடுஞ்சாலையில் இருந்து இருநூறு மீற்றர் அரைவிட்டத்திற்குள் அமையும்படி மீள்குடியேற்ற தளங்களில் 40% பகுதிகள் அமைந்தன. ஒரு கட்டட வேலைகள் நடந்துக்கொண்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளத்திற்கு அருகாமையில் வசிக்கும் போது ஏற்படும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை இதன்காரணமாக ஏற்பட்டது. ஆயினும் அதிர்வுகள், கட்டமைப்புகளில் வெடிப்புகள் ஏற்படுதல், தூசு பொன்ற அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பது எவ்வாறு என்பது பற்றி போதுமானதாக திட்டமிடல் இருக்கவில்லை. "புதிய தளங்களில் மீள் குடியேறிய மக்களின் தேவைகளைப் பற்றியும் வேண்டுகோல்களை பற்றியும் நாங்கள் தீவிரமாக கவனம் செலுத்தினோம். அந்த மக்களுக்கு சாதகமான பதில்களை தான் நாங்கள் அளித்தோம். உதாரணமாக காணித்துண்டுகளை பங்கிடுதலின் போது நாங்கள் எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்கு அவர்களுடன் உடன்பட்டோம். அது ஒரு நல்ல விடயம் என்று தான் நான் நினைக்கின்றேன். ஆயினும் சில பிரச்சினைகள் இருக்கதான் செய்கின்றன. கட்டட வேலைகள் காரணமாக ஏற்பட்ட மாசுபடுதல் காரணமாகவும் டையினமைட் போட்டு மேற்கொள்ளப்பட்ட தகர்த்தல் காரணமாகவும் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். நாங்கள் இந்த விடயம் தொடர்பாக அதிக கவனம் செலுத்தவது அவசியம். நாங்கள் மக்களுக்கு பதிலளிக்க வேண்டும். ஆயினும் இந்த விடயங்களை பற்றி கவனம் செலுத்தப்படுகின்றதாக ஒரு நல்ல திட்டம் எங்களிடம் இருக்க வேண்டும்"(மீள் குடியேற்றல் உத்தியோகத்தர், தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி திட்ட பிராந்திய காரியாலயம், காலி, 2006).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது வரைபடம்: சாலையின் வழியுரிமையுடன் நீளமாக செல்லும் மீள்குடியேற்றத் தளங்களின் அமைவிடம்




மூலம்: வறுமை ஆராய்ச்சி நிலையம் 2006, மீள்குடியேற்றங்கள் அமைந்துள்ள பிரதேச புஜளு வரைபடததிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மீள்குடியேற்ற தள காணித்துண்டுகளை வழங்கும்போது எல்லா தளங்களிலும் குலுக்குச் சீட்டு முறைமை (lottery system) பயன்படுத்தப்பட்டது. தொழில்முயற்சிகளுக்கு சிறந்தது என்று கருதப்பட்ட காணித் துண்டுகள் அல்லது சொந்த காணிகளாக இல்லாத காணிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கான காணித்துண்டுகள் (மற்றும் வித்தியாசமான அளவைக்கொண்ட காணித்துண்டுகள் கிடைக்கப்பெற்றவர்களாக இருந்தவர்கள்) என்பன பற்றி தனித்தனியாக கவனம் செலுத்தப்பட்டன. பெரும்பாலான குடும்பங்களை பொறுத்தவரை, குலுக்குச் சீட்டு முறைமையானது காணித்துண்டுகளை பங்கீடுசெய்ய ஒரு நியாயமான வழியாக பார்த்தார்கள் என்றாலும் சிலர் இந்த பிரயோகத்தில் முரன்பாடானத்தன்மையை கண்டார்கள்.

“பிரதான பாதைக்கு அருகில் வசித்தவர்கள் மற்றும் உட்பகுதிகளில் வசித்தவர்கள் என்ற வகையில் குடும்பங்கள் பிரரதானமாக இரு வகையாக பிரிக்கப்பட்டன. இரு குலுக்கல் சீட்டுக்களை பயன்படுத்திக்கொண்டார்கள். அது தெரிவு செய்யும் ஒரு நியாயமான முறைமையாக எல்லோரும் நினைத்தார்கள். ஏனெனில் அது ஏற்கனவே இருந்ததொரு முறைமையை அடித்தளமாக்கொண்டிருந்தது” (குழுமையக் கலந்துரையாடல், மீள்குடியேற்றல் தளம், 2006).

“குலுக்குச் சீட்டு முறைமையை பயன்படுத்தித்தான் காணித்துண்டுகளை பங்கிட்டுக் கொடுத்தார்கள். ஆயினும் சில காணித்துண்டுகள் அதில் உள்ளடக்கப்படவில்லை. வீதியோரத்து காணித்துண்டுகளை வங்கிகளுக்கும் வேறு பொது சமுதாய சேவைகளுக்கும் ஒதுக்கப்படுவதாக தொடக்கத்தில் கூறினார்கள். ஆனாலும் அப்படி ஒதுக்கப்பட்டிருப்பதாக சொன்ன காணித் துண்டுகளை பின்பு செல்வாக்குள்ள சிலருக்கு பங்கிட்டு தந்தார்கள். குலுக்குச் சீட்டு இழுப்பின் போது கூட எங்களுக்கு எது “ஏ” காணித்துண்டு, எது “பி” காணித்துண்டு என்று சொல்லவில்லை. நாங்கள் இலக்கத்தை எடுத்த பின்பு தான் அவர்கள் கூறினார்கள். எனவே தீர்மானம் என்பது அவர்களுடைய கைகளில் தான் இருந்தது”(குழுமையக் கலந்துரையாடல், மீள்குடியேற்றல் தளம், 2006).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை உட்கட்டமைப்புகள், உட்புற பாதைகள், வடிகால் அமைப்புகள், தண்ணீர் மற்றும் மின்சாரம் போன்றவை வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்களைப் பற்றி கவலைக்கொண்டவர்களாக மீள் குடியேற்றல் தளங்களில் மக்கள் இருந்தார்கள். மீள் குடியேற்றல் தளங்களில் குடும்பங்களால் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளுக்கான சட்ட ரீதியான அந்தஸ்த்தை வழங்கும் உரிமைப்பத்திரங்களை கையளிப்பதில் ஏற்பட்ட தாமதமும் இன்னொரு மனக்குறையாக இருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ஒரு மீள்குடியேற்றல் பயணத்தின் புகைப்பட காட்சிகள்

இப்பகுதியில் உள்ளடங்கும் சகல புகைப்படங்களும் வறுமை ஆராய்ச்சி நிலைய பணியாளர்கள் 2006 ஆம் ஆண்டில் இருந்து 2011 ஆம் ஆண்டு வரை மேற்கொண்ட கள பயணங்களின் போது எடுக்கப்பட்டவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீட்டின் முன்பக்கத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி குறியீடு




சுவீகரிக்கப்படுவதை அடையாளமிட்டுள்ள சொத்து



அதிவேக நெடுஞ்சாலை பக்கத்தில் இடித்துத்தள்ளப்பட்ட வீடு



பரம்பரை வீடு



இடித்துத்தள்ளப்பட்ட பின்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புதிய வீட்டிற்காக கழற்றலும்
மீள்பொருத்தலும்



தற்காலிக வீடு




மீள் நிர்மாணிப்பு காலக்கட்டத்தில்
பயன்பாட்டிற்கான தற்காலிக கிணறு



மீள்குடியேற்ற தளமொன்றில் கட்டியமைத்துக்கொண்டுள்ள புதிய வீடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீள்குடியேற்ற தளத்தில் புதிய இரண்டுமாடி வீடு



பகுதியாக முடிவடைந்த வீடு



புதிய வீடு



புதிய வீட்டை பசுமையாக்குதல்



மீள் குடியேற்றப்பட்ட குடும்பங்களுக்காக புதிதாக அமைக்கப்பட்ட கிணறு




ஒரு புதிய இடத்தில் மீள் நிர்மாணித்துள்ள குடும்ப இடுகாடு பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாதை நிர்மாணித்தலுக்கு முந்திய பயிர்செய்கை




பாதை நிர்மாணிப்பு வேலைகள் காரணமாக பாதிக்கப்பட்ட வயல் நிலம்



அதிவேக நெடுஞ்சாலையோரத்தில் இறப்பர் பயிர் செய்கை



வயல்நிலங்களின் ஊடாக செல்லும் அதிவேக நெடுஞ்சாலை



பாதை நிர்மாணிப்பு வேலைகள் காரணமாக பாதிக்கப்பட்ட நெல் மற்றும் இறப்பர் பயிர்செய்கைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய வியாபார வாய்ப்புகள்



ஊர் கடை புதியதொரு இடத்தில் மீள்கட்டியமைக்கப்பட்டுள்ளது



தற்காலிக வருமான வழியாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுத் தோட்டம் மீள்தொடங்குதல்



அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணிப்பு வேலைகள் தொடங்குதல்



அதிவேக நெடுஞ்சாலையின் கட்டமைப்புகள் நிலவுருவை உருமாற்றம் செய்ய தொடங்கியுள்ளது.



வீடுகளுக்கு நெருங்கியதான கடும் கட்டமைப்பு செயல்பாடு




ஊர் பாதைளுக்கு இடையூறாக கட்டமைப்பு வேலைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாதையை மட்டமாக்க நிலத்தை வெட்டுதல்



மலைப்பகுதியை வெட்டுதல்



கற்பாறைகளை வெடிவைத்து தகர்த்தல்



பெருந்தோட்டங்களின் ஊடாக வெட்டப்படும் பாதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்கு அருகில் நிர்மாணிப்பு வேலைகள்






கடும் கட்டமைப்பு வேலைகள்




பாதையமைப்பு வேலைகள் இடம்பெறும் இடத்தின் விளிம்பில் வசித்தல்



பாதை மேற்பரப்பு அடுக்குகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாதை நிர்மாணிப்பு வேலைகள் காரணமாக உருவான புழுதி




மாற்றங்களை நோக்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிவேக பாதையும் நிலவுருவின் மாற்றங்களும்



அதிவேக நெடுஞ்சாலையின் உயரத்தை காட்டும் பாலம்



உள்ளூர் பயணிகளுக்கான கீழ்வழிபாதையை அமைத்தல்




உள்ளூர் பயணிகளுகள் கீழ்வழி பாதையை பயன்படுத்திக்கொள்ளல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தண்ணீரில் மூழ்கிய வயல்நிலங்கள்




கீழ்வழி பாதை அமைத்தல் வேலைகள் இடம்பெறுகின்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதியபாதையில் மதகு கட்டியபோது



பாதையமைத்தலின் போது மதகு அடைக்கப்பட்டுள்ளது




முறைப்பாடுகள் செய்யவேண்டிய விதத்தை காட்டும் பொதுஅறிவித்தல்





அதிவேக பாதையில் தண்ணீர் குழாய்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதிவேக நெடுஞ்சாலை கட்டமைக்கும் காலக்கட்டத்தில் பல பயன்பாடுகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அதிவேக நெடுஞ்சாலைக்குள் நுழைதல்



உள்ளூர் பயணிகளுக்கான மேல் பாலங்கள்



அதிவேக நெடுஞ்சாலையின்
நீளவாட்டமான பக்கத்தில் வாழ்க்கை தொடர்கிறது



சாய்வான நிலபரப்புகள்



சாய்வான நிலப்பரப்பில் வளர்க்கப்பட்டுள்ள தாவரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் அத்தியாயம்

# குடியேற்றல்

இடம்பெயர்ந்த குடும்பங்களின் மிக பெரும்பாலான குடும்பங்கள் இருந்ததை விட சிறந்த தரத்தைக்கொண்ட வீடுகளும், குழாய் தண்ணீர், மின்சாரம், தனிப்பட்ட கிணறுகள் மற்றும் நல்ல மலசலகூடங்கள் என்ற வசதிகளும்கொண்ட குடும்பங்களாகவே இருந்தன. மிகவும் வறிய குடும்பங்களுடைய வீடுகளின் நிலைமையானது இந்த மாற்றத்தை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றதாக தான் இருந்தது. எவ்வாறாயினும் இந்த வளர்ச்சி செய்யப்பட்ட வசிப்பிடப் போக்கானது, இடைமாற்ற காலப்பிரிவு வாழ்க்கை நிலைமைகளின் செங்குத்தான வீழ்ச்சியையும், இடப்பெயர்ப்புடன் தோன்றிய உணர்வு ரீதியான பிரச்சினைகளால் ஏற்பட்ட மோசமான நிலைமையும் அதேபோல பாதை அமைத்தல் வேலைகள் காரணமாக ஏற்பட்ட மாசுபடுதல் மற்றும் ஏனைய பாதிப்புகளையும் மறைப்பதாகவே இருந்தது.

## இடைப்பட்ட நிலை

இடம்பெயர்ந்த குடும்பங்களில் முக்கால்வாசி குடும்பங்கள் தங்களுடைய புதிய வீடுகளை கட்டியமைத்துக்கொள்ளல் முடிவடையும் வரை வறிய நிலையைக்கொண்ட தற்காலிக தங்குமிடங்களிலே வசித்தன. கவலை, கோபம், ஏமாற்றம், உதவியின்மை மற்றும் விருப்பத்துடன் பணிதல் (resignation) போன்ற உணர்வுகளும் பிளவுபட்ட நிலைமையும், மன அதிர்ச்சியும் (traumatic) இந்த குறிப்பிட்ட காலத்தில் அவர்களிடம் நிலைக்கொண்டிருந்தன.

இளம் பிள்ளைகள், வயோதிபர்கள் மற்றும் நோயாளிகள் போன்ற பாதுகாப்பு மிகவும் தேவையான நிலையிலுள்ள அங்கத்தவர்களைக்கொண்ட குடும்பங்கள் குறிப்பாக பாதிக்கப்பட்டன. எனவே அக்குடும்பங்களின் வாழ்க்கையானது கடுமையான நிலைமைக்கொண்ட வாழ்க்கைவட்ட சம்பவங்களைக்கொண்டதாக அமைந்தது. "வீட்டை இடித்து தள்ளுமாறு அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். நாங்கள் அப்படி செய்யவில்லையென்றால் அவர்கள் காசு தரமாட்டோம் என்றும் சொன்னார்கள். அந்த நேரம் என்னுடைய மனைவி இரண்டாவது பிள்ளைக்காக கருப்பிணியாக இருந்தாள். நான் அந்த நேரம் அவளுடைய பாதுகாப்பையும் நலனையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றித் தான் அதிகமாக சிந்திக்க வேண்டிய நிலையில் இருந்தேனேயொழிய வேறொரு தீர்வைப்பற்றி யோசிக்ககூடிய நிலையில் நான் இருக்கவில்லை"(குடும்பத்தார், ஆண், வயது 44, 2006).

விளைவுகளானது சிலநேரம் உடல் ரீதியான அசௌகரியங்களுக்கு அப்பால் சென்றதாகவும் இருந்தன.

"என்னுடைய மகளால் உயர்தரப் பரீட்சை சரியாக எழுதமுடியவில்லை. நாங்கள் வீட்டைவிட்டு போகும்போது தான் அவள் முதன்முறையாக உயர்தர பரீட்சை எழுதக்கூடியவளாக இருந்தாள். நாங்கள் இதே காணியில் தற்காலிகமான வீட்டிற்கு வந்த பின்பு எல்லாம் குழம்பிப்போனது. எனவே அவளால் மீண்டும் பரீட்சை எழுத முடியவில்லை" (குடும்பத்தவர், ஆண், வயது 50, 2006).

இந்த இடைப்பட்ட காலப்பிரிவில் வாழ்க்கை நடாத்திக்கொண்டு செல்வதற்கு குடும்பத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டது. ஆயினும் பெரும்பாலானோர்கள் வீடு கட்டுவதில் அந்த பணத்தை செலவு செய்தார்கள். இடைப்பட்ட காலப்பகுதியை சார்ந்த வசிப்பிடங்களுடைய பௌதீக தராத்தின் சீர்கெட்ட நிலைமையானது இதனை பிரதிபலிப்பதாக இருந்தது. கல்வீடுகள் அல்லாத வீடுகளில் வசித்தவர்களின் தொகை இடப்பெயர்வுக்கு முன்பு 21% என்ற அளவில் இருந்தாலும் தற்காலிக வீடுகளின் போது அது 50% என்றளவில் அதிகரித்திருந்தது. இடப்பெயர்வுக்கு முன்பு ஒரு வீட்டின் வாழும் வெளி (living space) 5.2 என்றளவில் இருந்ததுடன் அது இந்த இடைப்பட்ட காலப்பிரிவில் 3.3 என்ற மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

குடும்பங்கள் தற்காலிக வசிப்பிடங்களில் வசித்த சராசரி காலமானது 1.16 வருடங்களாகும். எவ்வாறாயினும் இடம்பெயர்ந்த குடும்பங்களின் 07% வீதம் இடைநிலை வீடுகளில் மூன்று வருடங்களுக்கு மேல் வசித்துள்ளார்கள். இதற்கு காரணம் மீள் கட்டுமான செயல்பாடுகள் தாமதிக்கப்படுகின்ற தொழில்களில் ஏற்பட்ட மாற்றங்களும், சுகயீனம் போன்ற குடும்ப பிரச்சினைகளுமே ஆகும். தங்களுடைய வசிப்பிடத்தை புதிய இடத்தில் ஏற்கனவே தாபித்துக்கொண்டவர்களும் உறவினர்களால் வசிப்பிடங்கள் வழங்கப்பட்ட வர்களாக இருந்த மக்களும் இந்த கடினமான காலத்தை இலகுவாக கழிக்கக்கூடியவர்களாக இருந்தார்கள். தங்களுடைய வீடுகளை தங்களாலே இடித்து தள்ளுவதை முடிந்தளவில் தாமதப்படுத்தியவர்களாலும் தற்காலிக வீடுகளில் வசிக்க வேண்டிய காலத்தை குறைத்துக்கொள்ள முடிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இழப்புகள்

சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரம் என்ற வகையில் கிராமிய நடுத்தர வர்க்கம் இழந்த மூலதனம் தொடர்பான அனுபவங்கள் மிகவும் முக்கியத்துவங்கொண்டதாக பார்க்கப்பட வேண்டும். ஒரு குழு என்றவகையில் அவர்கள் தங்களுக்கு கிடைத்த நட்டஈட்டு கொடுப்பனவுகள் நியாயமானதாக இல்லை என்ற எண்ணத்தை கொண்டவர்களாகவும் புதிய இடத்தில் மீள் தொடங்குவதற்கான மதிப்பீடானது உண்மையான மதிப்பீடுகளை (realistic assessments) அடித்தளமாக்கொண்டதாக இல்லை என்ற எண்ணத்தை கொண்டவர்களாகவும் இருந்தார்கள். மேலும் நட்டஈடானது தவணைப் பணமாக வழங்கப்பட்டதாக இருந்ததுடன் சில குடும்பங்களின் தெரிவாக இருந்தது மிகவும் சொகுசான வீட்டு வடிவங்களே ஆகும். எனவே அவர்கள் தங்களுடைய புதிய வீடுகளை கட்டி முடிக்க போதியளவு பணம் இல்லாதவர்களாக இருந்தார்கள். அவர்களை பொறுத்தவரை மீள்குடியேற்றல் என்பது நிதி சார்ந்ததாகவும், உணர்ச்சிகள் சார்ந்ததாகவும் பார்க்கும்போது அவர்களின் மீதான ஒரு சுமையாக தான் இருந்தது. ஒன்று சமீபத்தில் கட்டப்பட்ட புதிய வீட்டை அல்லது பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்த வீட்டைவிட்டு சென்றவர்களாக அவர்கள் இருந்தார்கள்.

## நகர்த்தல், எவ்வளவு அருகில் இருந்தாலும் அது போகும்போது தூரம்:

குணரத்ன (மாற்றப்பட்டுள்ளது) அவருடைய குடும்பத்துடன் பழைய இரண்டுமாடி செல்வந்த நிலப்பிரபு வீடு ஒன்றில் வசித்து வந்தவர் ஆவார். அவருடைய பாட்டனிடம் இருந்து மரபுவழியாக கிடைத்திருந்த அந்த வீடானது இருபது பேர்ச்சஸ் தென்னங்காணியையும் உள்ளடக்கியதாக இருநூற்றி முப்பது பேர்ச்சஸ்களைக்கொண்ட காணியொன்றாகும். அவருக்கு சொந்தமாக இருந்த அரிசியாலையொன்றில் இருந்தும் அவருக்கு வருமானம் கிடைத்தது. உயர்சாதி மற்றும் உயர் சமூக அந்தஸ்தைக்கொண்ட கூட்டுக்குடும்பமான அந்த குடும்பம் அயலில் பல காணிகளை சொந்தமாகக்கொண்டிருந்தது.

கொழும்பு–மாத்தறை அதிவேக நெடுஞ்சாலைக்கு அவர்களுடைய காணிகளில் பல சுவீகரிக்கப்பட்டன. எனவே குணரத்னவும் அவருயை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பமும் சின்னாபின்னமான அவர்களுடைய பழைய வீட்டின் பார்வைக்காட்சியின் எல்லையில் உறவினர்களின் உதவியுடன் சிறிய தற்காலிக வீட்டை அமைத்துக்கொண்டு வாழ்தல் என்பது உண்மையாகவே அசௌகரியமாகத்தான் இருந்தது. அவரிடம் இன்னொரு காணித்துண்டும் இருந்தாலும் அது ஒரு தாழ்வான பகுதியில் அமைந்துள்ள காணியாக இருந்த காரணத்தால் அதை பயன்படுத்திக்கொள்வதற்கு கணிசமானளவு மண் நிரப்ப வேண்டிய நிலையில் இருந்தது. அதுவும் நெடுங்சாலைக்கு மிகவும் அருகில் அமைந்ததொன்றாக இருந்த காரணத்தால் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் கட்டடங்கள் அனுமதிக்கப்படாத வலயத்ததிற்குள்ளே அது உள்ளடங்கியது.

அவர் தனக்கு கிடைத்த நட்டஈடு பணத்தை பயன்படுத்திக்கொண்டு தன்னுடைய உறவினர்களிடம் இருந்து தன்னுடைய காணிற்கு அடுத்தாற்போலுள்ள காணியொன்றினை கொள்வனவு செய்திருந்தாலும் கிடைத்த பணத்தின் மிகுதித்தொகையானது ஒரு வீட்டை கட்ட போதுமானதாக இல்லை என்று முறைபாடு செய்தார். இன்னமும் ஒன்று அல்லது இரண்டு பரம்பரை காலம் புதுப்பித்து பாவிக்கக்கூடிய நிலையில் இருந்த அந்த வீட்டை பழைய வீடு என்று குறைத்து மதிப்பீடு செயயப்பட்டது. அவர் அவருடைய பரம்பரையான ஊரில் இருந்தும் கூட்டுக் குடும்பத்தில் இருந்தும் தொலையில் உள்ள குறிப்பாக ஒரு தாழ்ந்த சாதியினர் வசிக்கும் பிரதேசத்திற்கு புதிய வசிப்பிடத்தை அமைத்துக்கொண்டு விருப்பமின்றி சென்றுள்ளார். அவருடைய பிரதான வருமான வழியான அரிசி ஆலைக்கு சமீபமாக அவர் கட்டாயமாக தொடர்ந்து வாழத்தான் வேண்டும்.

நெடுஞ்சாலையால் எவ்வொரு பொருளாதார ரீதியான அனுகூலமோ கிடைக்கும் என்ற நம்பிக்கை குணரத்னவிடம் இல்லை.

கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் அதிவேக நெடுஞ்சாலையானது மட்டுப்படுத்தப்பட்ட அடையும் இடங்களை கொண்டிருக்கின்றதன் காரணமாக மக்களுக்கு அவ்வளவு நன்மைகளை தராது என்றும் அதிவேக நெடுஞ்சாலையின் உள்மாறும் இடங்களுக்கு (interchange sites) அருகில் வசிப்பவர்களுக்கு மட்டுமே அபிவிருத்தியை வழங்க கூடும் என்றும் நம்பிக்கை கொண்டவராக அவர் உள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய, பூர்வீக காணியையும் வாழ்க்கைப்பாணியையும் இழந்தமையானது குறிப்பிடத்தக்களவு குடும்பங்களுடைய பொது அனுபவமாக உள்ளது. பரிச்சயமான இடங்களில் இருந்து தள்ளிவைப்பதாக அமைந்துள்ள சிறிய வீட்டு காணியும் மீள்குடியேற்றல் தளங்களின் கிடைத்துள்ள மிகவும் ஒற்றை சுபாவத்தைக்கொண்டதான காணியும் காரணமாக அவர்கள் நம்பிக்கை சிதைந்த நிலைக்கு தள்ளப்பட்டவர்களாகி இருந்தார்கள். அதேநேரம் மக்கள் தங்களுடைய அடையாளத்தை இழந்ததான குற்ற உணர்வைக்கொண்டவர்களாகவும், தங்களுயை வீடுகளில் இருந்தும், குடும்பங்களில் இருந்தும் அதேபோல சமுதயாங்களில் இருந்தும் இடம்பெயர்ந்தமையானது தங்களுடைய சமூக வாழ்க்கையினதும் உற்பத்தி செயற்பாட்டினதும் அடித்தளங்களில் இருந்தும் அப்புறப்படுத்தப்பட்டவர்கள் என்ற உணர்வுடனும் அவர்கள் இருந்தார்கள். எவ்வாறாயினும் எல்லாவகையான இடையூறுகளையும் தாண்டிச் சென்று தங்களுடைய சமூக சூழலில் ஒரு குறிப்பிடத்தக்களவு தொடர்ச்சியை தக்கவைத்துக்கொள்வதில் பல குடும்பங்கள் வெற்றி கண்டன. அவர்கள் தங்களுடைய கூட்டுக் குடும்பங்களுக்கு நெருங்கியதாக தங்கியிருக்கவும் தங்களுடைய சமூக வலையமைப்பை பராமரித்தக்கொள்ளவும் தீர்மானித்துக்கொண்டுள்ளார்கள்.

இழப்பு பற்றி தீவிரமாக உணர்ந்த இன்னொரு குழுவாக வயோதிபர்களை குறிப்பிடலாம். தனிப்பட்ட முறையிலோ அல்லது குடும்ப மட்டத்திலோ ஏற்கனவே இடம்பெயர்ந்த அனுபவமில்லாதவர்களாகவும், இடம்பெயர கட்டாயப்படுத்தப் பட்டவர்களாகவும் பலர் இருந்தார்கள். அவர்கள் பல பரம்பரைகளாக அதே இடத்தில் வசித்துவந்தவர்களாகவே இருந்தார்கள். அவ்வாறான சூழ்நிலையில் வயோதிபர்களை பொறுத்தவரை காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் சார்ந்த கஷ்டங்களை சமாளித்துக்கொள்ளல் என்பது கடினமானதாக தான் இருந்தது. இந்த செயல்திட்டத்தால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களை சார்ந்த வயோதிபர்கள் தங்களுடைய வீடுகளிலோ அல்லது பிள்ளைகளுடனோ வாழ்கின்றவர்களாக இருந்தார்கள். மீள்குடியேற்றல் செயற்பாடுகளின் விளைவுகள் பாரம்பரிய கூட்டுக்குடும்பங்களை பல அலகுகளாக பிரித்தும் வாழ்க்கையை புதிய முறையில் அமைக்கவும் ஏதுவாக அமைந்திருந்தன. எனவே வயோதிபர்கள் தங்களுடைய வாழ்க்கையில் ஏனையவர்களின் உதவி அதிகமாக தேவையாக உள்ள கட்டத்தில் வாழந்துக்கொண்டிருந்தாலும் தனியாகவும் அவர்கள் ஈடுபாடுக்கொண்டிருந்த சீவனோபாய செயற்பாடுகளை இழந்த நிலையிலும் வாழ்ந்துகொண்டுள்ளமைக்கு நிறைய உதாரணங்கள் உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள்குடியேற்ற தளங்கள்

பாதையின் அபிவிருத்தியுடன் குறிப்பிட்ட பிரதேசத்தில் காணி விலை ஏறியது. எனவே புதிய வசிப்பிடத்திற்காக ஒரு காணியை தேடிக்கொள்ளல் எனபது மிகவும் கடினமானதாக இருந்தது. அது பொருளாதார பலத்தில் தங்கியிருந்தது. அத்துடன் மிகவும் தீவிரமான மட்டத்தில் குடியிருப்புகளைக் கொண்டுள்ள ஈர வலயத்தில் அரசு காணிகளை போலவே தனியார் காணிகளை பொறுத்தவரையிலும் வசிக்கத்தக்க காணிகள் கிடைக்ககூடிய தன்மையானது குறைந்துக்கொண்டு போகும் போக்கைக்கொண்டதாக தான் இருந்தது. எனவே மக்களால் தனிப்பட்ட முறையில் காணிகளைத் தேடிக்கொள்ளல் என்பது இலகுவான காரியமாக அமையவில்லை. அத்துடன் அரசால் மீள் குடியேற்றல் தளங்களை தேடிக்கொள்வதும் கடினமானதாக தான் இருந்தது. இதன்போது வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதேச செயலகத்தின் உதவியை நாடியது. சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட காணி குடியேற்றத்திற்கு முழுமையாகவே உகந்ததாக இருக்கவில்லை என்றாலும் வீதி அபிவிருத்தி அதிகார சபை இயன்றளவுக்கு அதனை நல்ல நிலைக்கு கொண்டுவர முயற்சித்தது.

மீள்குடியேற்றல் தளங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் எப்பொழுதும் சீரான வேகத்தில் அபிவிருத்தியடையவில்லை என்றாலும் பொதுவாகவே உட்கட்டமைப்பு வசதிகள் நன்றாக அபிவிருத்தி செய்யப்பட்டதாக தான் இருந்தன. எவ்வாறாயினும் மீள்குடியேற்றல் தளங்களுக்குள்ளேயும் அவற்றிக்கு வெளியிலும் வழங்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் தரத்தை சார்ந்த சில வித்தியாசங்கள் காணக்கூடியதாக இருந்தன. செயல்திட்டத்தால் உடனடியாக தீர்த்துவைத்துக்கொள்ள முடியாத காரணிகள் இதற்கு காரணமாகின. உதாரணமாக கந்தாரவத்த/ புபுது கம என்ற இடத்தை எடுத்துக்கொண்டால் அங்கு நில அரிப்பு மட்டம் அதிகமாக உயர்வடைவதற்கு நில அமைப்பு மற்றும் சீதோஷ்ண நிலைமைகள் காரணமாகின. எனவே கிறவல் பாதைகளை அபிவிருத்தி செய்வதும் வடிகால் திட்டங்களை அபிவிருத்தி செய்வதும் தேவையாக இருந்தன. இப்பிரதேசத்து மக்களுடைய கருத்தின்படி பாதைகளில் நில அரிப்பை குறைக்க சிலின்டர்களை பயன்படுத்திக்கொண்டு வடிகால்களை அபிவிருத்தி செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை திட்டமிட்டிருந்தாலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஒரு தளமாக இருந்த மீள் குடியேற்றல் தளத்திற்கும் ஒரு பிரதேச சபை வட்டத்திகுள் அமைந்துள்ள கிராமத்திற்கும் இடையில் நிலவிய சில முரண்பாடுகள் காரணமாக அந்த திட்டம் கைவிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும் சிலநேரங்களில் மீள் குடியேற்றல் தளத்தை தெரிவுச் செய்வதிலும் பிரச்சினைகள் தோன்றின. ஹல்லவத்த என்ற மீள் குடியேற்றல் தளமானது செங்குத்தான சரிவு ஒன்றில் அமைந்திருந்தமையானது குடியேறிய மக்கள் முகங்கொடுத்த மிக முக்கியமான பிரச்சினையாக இருந்தது. பாதை மிகவும் செங்குத்தானத் தன்மைக்கொண்டதாக அமைக்கப்பட்டிருந்ததன் காரணமாக மக்களால் நடந்து செல்வதோ அல்லது ஒரு வாகனத்தை செலுத்திக்கொண்டு செல்வதோ சிரமமாக இருந்தது. இதற்கு மேலதிகமாக இந்த தளத்தில் அமைந்திருந்த சில வீடுகளை அடையக்கூடிய பாதையானது மிகவும் பலவீனமான நிலையிலேயே இருந்தது. எனவே குறிப்பிட்ட சமுதாயம் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒரு மாற்றுப்பாதையை முன்மொழிந்தது.

மீள்குடியேற்றல் தளங்களுக்கு சென்ற மக்கள் பௌதீக ரீதியான பிரச்சினைகளை விட சமூக ரீதியான பிரச்சினைகளுக்கே அதிகம் முகங்கொடுத்தார்கள். அயலக காணிகளில் பல பரம்பரையாக வசித்துக்கொண்டிருந்த சமுதாயம் இந்த மீள்குடியேறிய மக்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கக்கூடும் என்ற நம்பிக்கையில் கடுமையாக அவர்களை ஆட்ஷேபித்தார்கள். எவ்வாறாயினும் இந்த மீள் குடியேற்றத்தளங்களின் அபிவிருத்தியும், வீடு கட்டமைப்பு செயற்பாடுகளும் குறிப்பிட்ட சமுதாயத்தின் மக்களுக்கு தொழில்வாய்ப்புகளை வழங்குவதாக அமைந்தது. அதேநேரம் சமுதாய உட்கட்டமைப்பில் ஏற்பட்ட அபிவிருத்தியின் பலன்களையும் அச்சமுதாயங்களால் அனுபவிக்ககூடியதாக இருந்தது.

மீள்குடியேற்றத்தளங்கள் இரு மட்டங்களில் நிலைத்து நிற்கக்கூடியவையாக இருக்கவேண்டும் என்று இந்த செயல்திட்டம் குறிப்பாக கருதியது. அதில் முதலாவது மட்டமானது அயலக சமூகத்துடனான பங்கீட்டுக்கொள்ளலின் வழியாக மீள்குடியேற்றத்தளத்திற்குள் சமூக ஒத்திசையை பராமரித்துக்கொள்ளல் ஆகும். இரண்டாவது மட்டமானது வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டபோது பிரதேச சபையால் மீள் குடியேற்றத் தளங்களை பொறுப்பெற்றுக்கொள்ளலின் வழியாக உள்ளூர்வாசிகளுடனான ஒன்றுசேர்த்தலை அதிகரித்தலும் உள்வாங்கிக்கொள்ளலும் ஆகும். இந்த மீள் குடியேற்றத் தளங்களில் வருங்கால பராமரிப்பு வேலைகளை பிரதேச சபை மேற்கொண்டுச் செல்லும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும் இதற்கான நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒதுக்கப்படுதல் மற்றும் பொறுப்புகூறல் என்பன உள்ளூர் அதிகாரித்துவங்களிடம் வழங்கும் பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டதாக இருக்கவில்லை.

## மேலும் சிறப்பாக கட்டியமைத்தல்:

பெரும்பாலான குடும்பங்களால் கட்டியமைக்கப்பட்ட வீடுகளானது அவர்கள் ஏற்கனவே வசித்த வீடுகளை விட நல்ல நிலையில்தான் இருந்தன. கல் வீடுகளின் எண்ணிக்கை 74% என்றதில் இருந்து 94% வரை வளர்ச்சியடைந்திருந்தன. மின்சார வசதியைக்கொண்ட வீடுகளின் எண்ணிக்கையானது 68% என்றதிலிருந்து 94% வரை வளர்ச்சியடைந்தது.

இந்த செயல்திட்டத்திற்கு முன்பு சொந்தமாக தண்ணீர் வசதியை இல்லாதவர்களாக இருந்த 94 வீதமான குடும்பங்கள் செயல்திட்டத்திற்கு பின்பு ஒரு சொந்த கிணறோ அல்லது தனியாக குழாய் தண்ணீர் வசதியையோ கொண்டுள்ளன. இந்த செயல்திட்டத்திற்கு முன்பு மண் வீடுகளில் வசித்தவர்களின் 94 வீதமானவர்கள் தற்போது கல்வீடுகளில் வசிப்பவர்களாகவும் மண்ணெண்ணெய் விளக்குகளின் அல்லது பெற்றோல் மாக்ஸ் விளக்குகளில் வழியாக வெளிச்சத்தை பெற்றவர்களாக இருந்தவர்களில் 93 வீதமானவர்கள் மின்சார வசதியை கொண்டவர்களாகவும் உள்ளார்கள்.

**உரு ஐந்து: வீட்டின் தரம் சார்ந்த வளர்ச்சி**




மூலம்: வறுமை ஆராய்ச்சி நிலைய மாதிரி கணிப்பீட்டாய்வு, 2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு காணியற்றவர்களாக இருந்தவர்களின் வீடுகள் இந்த வளர்ச்சியை சிறப்பாக எடுத்துக்காட்டுவதாக இருந்தன. தங்களுக்கென சொந்த காணி இல்லாமல் இருந்த மக்கள் – அதாவது அரசு காணிகளில் சட்டவிரோதமாக குடியேறி இருந்தவர்கள்–இடம்பெயர்ந்த குடும்பங்களில் ஐந்தில் ஒரு பகுதியளவில் இருந்தன. இக்குடும்பங்களுள் வசிப்பிடங்களின் தரத்தின் வளர்ச்சியானது குறிப்பிடத்தக்கது.

## இலாப நட்டங்களை எடைபோடுதல்:

இரமிலாவின் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) பெற்றோர்கள் ஒரு அரசுக் காணியில் அத்துமீறி குடியேறி இருந்ததுடன் பிற்காலத்தில் அவர்களுக்கு ஒரு காணி உறுதி வழங்கப்பட்டது. இக்காணியின் ஒரு பகுதியாக 28 பேர்சஸ் காணித்துண்டு இரமிலாவிற்கு வழங்கப்பட்டதுடன் பின்பு அவள் பாடசாலைச் செல்லும் தன்னுடைய இரு ஆண் பிள்ளைகளுடன் அதில் ஒரு குடிசை வீட்டில் வசித்துவந்தார். அவர்களுக்கு மின்சார வசதியோ அல்லது வாய்கால் தண்ணீர் வசதியோ இருக்கவில்லை. அவர்கள் தங்களுடைய பெற்றோர்களுடன் பங்குக்கிணற்றை பயன்படுத்திக்கொண்டார்கள்.

இரமிலாவின் காணியின் அரைவாசி பகுதி அதாவது 14 பேர்சஸ் அளவைக்கொண்ட காணி அதிவேக நெடுஞ்சாலைக்காக சுவீகரிக்கப்பட்டது. அதற்கான நட்டஈட்டு பணம் கிடைத்தப்போது தங்களுடைய காணிக்கு அடுத்ததாக உள்ள காணியின் 20 பேர்சஸ் அளவைக்கொண்ட பகுதியை கொள்வனவு செய்து இருந்ததை விட நல்லதொரு வீட்டை கட்ட அவளால் முடிந்தது. தண்ணீர் மற்றும் மின்சார வசதியுடன் அது அவளுடைய தேவையை பூர்த்தி செய்வதாகவும் இருந்தது. அவள் தன்னுடைய இழந்த பழ மரங்களுக்கு பதிலாக புதிய காணியில் பழ கன்றுகளை நடுவதற்கு திட்டமிட்டதுடன் சில மரங்களை அவளுடைய புதிய வீட்டிற்குத் தேவையான கட்டட வேலைகளுக்கு பயன்படுத்திக்கொண்டாள். அவள் தன்னுடைய புதிய வீட்டில் சந்தோஷமாக வசிக்கிறாள். தான் சரியான முடிவை எடுத்ததாகவும் தற்போது போதியளவு காணி அதாவது 34 பேர்சஸ் காணி உள்ளது என்றும் இரு மகன்களுக்கும் வீடுகளை கட்டக்கூடிய நிலையில் காணி உள்ளது என்றும் அவள் கருதுகிறாள்.

8886(P)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னால் பாதையோரத்தில் ஒரு சிறிய கடையை தொடக்க முடியாமல் போனமையானது அவளை பொறுத்தவரை கவலையாக தான் உள்ளது என்றாலும் நெடுஞ்சாலை காரணமாக ஒட்டுமொத்த நாட்டின் அனைவரும் நன்மையடைவார்கள் என்ற எதிர்பார்ப்பு அவளிடம் உள்ளது.

## சில ஒதுக்கி வைத்தல்கள்

### உரு ஆறு: மீள்குடியேற்றலுக்கு பின்பு வசிப்பிடம், பசுமையான சுற்றுசூழல் மற்றும் சமூக வலையமைப்புகள் தொடர்பான திருப்தியடைதல்




மூலம்: வறுமை ஆராய்ச்சி நிலைய மாதிரி கணிப்பீட்டாய்வு, 2006

வசிப்பிடத்தின் தரம் வளர்ச்சியடைந்தமையானது குறிப்பிடத்தக்கதொரு விடயமாக இருந்தாலும் காணிக்கான நுழைவு வசதி குறைந்திருந்தமையும், பசுமையான சுற்றுசூழல் வெளி குறைந்தமையும் மக்களுக்கு கவலையை தருவதாக இருந்தன. காய்கனிகள் உட்பட மரங்களில் இருந்து கிடைக்கின்ற ஏனைய பலன்கள் இல்லாமையும் இவற்றில் அடங்கும். தண்ணீர் வடிகால் அமைப்பு மற்றும் குப்பைகளை அகற்றுதல் என்பன சார்ந்த பிரச்சினைகளாலும் மக்கள் பாதிக்கப்பட்டிருந்தார்கள். பல இடங்களில் பெரும்பாலான மக்களுடைய கவலைக்கு காரணமாக இருந்தது தங்களுடைய சொந்த காணிகள் மாத்திரமல்ல பொதுவாக பங்கிட்டுக்கொண்ட காணிகளையும் இழந்தமையால் ஏற்பட்ட பாதிப்பே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செயல் திட்டம் பொது பயன்பாட்டிற்குரிய வசதிகளை சமுதாய வசதிகள் என்று வரைவிளக்கணம் செய்தது. அதன்படி பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் சுகாதார சிகிச்சை நிலையங்கள் போன்ற நிறுவனங்களும் ஒற்றையடி பாதைகள், உள்ளூர் பாதைகள், பாலங்கள் மற்றும் வாய்கால்கள் போன்ற உட்கட்டமைப்புகளும், பொது காட்டு பிரதேசங்கள் போன்ற வளங்களும் சமுதாய வசதிகளுக்குள் அடங்கின. ஒட்டுமொத்தமாக 1,220 காணித்துண்டுகள் அல்லது முழு காணித்துண்டுகளின் 12 வீதமான பகுதி சமுதாய வசதிகள் மற்றும் வளங்களாக இருந்தன.

இழந்த சமுதாயத்து கட்டடங்களுக்கு மட்டுமே பண ரீதியான நட்டஈடுகள் கிடைத்தன. ஏனைய எல்லா சமுதாயத்து இழப்புகளும் மக்களின் ஆலோசனைகளுடன் மீள் கட்டியமைக்கப்பட்டன. எனவே இச்செயல்திட்டமானது இழந்த சமுதாயத்து வசதிகளுக்காக நட்டஈடு வழங்குவதை விட புதிய இடத்தில் அவை தாபிக்கப்படுவதிலே முக்கிய கவனம் செலுத்தியது. அனைத்து பாதைகளும் புதிதாக அமைக்க வேண்டியதாக இருக்கவில்லை. நில சுவீகரித்தலும் மக்கள் புதிய இடத்தில் வசிப்பிடங்களை தாபித்துக்கொள்ளலும் காரணமாக கிராமத்தின் சில பாதைகள் அவற்றினை பயன்படுத்திக் கொள்பவர்களை இழந்து கிடக்கின்றன. எஞ்சி இருந்த சில பாதைகளுக்கு மாற்றுப் பாதைகள் வழங்கப்பட்டன. பாதைகளை பயன்படுத்திக்கொள்வதிலுள்ள இடையூறுகளை விட நீர்வழி போக்குவரத்து வழிகளை பயன்படுத்திக்கொள்வதில் உள்ள இடையூறுகளே சுட்டிகாட்டப்பட்டன.

அதிவேக நெடுஞ்சாலை காரணமாக இடம்பெயர நேர்ந்தமையானது பெரும்பாலான மக்களை பொறுத்தவரை ஒருவகை மன அதிர்ச்சியை தருகின்ற அநுபவமாக (traumatic experience) இருந்தது பற்றி சந்தேகம் கிடையாது. ஆயினும் இந்த தாக்கத்தில் இருந்து கிடைத்த மன அழுத்தத்தை குறைக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவை மக்களுடைய இயல்புநிலையை அடைவதற்கு உதவியது. வசிப்பிடங்களின் இயல்புநிலையடைதல் பற்றி கவனம் செலுத்தும்போது முக்கியமாகவே அது சிறந்ததாக தான் அமைந்திருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நான்காம் அத்தியாயம்

# மீளவும் பயிரிடுதல்

விவசாய நிலங்களை இழந்தமை, தொழில் முயற்சிகள் பாதிக்கப்பட்டமை அல்லது இழந்தமை, தொழில்களை அடையக்கூடிய வழிகளில் மாற்றங்கள் ஏற்பட்டமை என்ற வகையில் பல காரணிகள் மக்களுடைய வருமானத்தை வீழ்ச்சியடையச் செய்தன. இந்த எல்லா காரணிகளுக்குள்ளேயும் விவசாய காணிகளின் இழப்பானது மிகப்பெரிய இழப்பாக அமைந்தது. குடும்பத்திற்கான விவசாயத்தின் பங்களிப்பானது கடுமையானதாகவும் சில நேரங்களில் மிகவும் கூர்மையானதாகவும் வீழ்ச்சியைக்காட்டியது. உண்மையாகவே இது போதியளவு கவனம் செலுத்தப்படாத ஒரு விடயமாகவே இருந்தது. வீட்டுத்தோட்டம் என்ற விடயத்தில் சில வெற்றிகள் அடைந்துள்ளமை காணக்கூடியதாக இருந்தன. எனினும் இச்செயல்திட்டத்தின் ஓர் அம்சமாகிய வருமானத்தை திரும்ப பழைய நிலைக்கொண்டு வரும் நிகழ்ச்சியானது (Income restoration programme) பிரதானமாகவே மீள்குடியேற்றல் தளங்களில் வசிக்கும் மக்களையே குவிமையப்படுத்தப்பட்டதாகவே அமைந்திருந்தது.

தேயிலை, இறப்பர், கறுவா, நெல், பழங்கள் மற்றும் மரக்கறிகள் போன்ற பயிர்களாலான காணிகளைக்கொண்டவர்கள் வருமானத்தை தேடிக்கொள்வதில் மிகவும் அதிகமாகவே இயற்கை வளங்களின் மீது தங்கிருந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் நெடுஞ்சாலை அமைக்க தங்களுடைய காணிகளைக் கைப்பற்றிக்கொண்டதன் விளைவாக நேரடியாக பாதிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். இவற்றிற்குள் சில காணிகள் குறிப்பிட்ட குடும்பங்களுக்கு வருமானத்தை தேடித்தந்தவையாக மாத்திரமல்ல குடும்பத்தின் உணவுத்தேவையையும் பூர்த்திச் செய்தவையாக இருந்தன.

## நெற் பயிர்செய்கையின் வீழ்ச்சி

வயல் காணிகளின் இழப்பு என்பது குடும்பங்களிடம் கடினமான நிலைமையை உருவாக்கிய குறிப்பிடத்தக்க காரணியாகக் குறிப்பிடலாம். இந்த செயல் திட்டத்தால் கைப்பற்றிக்கொண்ட நெற்காணிகளுக்கு கிடைத்த குறைந்த நட்டஈடு இந்த இழப்பை மேலும் சிக்கலாக்கியது. அதேநேரம் நெடுஞ்சாலை அமைக்கும் செயற்பாடுகளின் காரணமாக ஏற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுசூழல் சார்ந்த பாதிப்புகளானது மிஞ்சியிருந்த வயல்காணிகள் – சதுப்பு நிலங்கள் உட்பட்டதாக – தண்ணீர் வழங்கும் வழிகள் அடைக்கப்பட்டவையாக மாறியதுடன் வயல்களை அடைவதற்கான வழிகள் அடைக்கப்பட்டவையாகவும் அவை மாறின.

ஏனையவகையான விவசாயக் காணிகளை விட பொதுவாகக் குறைவான நட்டஈட்டுத் தொகையே வயல்காணிகளுக்கு கிடைத்தன. மதிப்பீட்டு திணைக்களத்து உத்தியோகத்தர்களின் கூற்றின்படி வயல் காணிகளுக்கான நட்டஈட்டை மதிப்பிடும்போது ஒரு பேர்சஸ் எழுநூற்றி ஐம்பது ரூபாயிலிருந்து ஆயிரத்து இரு நூற்றி ஐம்பது ரூபாய் என்றவாறு மதிப்பீடு செய்யப்பட்டது. ஈர வலயத்தில் நெல் பயிர்செய்கையானது குறைந்த வருமானமே தருகின்றது என்ற காரணமும் அதேநேரம் ஏனைய காணிகளை போல வயல்காணிகளை நிரப்புவதற்கோ அல்லது வேறு தேவைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளவோ முடியாது என்ற சட்ட ரீதயான தடைகள் காரணமாகவும் இவ்வாறு நெல் வயல் காணிகள் குறைந்த மதிப்பை பெற்றன. சிலர் தங்களுடைய வயல் காணிகளை விற்பனை செய்யவேண்டிய தேவைகொண்டவர்களாக இருந்தார்கள் என்பதுடன் தங்களுடைய வயல் காணிகளை இழந்தவர்களுக்கு அவற்றினை வேறொரு இடத்தில் மீள் பெறுவது என்பது கடினமானதாக இருந்தது.

உற்பத்தி திறனையும், சந்தை பெறுமதியையும் முக்கியமானவையாக பார்க்கும் பொருளாதார பகுப்பாய்வாளர்களால் ஈர வலயத்தில் பயிரிடுகின்ற நெல் உற்பத்திக்கு குறைந்த பெறுமதியை வழங்கினாலும் விவசாயிகள் இதனை வேறொரு கண்ணோட்டத்தில் பார்த்தார்கள். இக்குடும்பங்கள் தங்களுடைய சொந்த வயல் காணிகளால் கிடைக்கின்ற அரிசியை பயன்படுத்திக்கொள்ளல் மிகவும் உயர்ந்த மதிப்பைத் தருகின்றதொன்றாக கருதுகிறார்கள். உணவு பாதுகாப்பு என்ற கண்ணோட்டத்திலும் அதேநேரம் ஒரு வாழ்க்கைப்பாணி என்ற கண்ணோட்டத்திலும் தான் நெல் காணிகளின் மீதான அவர்களுடைய பெறுமதி தங்கியுள்ளது. ஏனெனில் பெரும்பாலும் சிறிதளவு விவசாயத்தை மேற்கொள்ளும் இந்த விவசாயிகள் நெல் பயிர் செய்கையின் போது மிகவும் குறைவாகவே இரசாயன பொருட்களை பயன்படுத்திக்கொள்கின்றவர்களாகவும் அதிகமாகவே பாரம்பரிய விவசாய முறைமைகளை பயன்படுத்திக்கொள்கின்றவர்களாகவும் உள்ளார்கள். தங்களுடைய சொந்த வயல் காணியில் இருந்து கிடைத்தவையா இல்லையா என்பதை வைத்துக்கொண்டே அவர்கள் அரிசியின் தரத்தை மதிப்பீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறார்கள் என்பதுடன் அதன் வழியாக தன்நிறைவை அடைவதாகவும் கருதுகிறார்கள். அவர்கள் மேலதிகமாக இருந்ததை மட்டுமே விற்பனை செய்தார்கள். எனவே தங்களுடைய நெல் பயிர்செய்கையை இழந்தமையானது அவர்களை பொறுத்தவரையில் தங்களுடைய சொந்த விவசாயத்தின் வழியாக உணவுத்தேவையின் பிரதான பகுதியை இழந்ததாக இருந்ததுடன் அவர்கள் உணவுக்காக அரிசியை கொள்வனவு செய்வதற்கு என்று மேலதிகமாக செலவுசெய்ய வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டவர்களாகவும் இருந்தார்கள். "இப்ப நாங்கள் காசு கொடுத்து தான் அரிசி வாங்கவேண்டிய நிலையில் இருக்கின்றோம். எங்களுடைய சொந்த அரிசி இருந்திருந்தால் தேங்காய் சம்பலுடன் என்றாலும் சோறு சாப்பிட்டு நிம்மதியாக சீவிக்கலாம். இப்ப எங்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. எங்களுடைய நிலைமை சரிந்துகொண்டு தான் போயுள்ளது. எங்களுடைய வாழ்க்கை சீர்கெட்டுபோய் விட்டது"(விவசாயி, ஆண், வயது 74, 2006).


எனவே நெற்பயிர் செய்கையானது வேறுவகையான மதிப்புகளையும் கொண்டிருந்தமையை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். நெல் வயல்களை இழந்தமையானது மக்கள் மிகவும் பலமாக தங்கியிருந்த கூட்டு உற்பத்தி முறைமைகளின் மீது இடையூறுகளை விளைவிப்பதாக அமைந்தது. அத்துடன் அது மக்கள் மிகவும் வலுவாக தங்கி வாழ்ந்த முறைசாரா சமூக வலையமைப்பை ஸ்தம்பிதமாக்கியது. மக்கள் ஏனைய பயிர்களை நோக்கியும் ஏனைய வேளாண்மை முறைமைகளை நோக்கியும் மாறினார்கள். "எங்களிடம் மிச்சமாக நூற்றி பதினைந்து பேர்சஸ் வயல்காணிகள் இருந்தாலும் தற்போது எங்களால் அந்த காணிகளை பயன்படுத்திக்கொள்ள முடியாது. நெடுஞ்சாலைக்கு காணிகள் சுவீகரிக்கப்பட்டதன் காரணமாக வடிகால் அமைப்புகள் அடைக்கப்பட்டுவிட்டமை தான் அதற்கு காரணம். ஆகவே நான் வேறொரு காணியை விலைக்கு வாங்க தீர்மாணித்தேன். அது ஒரு ஏக்கர் காணி. முழுக்காணியையும் விலைக்கு வாங்க என்னிடம் போதியளவு பணம் இருக்கவில்லை. எனவேதான் நான் ஒரு சினேகிதனுடன் சேர்ந்து அந்த காணியை விலைக்கு வாங்கினேன். எங்கள் இரண்டு பேர்களிடமும் தனித்தனியான காணி உறுதிகள் உள்ளன. நாங்கள் இந்த காணியை வங்கியில் அடகுவைத்துவிட்டு தேயிலை பயிர் செய்ய கடன் வாங்கினோம்" (குடும்பத்தவர், ஆண், வயது 46, 2006).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றீடுகளைத் தேடுதல்

வதிவிடங்களை விட சீவனோபாயங்களை மீள் அமைத்துக்கொள்ளவே நீண்ட காலம் எடுத்தது என்பது பற்றிய சான்றுகள் உள்ளன. சுய உற்பத்தியை கொண்டதான விவசாய நிலங்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்ததுடன் உற்பத்தியற்ற (non-productive) காணிகளைக்கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை வளர்ச்சியடைந்திருந்தது. உற்பத்தியற்ற காணிகள் பிரதானமாகவே வீடு கட்டவோ அல்லது ஒரு வியாபாரத்தை தொடங்கவோ கொள்வனவு செய்யப்பட்டவையாக இருந்தன. விவசாய நிலங்களை கொள்வனவு செய்தலின் போது அதன் அடிப்படையான உந்துசக்தியாக வருமானம் சம்பாதித்துக் கொள்ளக்கூடிய நிலைமை இருந்தது. எனவே பிரதானமாகவே தேயிலைத் தோட்டங்களையோ அல்லது கறுவாத் தோட்டங்களையோ கொள்வனவு செய்தார்கள்

**உரு ஏழு: பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிலச் சொத்து மாதிரிகளின் மாற்றங்கள்**




ஏறக்குறைய *90* வீதமான குடும்பங்களின் நில உரிமை வீழ்ச்சி சுட்டிக்காட்டப்படுகின்றது. விவசாய நிலங்கள் மீள் சம்பாதித்துக்கொள்ள முடியாமைக்கு பல காரணங்கள் முன்வைக்கப்பட்டன. பங்கு உடமைத்துவம் மிகவும் அதிகமாக எங்கும் காணக்கூடியதாக உள்ளது. சார்புடையதாக குறைந்த நட்டஈட்டுத் தொகைக்கொண்டிருந்த பல குடும்பங்கள் தங்களுடைய சிறிய நட்டஈட்டுப் பணத்தை வீட்டுத் திருத்த வேலைகள், தொலைகாட்சிப் பெட்டி மற்றும் தொலைபேசி கருவிகள் போன்ற உபயோக கருவிகளை கொள்வனவு செய்தல், வங்கி சேமிப்பு கணக்குகளில் வைப்பு செய்தல் என்றவகையில் பயன்படுத்திக்கொண்டன. அதேநேரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்கள், மரண சடங்குகள் மற்றும் திருமணங்கள் போன்ற குடும்பத் தேவைகளுக்கும் அதேபோல எதிர்பாராத தேவைகளுக்கும் அந்த பணத்தை அவர்கள் பயன்படுத்திக்கொண்டார்கள்.

உற்பத்தி திறமையைக்கொண்ட காணிகளுக்கு சந்தையில் பற்றாகுறை நிலவியமை, விசேடமாக இழந்த காணிகளின் அருகாமையில் அமைந்த அல்லது அப்பிரதேசத்தில் அமைந்த காணிகளின் விலை ஏறியமை, நட்டஈட்டுப் பணம் தவணைமுறையில் கிடைத்தமை போன்ற காரணங்கள் கூட மீள் அமைத்துக்கொள்வதற்கான காணிகளை கொள்வனவு செய்தலின் சங்கடமான நிலையை உருவாக்கின. பொதுவாக எல்லா பயிர்களிலும் உற்பத்தி திறன் சார்ந்த ஒரு தெளிவான வீழ்ச்சிப்போக்கு காணக்கூடியதாக இருந்தது.

**அட்டவணை இரண்டு: பயிர்களின் உற்பத்தி திறனின் வீழ்ச்சி**

| பயிர் வகை | உற்பத்தி திறனின் வளர்ச்சி | மாற்றம் இல்லை | உற்பத்தி திறனின் வீழ்ச்சி | பயிர்செய்கைய நிறுத்தியமை |
|---|---|---|---|---|
| தேயிலை | 0.0% | 0.0% | 71.0% | 29.0% |
| இறப்பர் | 12.5% | 12.5% | 43.7% | 31.3% |
| கறுவா | 14.4% | 0.0% | 42.8% | 42.8% |

மூலாதாரம்: குடும்ப ஆராய்ச்சி, 2006

ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட குடும்பங்களின் 27 வீதமான குடும்பங்கள் மட்டுமே விவசாயத்தை தங்களுடைய பிரதான வருமான வழியாக கொண்டிருந்தன என்று கூறினாலும் 59% குடும்பங்கள் காணிகள் சுவீகரித்தலுக்கு முன் தங்களுடைய மேலதிக வருமான வழியொன்றாக விவசாயம் இருந்தது என்று கூறின. காணிகளை சுவீகரித்துக்கொண்ட பின்பு இந்த எண்ணிக்கை 12% என்ற மட்டத்திற்கு குறைந்ததுடன் பின்பு அது 33% என்ற மட்டத்தைக்கொண்டமைந்தது. ஒரு குறிப்பிடத்தக்க மேலதிக வருமானத்தை தந்த விவசாயத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் அதேநேரம் குடும்பத்தின் உணவு நுகர்வு சார்ந்த செலவின் அதிகரிப்பையும் இந்த மாற்றம் சுட்டிகாட்டியது. குடும்ப வருமானத்திலும் அதே போன்றே செலவுகளிலும் நேரடியான பாதிப்பை ஏற்படுவதற்கு நில உரிமையின் குறைவு காரணமாகியது. பணப்பயிர்களை (cash crops) போன்றே கலப்பு பயிர்களை (mixed crops) இழந்த குடும்பங்களிலும் இந்த மாற்றம் தெளிவாக காணக்கூடியதாக இருந்தது. தண்ணீர் தேங்கியிருத்தல், வெள்ளப்பெருக்கம் மற்றும் தண்ணீர் வழங்குவது தடைப்பட்டுப்போனமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற காணி சுவீகரித்தல் மற்றும் நெடுஞ்சாலை அமைக்கும் பணிகளின் காரணமாக ஏற்பட்ட இடையூறுகள் காரணமாகவும், அதே போன்று பிரதேசத்தில் ஒட்டுமொத்தமாக விவசாயத்தின் மீது ஏற்பட்ட இடையூறுகளின் காரணமாகவும், அத்துடன் காணிகளை கைப்பற்றிக்கொண்டமையுடன் சேர்ந்துவந்த குடியேறாத காலப்பிரிவில் காணி மற்றும் பயிர்களின் மீதான பாதுகாப்பு குறைந்தமை காரணமாகவும் தான் பணப்பயிர்களின் உற்பத்தி திறன் குறைந்தது என்று மக்கள் கருதுகிறார்கள்.

## மீண்டும் பழைய நிலைக்கு திரும்புதல்

விவசாயத்தை சார்ந்த சீவனோபாயங்கள் மறுபடியும் இயல்புநிலையை அடைவதற்கு இரு காரணிகள் இடையூறுகளாக அமைந்தன. ஏற்பட்ட இழப்பின் தீவிரத்தன்மையானது அதில் ஒன்றாகும். இடம்பெற்றுக்கொண்டிருந்த நெடுஞ் சாலையமைக்கும் நடவடிக்கைகள் விவசாய செயற்பாடுகளின் மீது தொடர்ச்சியாக இடையூறுகளை விளைவித்தமையானது இரண்டாவது காரணியாகும். சிறியளவில் இருந்து அதில் பெரும்பகுதியை இழந்தவர்களை விட காணியின் சிறிய அளவை இழந்தவர்களாகவோ அல்லது பெரியளவில் காணி இழந்தவர்களாகவோ இருந்தவர்களும், கறுவா, தேயிலை மற்றும் இறப்பர் போன்ற பணப்பயிர்களை இழந்தவர்களும் சிறந்த மட்டத்தில் இயல்புநிலைக்கு வரக்கூடியவர்களாக இருந்தார்கள். கிடைத்த நட்டஈட்டுப் பணத்தால் ஒரு காணியை கொள்வனவு செய்வதையோ அல்லது மிஞ்சிய காணியின் உற்பத்தி திறனை அதிகரித்துக்கொள்ளலின் வழியாகவோ இடைநிலையில் இருந்தவர்கள் இழந்த பகுதியை பற்றி கவலையடையாமல் இயல்புநிலை அடைக்கூடியவர்களாக இருந்தார்கள்.

பணப்பயிர்செய்கை காணிகளை அதிகமாக கொண்டிருந்த குடும்பங்கள் வளர்ச்சியடைந்த குடும்ப வருமானத்தை காட்டுகின்றவர்களாக இருந்தார்கள். பணப்பயிர்களின் உற்பத்திகளுக்கான, குறிப்பாக இறப்பர் மற்றும் தேயிலைப் போன்றவற்றிக்கான விலை சந்தையில் உயர்வடைந்தமை அதற்கு காரணமாகியது. அதே போன்று காணி விலை உயர்வடைந்தமையானது காணிகளை மறுபயிரிடுதலுக்கும், காணி சுவீகரிப்பு காரணமாக இழந்த குடும்ப வருமானத்தை வேறொரு வழிகளில் சம்பாதித்துக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றியடையவும், இயல்புநிலையை மீள் அடைவதலுக்கும் உதவியாக அமைந்தது. அது குடும்பங்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்செய்கையை மறுபடியும் தொடங்குவதற்கான உந்துசக்தியாக அமைந்தது. சிறப்பான பாதை வலையமைப்பொன்று அபிவிருத்தியடையும் பட்சத்தில் அதிவேக நெடுஞ்சாலையானது சந்தைகளை அடைவதற்கான வசதிகளை அதிகரிக்கும் என்ற நம்பிக்கையைகொண்டவர்களாக பெரும்பாலான தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தியாளர்கள் இருந்தார்கள்.

ஒரு கடினமான தொடக்க காலத்திற்கு பின்பு பணப்பயிர்களை இழந்தவர்கள் தங்களுடைய பயிர் செய்கைகளை மீள் மேற்கொள்வதில் ஒரு முன்னேற்றகரமான போக்கை காட்டினார்ககள். எவ்வாறாயினும் முழுமையான இயல்புநிலையை அடைவதற்கு மூன்று தொடக்கம் நான்கு வருடங்கள் எடுத்தன.

தங்களுடைய காணிகள் சுவீகரிக்கப்பட்டதன் காரணமாக நேரடியாகவே அதன் வருமானத்தை இழந்தவர்களும் அதேபோன்று தங்களுடைய பயிர்காணிகளை அடைய வழி இல்லாமல் போய் மிஞ்சிய காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாமல் போனதன் காரணமாக பணப்பயிர்களால் கிடைக்கப்பெறுகின்ற முழு வருமானமே மறைமுகமாக இழந்தவர்களும் தான் வருமானம் சரியும் போக்கைக்கொண்ட பிரதான குடும்பங்களாக இருந்தார்கள். "அந்த காணியை கைவிடுதல் பற்றி நான் ஒருபோதும் நினைக்கவே இல்லை. என்னுடைய பிள்ளைகளும் அங்கேதான் பிறந்தார்கள். எங்களுக்கு அந்த காணியில் இருந்து நல்ல வருமானம் கிடைத்தது. நான் கறுவா பயிர்செய்கை செய்திருந்தேன். அறுவடையின் போது ஐம்பதாயிரம் ரூபாய் அளவில் வருமானம் கிடைத்தது. என்னுடைய வீட்டிற்கு கிட்ட இன்னொரு அரசாங்க காணயிலும் நான் பயிர் செய்தேன். அது ஒரு கைவிடப்பட்ட காணி. பிரதேசத்து ஆட்கள் அந்த காணியில் கறுவா பயிர்செய்கை மேற்டகொண்டார்கள். அந்த காணியில் இருந்தும் வருமானம் கிடைத்தது"(விவசாயி, பெண், வயது 69, 2006).

காணிகளை மீள் பெற முடியாமல் போனமையும், பயிர் செய்கை நடவடிக்கைகளில் மீள் முதலீடு செய்யக்கூடியதாக நிதி வசதிகள் இல்லாமையும், சில குடும்பங்களுக்கு தங்களுடைய விவசாய நடவடிக்கைகளை ஏற்கனவே இருந்த மட்டத்திற்கு கொண்டுவருவதற்கான தடைகளாக அமைந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுப் பயிர்செய்கை

விவசாய நிலங்களை இழந்ததன் காரணமாக தீவிரமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பணம் அல்லாத உதவிகள் வழங்குவது தொடர்பாக இச்செயல் திட்டம் அதிக கவனம் செலுத்தி இருந்தது. அதாவது அதிக உற்பத்தி திறன்கொண்டுள்ள பயிர்வகைகளை அறிமுகப்படுத்தலின் வழியாக மிஞ்சியுள்ள காணிகளின் உற்பத்தியை அதிகரித்துக்கொள்ள உதவுதல், விவசாயத் திணைக்களம், சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களின் அதிகார சபை, கமநல சேவைத் திணைக்களம் மற்றும் உள்ளூர் மட்டத்து அரசு உத்தியோகத்தர்கள் என்ற வகையில் உதவி வழங்கக்கூடியவர்களை பற்றிய அறிவை புகட்டுதல் என்பன அதற்குள் உள்ளடங்கின. மேலும் வீட்டுத் தோட்ட வருமானத்தை இழந்த குடும்பங்களின் தொகையும் அதிகம். வெளியில் வேலை தேடிக்கொள்வதில் ஏற்பட்ட அழுத்தம் அதிகரித்தமையும் இன்னொரு காரணமாகும். தற்போது உள்ள வீட்டுக் காணியானது வீட்டுத் தோட்டம் மேற்கொள்ள முடியாதளவு மிகவும் சிறியது என்றும் தஙகளுடைய இழந்த காணியை விட குறைந்த செழிப்பானத்தன்மையே இந்த காணிகொண்டுள்ளது என்றும் அத்துடன் தற்போது பயிர்களுக்கு போதியளவு தண்ணீர் வசதி இல்லை என்றும் அவர்கள் கருதினார்கள்.

வருமானத்தை பழைய நிலைக்குகொண்டுவரும நிகழ்ச்சியின் கீழ் பிரதானமாகவே மீள்குடியேற்றல் தளங்களில் வசிக்கின்ற 348 குடும்பங்களுக்கு உயிரியல் சார் பசளைகளை (bio fertilizers) பாவித்தல் தொடர்பானதும் மண்ணின் செழிப்பானத்தன்னமைமயை வளர்க்கும் உத்திகளை சார்ந்ததுான பயிற்சிகள் வழங்கப்பட்டன. வருமானத்தை பழைய நிலைக்கு கொண்டுவரும் இந்த நிகழ்ச்சியின் கீழ் குடும்பங்களுக்கு புதிய நாற்று வகைகள் வழங்கப்பட்டன. சுயமாகவே மீள் குடியேறிய குடும்பங்கள் உள்ளடங்கலாக ஏனையவர்கள் தங்கள் விருப்பின்படி இந்நிகழ்ச்சித் திட்டத்தில் இணைய தகுதியுடையவர்களாக இருந்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் பங்குக்கொண்டவர்களின் 83 வீதத்திற்கும் அதிகமான குடும்பங்கள் தங்களுடைய வீட்டுத்தோட்டங்களில் இருந்து நல்ல அறுவடையை பெற்றுக்கொண்டன. அவை பிரதானமாகவே குடும்பத் தேவைக்காக பயன்படுத்திக்கொண்டதாக இருந்தாலும் அது ஒரு மேலதிகமான பண வருமானத்தையும் தந்தது. “நாங்கள் பயிற்றங்காய், வெண்டிக்காய் மற்றும் பசலிக்கீரைப் போன்றவை பயிரிட்டோம். காய்கறிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுத்தேவைக்கு எடுத்துக்கொண்டு பசலிக்கீரையை விற்பனை செய்தோம். பப்பாசி மரங்கள் இப்பவும் காய்க்கின்றன. பப்பாசி மரங்களில் இருந்து ஒரு மாதத்திகு ஆயிரம் ரூபாய் அளவில் சம்பாதித்தோம்" (குடும்ப பெண், வயது 65, மில்லன்னியா, 2011). இந்த வீட்டுத்தோட்ட செயல் திட்டத்தில் பங்குக்கொண்ட சகலரும் இடம்பெயர முன்பு வீட்டுத்தோட்ட பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டவர்களாகவே இருந்தார்கள்.

மீள்குடியேற்றல் தளங்களை பசுமையாக்குவதில் இந்த வீட்டுத்தோட்ட நிகழ்ச்சி பெரும் பங்களிப்பை வழங்கியது. இந்த மீள்குடியேற்றத் தளங்களானது வெறும் காணிகளாக இருந்து முதலாவதாக குடியேற்றம் மேற்கொள்ளப்பட்ட காணிகளாகும். பல குடும்பங்கள் தங்களுடைய சொந்த முயற்சியால் இந்த நிலைமாற்றம் இடம்பெற்றதாக கருதினாலும் ஏனையோர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீட்டுத்தோட்ட நிகழ்ச்சியின் பங்களிப்பு தொடர்பாக நன்றியை தெரிவித்தார்கள்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஈடுபாடுகள், குறிப்பாக இந்த செயல்திட்ட அமுலாக்கல் காலப்பிரிவின் போது அதன் முன்னேற்றத்தை சோதிக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்ட முறையான வருகைகள் மக்கள் வரவேற்பை பெற்றன. மேலும் புரிந்துகொள்ளலை ஏற்படுத்துவதற்கு மனை சங்கங்களின் (housing societies) ஈடுபாட்டையும் பிராந்திய விவசாய திணைக்களத்தால் வழங்கப்பட்ட நிபுனத்துவ உள்ளீடுகளும் (expert inputs) அவற்றின் தொடர்ச்சியானத்தன்மையும் மிக முக்கியமானதாக சாதகமான பண்புகளாக பிரபல்யமடைந்தன.

## வீட்டுத்தோட்ட நன்மைகளை அனுபவித்தல்

ஐம்பத்திரெண்டு வயதுடைய சிறிபால மனைவியுடனும் வளர்ந்த இரு பிள்ளைகளுடனும் வசிக்கிறார். சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தவரான அவர் பல அரசு நிறுவனங்களில் தொழிலாளியாக பணிபுரிந்தவர் ஆவார். இந்த தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் காரணமாக இடம்பெயர முன்பு அவருடைய குடும்பம் தென்னை மரங்களைக்கொண்டதும் காய்க்கும் பலா, எலுமிச்சை மற்றும் இரம்புட்டான் போன்ற மரங்களைக்கொண்டதும், அதேநேரம் வீட்டுத்தேவைக்கான காய்கறிகளை தருகின்றதுமான எண்பது பேர்சஸ் அளவைக்கொண்ட பெருங்காணியில் தான் வசித்து வந்துள்ளார். வீட்டுத்தேவைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையானளவு தேங்காய் அவருக்கு கிடைப்பதுடன் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஐந்நூறில் இருந்து எழுநூற்றி ஐம்பது வரையிலான தேங்காய்களை விற்பனை செய்து குடும்பத்திற்கு மேலதிக வருமானத்தை பெறக்கூடியதாக இருந்தது.

அதிவேக நெடுஞ்சாலை அமைத்தல் காரணமாக தங்களுடைய காணியை இழந்த பின்பு இக்குடும்பம் மீள்குடியேற்றல்தளமொன்றில் அமைந்த இருபது பேர்சஸ் அளவிலான ஒரு நிலத்துண்டிற்கு மீள்குடியேற சென்றது. சிறிபாலவின் மனைவியும் மகனும் தொழில்புரிகின்றவராக இருந்த காரணத்தால் அவருடைய குடும்பத்தின் பிரதான வருமான சம்பாதிப்பாளராக சிறிபால இருக்கவில்லை. எனவே அவர் வீட்டுத்தோட்டம் பற்றி அக்கறைக்காட்டினார். அவர் வீட்டுத்தேவைக்காக கத்தரிக்காய், வெண்டிக்காய், வல்லாரை, சாரணை, கங்குங், குகுலல கிழங்கு, வத்தாலை கிழங்குப் போன்றவற்றை பயிர் செய்தார்.

வீட்டுத்தோட்ட நிகழ்ச்சியின் கீழ் அவருக்கு தென்னங்கன்றுகளும், மா, இரம்புட்டான், எலுமிச்சை, தோடை, கொய்யா போன்ற மரக்கன்றுகளும் பலவகையான காய்கறி விதைகளும் கிடைத்தன. மிகவும் குறைந்த செலவைக்கொண்டதாகவும் வீடுவரை கொண்டுவந்து தருகின்றதாகவும் இந்த உதவி இருந்தது. சில பழ மரங்களும் தென்னை மரங்களும் காய்க்கும் கட்டத்தை அடைந்திருந்ததுடன் காய்கறி பயிர்களில் இருந்து கிடைத்த அறுவடை குடும்ப பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டது.

சிறிபால பயிர் பாத்திகளை தயாரித்தல், பைகளில் அல்லது சாடிகளில் கன்றுகளை நடுதல், கலப்பு உரம் (compost) தயாரித்தலும், வேலியடைத்தலும் போன்றவற்றினை சார்ந்த பயிற்சியும் ஆலோசனையும் பெற்றிருந்தார். எவ்வாறாயினும் சில பயிற்சிகளும் ஆலோசனைகளும் பயன்பாட்டிற்கு உகந்தவையாக இல்லை என்பது தான் அவருடைய கருத்து. உதாரணமாக சாடிகளில் வளர்க்கும்பட்சத்தில் அடிக்கடி தண்ணீரிடுதல் அவசியம். மேலும் மீள்குடியேற்றல் தளங்களில் கலப்பு உரம் தயாரிப்பதற்கு தேவையான புல் மற்றும் இலைகள் போன்றவை போதியளவு கிடைக்காத காரணத்தால் கலப்பு எரு தயாரித்தலானது கடினமானதொன்றாகும். சிறிபாலவின் கருத்தின்படி பயிற்சி மிகவும் பிரயோசனமாக அமைவது பயிர் செய்கைத் தொடர்பான அரிதளவிலான அறிவைக்கொண்டவர்களுக்கேயொழிய ஏற்கனவே விவசாயத்தில் ஈடுபட்டு அறிவையும் அனுபவத்தையும் கொண்டுள்ள தன்னை போன்றவர்களுக்கு அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் அத்தியாயம்

## வியாபாரங்களை மீள்தொடங்குதல்

தங்களுடைய சீவனோபாயங்களை அபிவிருத்தி செய்துக்கொள்வதற்காகவோ அல்லது செலவை சமாளித்துக்கொள்வதற்காகவோ பெரும்பாலான மக்கள் முதலீடு செய்தலின் மீது அதிக அக்கறைக்காட்டினார்கள். மீள்குடியேறிய மக்கள் மீண்டும் இயல்பு நிலையடைவதலுடன் நெருங்கிய தொடர்பை கொண்டதாக அவர்களுடைய சம்பாதிக்கும் கொள்வளவு இருந்த காரணத்தால் இது தெளிவாகவே ஒரு முக்கியமான பிரச்சினையாக இருந்தது. எனவே ஏற்கனவே மிகவும் பரிதாபத்திற்குரிய ஏழைகளாக இருந்திராத சில வறிய மக்கள் தங்களுடைய ஆகச்சிறிய சொத்துக்களையும் சமூக மூலதனத்தையும் இழந்ததன் காரணமாக மிகவும் பலவீனமான நிலையை அடைந்தவர்களாக இருந்தார்கள். உதாரணமாக குறிப்பிட்ட பிரதேசத்தில் இயங்கிய ஒரு தொழில்துறை நிறுவனத்து ஊழியர்களுக்கு சமைத்த பகல் உணவு பொதிகளை விற்பனைசெய்து பெற்ற பணத்தை அடிப்படை வருமானமாக கொண்டிருந்த ஒரு குடும்பம் அந்த வேலைகளுக்கு அயலில் உள்ள வளங்களை பயன்படுத்திக்கொண்டது. ஆயினும் ஒரு புதிய இடத்தில் அக்குடும்பம் தனது வியாபாரத்தை மீளத்தொடங்கும்போது புதிய வாடிக்கையாளர்களையும் அதேபோல விறகு, மரக்கறி போன்ற வளங்களையும் புதிதாக தேடிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனவே தங்களுடைய வசிப்பிடங்களை வெறுக்கும் சூழலைக்கொண்டிருந்ததன் காரணமாக மக்களில் பலர் தங்களுடைய சூழ்நிலைகளையும் வாழும் சூழலையும் அபிவிருத்தி செய்துக்கொள்வதில் அல்லது மீள் அமைப்பிடத்தை தயார்படுத்திக்கொள்வதில் சிக்கல்களுக்கு முகங்கொடுத்தார்கள். "எங்களுடைய காணி சுவீகரிக்கப்பட்டதன் பின்பு எங்களுடைய சம்பாதிக்கும் சக்தி முழுமையாகவே வீழ்ச்சியடைந்தது. எங்களுடைய வியாபாரத்தை இழந்தது தான் இதற்கு காரணம். நான் இப்போது அரசாங்கத்தையும் என்னுடைய பிள்ளைகளையும் நம்பித்தான் தங்கி வாழ்கின்றேன். வியாபாரம் செய்த அந்த நாட்களில் நான் ஒரு நாளுக்கு ஐந்நூறு ரூபாவிற்கு மேல் உழைத்தேன். இப்பொழுது அந்த ஒன்றுமே கிடையாது. நாங்கள் இப்பொழுது ஆயிரம் ரூபாய் சம்பாதித்தாலும் கூட அது மருந்து வாங்ககூட போதாது. இப்பொழுது நாங்கள் எங்களுடைய கடமைகளை செய்ய முடியாத நிலையில் இருக்கின்றோம். ஒரு குடும்ப சடங்குக்கோ அல்லது வோறொரு புனித காரியத்திலோ பங்குகொள்ளக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் அல்லது உதவி செய்யக்கூடிய நிலையில் நாங்கள் இல்லை. எங்களால் அயலவர்களுக்கும் உதவி செய்ய முடியாது. ஆனாலும் அன்றைய நாட்களில் அப்படி இல்லை. எந்தவொரு குறையும் இல்லாமல் எல்லாம் செய்யக்கூடிய நிலையில் நாங்கள் இருந்தோம்" (வியாபாரி, ஆண், வயது 80, 2006).

தொழில் முயற்சிகளை இயல்புநிலைக்கு கொண்டுவருவதில் இன்னும் சில காரணங்கள் தடையாக இருந்தன. பெரிய இடவசதியைக்கொண்டதாக இயங்கிய பெரும்பாலான வியாபாரங்கள் சிறிய வெளிகளுக்கு சென்றமையும் அவர்களுடைய வியாபார நடவடிக்கைகளின் மீது ஏற்பட்ட தடங்களையும் இவற்றிக்குள் குறிப்பிடலாம். வணிக ரீதியான செயற்பாடுகள் கைவிடப்பட்ட சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் அதற்கு காரணமாக இருந்தது அந்த வியாபாரங்களை இயங்கிவைத்தவர்களின் வயது ஆகும். அதிவேக நெடுஞ்சாலைக்கு சமீபமாக மீள் தாபிக்கப்பட்ட வியாபாரங்கள் கட்டட வேலைகள் காரணமாக பாதிக்கப்பட்டன. அது மக்களுக்கு தங்களுடைய வியாபாரங்களை அபிவிருத்தி செய்துக்கொள்வதற்கான தீர்மானங்களை மேற்கொள்வதில் கடினமான நிலைமைகளை உருவாக்கின. பல சிறிய வியாபாரங்கள் தங்களுடைய வாடிக்கையாளர் அடித்தளத்தை படிப்படியாக இழந்தமைக்கு வாகன போக்குவரத்து நெரிசலும் நடைபாதை நெரிசலும் காரணங்களாக அமைந்தன.

## வருமானங்களிலும் சீவனோபாயங்களிலும் ஏற்பட்ட மாற்றங்கள்:

அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள், செங்கல் உற்பத்தி நிலையங்கள், தும்புக்கயிறு உற்பத்தி நிலையங்கள், கல் உடைக்கும் இடங்கள், வாகன சுத்திகரிப்பு நிலையங்கள் என்பனவற்றினை கொண்ட முறையான தொழிற் முயற்சிகள் பல பாதிக்கப்பட்டன. எவ்வாறாயினும் சிறிய மளிகை கடைகள், இரும்பு கடைகள் உட்பட பெரும்பாலன தொழிற்முயற்சிகள் முறைசாராதவையாகதான் இருந்தன. முழு குடும்பங்களின் ஏறக்குறைய கால்வாசி குடும்பங்கள் இடப்பெயர்வுக்கு முன்பு பிரதானமாகவே ஆடு மாடுகள் மற்றும் கோழி போன்ற கால்நடை வளர்ப்பு சார்ந்த உற்பத்திகளை சொந்தமாக்கிகொண்டிருந்தன. ஆயினும் மீள்குடியேற்றலுக்கு பின்பு அவர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேற்பட்டவர்கள் தங்களுடைய இந்த செயற்பாட்டை கைவிட்டவர்களாக அல்லது குறைத்துக் கொண்டவர்களாக உள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்குடியேற்றல் தளங்களில் நிலவிய வீட்டுக்காணியின் குறுகிய விஸ்தீரணமும், வழக்கப்படியானதன்மையும் (formality) குறிப்பாக பெண்களுடைய மிக முக்கியமான வருமான வழியாக இருந்த கால்நடை வளர்ப்பை முன்னெடுத்துச் செல்வதற்கு தடைகளாக அமைந்தன.

## நட்டஈடும் கொடுப்பனவுகளும்

வழங்கப்பட்ட நட்டஈட்டுத்தொகையின் அளவு என்பது இயல்புநிலைக்கு கொண்டுவருதல் என்ற செயற்பாட்டின் மீது செல்வாக்கு செலுத்திய ஒரு மிக முக்கியமான காரணியாக இருந்தது என்பது ஆச்சரியப்படக்கூடியதொன்றல்ல. தங்களுடைய சீவனோபாய நடவடிக்கைகளை மீள் தாபித்துக்கொள்ளும் வரை வாழ்க்கையை முன்னெடுத்துச்செல்லக்கூடியவர்களாக இருந்த மக்கள் மீள் அமைத்துக்கொள்ளலுடன் தொடர்புடைய பாதிப்புகளை குறைந்தளவில் அனுபவித்தவர்களாக இருந்தார்கள். அதற்கு மாறாக மிகக் குறைந்த நட்டஈட்டை பெற்றவையாக இருந்த தொழில்முயற்சிகள் குறைந்த உதவிகளையே பெற்றன.

நட்டஈடு உரிமைத்துவத்திற்கு மேலதிகமாக தொழில்முயற்சிகளை இழந்த குடும்பங்களின் 70 வீதமான குடும்பங்கள் சீவனோபாயத்தை சார்ந்த ஒரு கொடுப்பனவை பெற்றன. அதேநேரம் 50 வீதத்திற்கும் அதிகமான குடும்பங்கள் தங்களுடைய வியாபாரங்களை மீள் தாபித்துக்கொள்வதற்கான இடமாற்றுக் கொடுப்பனவை (shifting allowance) பெற்றன. வீட்டு காணியுடன் இணைந்ததாகவே பல எண்ணிக்கையான தொழில்முயற்சிகள் இருந்தமை இடமாற்றுக் கொடுப்பனவை பெற்றவீதம் குறைந்ததாக இருந்தமைக்கு காரணமாக குறிப்பிடலாம். இதற்கு மேலதிகமாக பல வியாபாரங்கள் இன்னமும் மீள் தாபிக்கப்படாமல் இருந்தமையும் காரணமாக இருந்தது.

குடும்பத்தால் அல்லது தனிநபர்களால் மேற்கொள்ளப்பட்ட தொழில் முயற்சியொன்றில் வேலை செய்த முறைசாரா ஊழியரொருவர் பதினைந்தாயிரம் ரூபாய் (ஒரு மாதத்திற்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் என்றபடி ஆறுமாத காலத்திற்காக கணிப்பிடப்பட்டது) கொடுப்பனவை பெற தகுதியானார். ஆயினும் இது ஒழுங்காக கிடைத்தது என்று கூற முடியாது. ஒரு சிலருக்கு கிடைத்தாலும் சிலருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கவில்லை. இந்த கொடுப்பனவுக்காக ஊழியர்களை அடையாளம் காண்பதையும் நட்டஈடு வழங்குவதையும் எஜமான்களின் வழியாக மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக குறிப்பிட்ட ஊழியர்களில் சிலர் அதில் உள்வாங்கப்பட்டாதவர்களாக இருந்தார்கள். "வெளியேறும்போது எனக்கு எந்தவொரு நட்டஈடும் கிடைக்கவில்லை. மற்றைய ஊழியர்களுக்கு கூட அவர்களுடைய சம்பளத்தை தவிர வேறு எந்தொரு காசும் கிடைக்கவில்லை. எங்களுடைய முதலாளிக்கு நட்டஈடு கிடைத்தது. அரசாங்கம் தான் எங்களுக்குரிய நட்டஈட்டுத்தொகையை வழங்க வேண்டும் என்று முதலாளி கூறினார். மற்றைய கடைகளில் வேலை செய்த ஆக்களுக்கு எப்படி என்று தெரியாது. ஆயினும் பக்கத்து கடையில் வேலைச் செய்த என்னுடைய நண்பனுக்கு எந்தொரு நட்டஈடும் கிடைக்கவில்லை என்பது எனக்கு தெரியும்" (முறைசாரா ஊழியர், ஆண், வயது 30, 2006).

தங்களுடைய வியாபாரங்களை இழந்த அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு பணமல்லாத உதவிகளும் கிடைத்தன. அதாவது மீள் தாபித்துக்கொள்வதற்கான காணித்துண்டுகளை அடையாளங்காணவும், கொள்வனவுசெய்யவும் உதவுதல், பணத்தை மீள் முதலீடு செய்வதற்கும் வேறொரு இடத்தில் வியாபாரத்தை அமைத்துக்கொள்வதற்கும் தொழில் சார்ந்த உதவிகளை வழங்குதல் என்றவகையில் இந்த உதவிகள் அமைந்தன. சில பெரிய வியாபாரங்கள் நட்டஈட்டு கொடுப்பனவுகளை வழங்குவதை பூர்த்தி செய்வதற்கு வங்கிகளில் இருந்து பணம் கடனாக பெற்றுக்கொண்டன. ஆயினும் ஒருமேலதிக வருமானத்தை அடைந்தவர்களாக இருந்தவர்களுக்கு கூட சீவனோபாயத்தை மீள்தாபித்துக்கொள்ளல் என்பது ஒரு கடினமான சவாலாக தான் இருந்தது. "ஒரு வங்கிக்கடனை எடுத்துக்கொண்டு நான் இந்த கல் உடைக்கும் மெஷிணை விலைக்கு வாங்கினேன். ஆனாலும் எங்களுடைய சொந்த கல் உடைக்கும் இடத்தில் போல இங்கு வேலை செய்ய முடியாது. இப்ப எங்களிடம் வேலை செய்கிறவர்களும் குறைவு. பெரிய கற்களை உடைக்கும் கருவிகள் வீட்டு பின்புறத்தில் குவிந்து கிடக்கின்றன. புதிய கருங்கற்களை தேடிக்கொள்ளும்வரை என்னால் அவற்றினை பயன்படுத்திக்கொள்ள முடியாது. எனக்கு கிடைத்த நட்டஈட்டை வைத்துக்கொண்டு என்னால் ஒரு கருங்கல் காணியை விலைக்கு வாங்கமுடியாது. நான் பல காணிகளை போய் பார்த்தேன். பயிர் செய்யப்படாது இருந்த மூன்று ஏக்கர் காணியொன்றினை நான் கேட்டுப் பார்த்தேன். அது ஒரு பெருந்தோட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனத்திற்கு சொந்தமான காணி. அந்த காணியின் விலையை குறைக்க சொல்லி எழுதிய கடிதமொன்றினை நான் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருந்து பெற்றுக்கொண்டேன். தங்களுக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை என்று அந்த நிறுவனம் சொன்னது. நான் இப்ப அதனை நீண்டகால குத்தகைக்கு எடுக்க முயற்சித்துக்கொண்டு இருக்கின்றேன்" (வியாபாரி, ஆண், வயது 46, 2006).

ஒரு மேலதிக வருமான வழியாக சிறிய வியாபாரங்களை மேற்கொண்டவர்கள் தங்களுக்கு கிடைத்த நட்டஈட்டு பணத்தை மிகவும் அரிதாகவே முதலீடு செய்தார்கள். தங்களுடைய வர்த்தக இடங்களை இழந்தவர்களில் பலர் தங்களுடைய வீட்டுக்காணியையும் இழந்தவர்களாக தான் இருந்தார்கள். அவர்கள் அதே கட்டமைப்பிற்குள்ளேயே தங்களுடைய வியாபாரங்களையும் முன்னெடுத்து சென்றவர்களாக இருந்த காரணத்தால் அவர்கள் குடும்பத்தின் துணைவருமான வழியை இழந்தவர்களானார்கள். அவர்களுக்கு கிடைத்த நட்டஈட்டுப் பணமானது இடைப்பட்ட காலத்திலும் மீள் தாபிக்கப்படுதல் காலத்திலும் குடும்ப செலவினங்களுக்கே முடிந்துவிட்டது.

## இயல்புநிலையடைதல்

இடம்பெயர்ந்ததன் காரணமாக ஏற்பட்ட இடையூறுகளும் அதேநேரம் பிரதேசத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருந்த வீதி கட்டட வேலைகள் எப்பொழுது முடியும் என்ற நிச்சயமற்றத்தன்மையும் காரணமாகவும் பிரதேசத்தில் நீண்டகாலத்து பாதிப்புகளை ஏற்படுத்தின. இதன் காரணமாக பல சிறிய வியாபாரிகள் முதலீடு செய்தல் மற்றும் மீள்தொடங்குதல் சார்ந்த தீர்மானங்களை எடுப்பதை பின்தள்ளிப்போட்டார்கள்.

நம்பத்தகுந்த தகவல்களில் பற்றாக்குறையானது இடைநிலையளவைக்கொண்ட வியாபாரங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுப்பதில் பாதகமானதாக அமைந்தது. சில நேரங்களில் இத்தகைய வியாபாரங்கள் கடுமையான பாதிப்புகளுக்கு உட்பட்டவையாகவும் இருந்தன. குருந்துகஹ ஹெதெப்ம என்ற இடத்தின் பழைய பட்டபொல வீதியில் அமைந்த வணிக ரீதியாக மீள்குடியேறியவர்களின் அநுபவங்களை இதற்கான சிறந்தொரு உதாரணமாக எடுத்துக்காட்டலாம். தங்களுடைய வியாபாரங்களை வெற்றிகரமாக மேற்கொள்ள தொழில் முயற்சியாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவொன்றுக்கு வழிகாட்டும் இடமாக இந்த இடம் அமைக்கப்பட்டதாக இருந்தாலும் நடந்தது அதற்கு முழுமையாகவே முரணான ஒன்றாகும்.

"வீதி அபிவிருத்தி அதிகார சபையால் ஒரு வணிக ரீதியான காணியாக வழங்கப்பட்ட ஏழு பேர்சஸ் காணியை நாங்கள் வாங்கிக்கொண்டோம். நட்டஈடாக கிடைத்த முழு பணத்தையும், உபகரணங்களை விற்பனை செய்து கிடைக்கப்பெற்ற பணத்தையும் அத்துடன் மூன்று இலட்சம் ரூபாய் கடன் பணத்தையும் சேர்த்துக்கொண்டு காணியை வாங்கிக்கொண்ட நாங்கள் அங்கு நான்கு அறைகளைக்கொண்ட ஒரு வியாபார நிலைய கட்டடத்தை கட்டினோம். இந்த புதிய இடம் நகரத்தின் நடுவில் இருந்தபடியால் கடைகளுக்கு நல்ல இடம் என்று தான் நாங்கள் கருதினோம். ஆனாலும் புதிய நெடுஞ்சாலை வேறொரு திசையால் தான் போகிறது என்பது இப்போது தான் எங்களுக்கு தெரிய வந்தது. எங்களுடைய புதிய கடைகள் இப்போது அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திற்கு மறுபுறத்தில் ஒருமுனை மூடிய ஒரு வீதியில் தான் உள்ளது. இன்னமும் எங்களால் வியாபார நடவடிக்கைகளைத் தொடரக்கூடிய நிலை இல்லை. இந்த வீதி அமைப்பு வேலைகள் முடிந்து பிரதேசம் அபிவிருத்தியடைந்த பின்பு எங்கள் வியாபாரங்களை தொடங்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் தான் நாங்கள் உள்ளோம். அது எப்போது சாத்தியமாகும் என்பது பற்றி எங்களுக்கு தெரியாது" (வியாபார நிலைய உரிமையாளர், ஆண், வயது 49, 2006).

வணிக ரீதியான செயல்பாடுகளை முழுமையாகவே கைவிட்டவர்களும், வணிக ரீதியானதாக இல்லாத வருமான வழிகளுக்கு மாறியவர்களும், மீண்டும் தொடங்குவதற்கு இன்னமும் காத்துக்கொண்டிருப்பவர்களும் இன்னமும் மீள்தொடங்காத தொழில் முயற்சியாளர்களுக்குள் உள்ளடங்கினர். வியாபாரங்களை மீள்தொடங்கியவர்கள் பெரும்பாலும் தங்களுடைய தொழில் முயற்சியின் அளவை குறைத்துக்கொண்டு தொடங்கியவர்களாகவோ அல்லது புதிய தொழில் முயற்சியொன்றினை தொடங்கியவர்களாகவோ தான் இருந்தார்கள்.

வருமானத்தை மீள் தாபித்துக்கொள்ளல் நிகழ்ச்சியின் கீழ் செயல்திட்ட சூழ்நிலையில் தொழில்முயற்சி அபிவிருத்தி சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டன. வேலை இழந்தவர்களாக அல்லது வருமானம் இல்லாதவர்களாக இருந்த மிகவும் பலவீனமான குடும்பங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர்களுக்கு தொழில்களை தேடிக்கொள்ள இந்த நிகழ்ச்சி உதவியது. தன்னுடைய வீட்டை கட்டிக்கொள்வதற்கோ அல்லது ஒரு வாடகை அறையை தேடிக்கொள்ளவோ முடியாமலும் வருமானத்தை சம்பாதித்துக்கொள்ள முடியாமலும் இருந்த ஒரு குடும்ப பெண்ணுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உதவி கிடைத்தது. ஒரு நிரந்தர சீவனோபாயம் இல்லாமல் ஒரு வீட்டில் தனியாக இருந்த அவள் இயல்புநிலையடைவதற்கு இந்த உதவி மிக முக்கியமான பங்களிப்பை வழங்கியது. எவ்வாறாயினும் வருமானம் மீள் தாபித்துக்கொள்ளல் நிகழ்ச்சியானது வணிக ரீதியான சொத்தோ அல்லது விவசாய நிலமோ என்றவகையில் அடிப்படை சீவனோபாயத்தை இழந்தவர்களை விட பௌதிக ரீதியாக இடம்பெயர்ந்த குடும்பங்களின் மீதே முக்கிய கவனம் செலுத்தியது.

புதிய திறன்களை வளர்த்துக்கொள்ள உதவுகின்றவையான காளான் வளர்த்தல், தையல் வேலைகள் போன்றவை சார்ந்த பயிற்சிகள் வருமான மீள் சம்பாதித்துக்கொள்ளல் நிகழ்ச்சியின் கீழ் வழங்கப்பட்டன. அதேநேரம் சந்தை வாய்ப்புகளைத் தேடிக்கொள்ளல் தொடர்பான உதவிகளும் அவர்களுக்குத் தேவையாக இருந்தன. வழங்கப்பட்ட பயிற்சிகளின் தரத்தை பற்றி மக்கள் பொதுவாக மகிழ்ச்சியடைந்தவர்களாக இருந்தாலும் கூட நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி இல்லாமை, தங்களுடைய வயதுடனும் திறன்களுடனும் அதேநேரம் நிலைமைகளுடனும் அவை பொருந்துவதாக அமையாமை என்பவை பங்குக்கொண்டவர்களை அதைரியப்படுத்துவதாக அமைந்தன.

தங்களுடைய தேவையானது நிதி சார்ந்த உதவிகளே ஆகும் என்று பல எண்ணிக்கையான குடும்பங்கள் கூறினாலும் வருமான மீள் தாபித்துக்கொள்ளல் நிகழ்ச்சியின் கீழ் வழங்கப்பட்ட கடனை பெற்றவர்கள் மிகவும் சிலரே ஆவார்கள். கடனை பெறுவதற்கான வழிமுறையானது மிகவும் கடினமானதாக உள்ளது என்றும் பிணையாளிகளாக (guarantors) கையொப்பமிடுவதற்கு இரு அரசு உத்தியோகத்தர்களை தேடிக்கொள்ளல் என்பது தங்களால் முடியாத காரியம் என்றும் அவர்கள் கருதினார்கள். "நாங்கள் ஒரு கடனை கேட்கும் போது அவர்கள் ஐம்பதாயிரம் ரூபாய் கடனாக வழங்குவதற்கு தாங்கள் தயார் என்று சொன்னார்கள். வீட்டிலும் கடையிலும் மிச்சமாக இருந்த வேலைகளை அந்த கடனை பயன்படுத்திக் கொண்டு செய்து முடிக்கலாம் என்று தான் நான் திட்டமிட்டிருந்தேன். ஆனாலும் அதற்கு அரசாங்க ஊழியர்கள் இருவர் கையொப்பமிடுவது அவசியம். நாங்கள் எங்கு போய் கையொப்பமிடுவதற்கு அவர்களை பிடிப்பது?" (வியாபார உரிமையாளர், பெண், வயது 40, 2006).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையோர்கள் எவ்வாறாயினும் வருமான மீள் தாபித்துக்கொள்ளல் நிகழ்ச்சிக்கு வெளியில் தங்களுடைய தேவையுடன் பொருந்துகின்றதான கடன் திட்டங்களை தேடிக்கொள்வதில் வெற்றிக்கண்டார்கள். "நான் இலங்கை மத்திய வங்கியின் "இசுறு" நிகழ்ச்சியில் சேர்ந்திருந்தேன். அவர்கள் எங்களுக்கு தொழில்முயற்சி அபிவிருத்தி பற்றி பயிற்சியை வழங்கி மிக குறைந்த வட்டிக்கு கடன் வாங்குவதற்கு உதவினார்கள். ஒரு சிறிய கடையை தொடங்குவதற்கு எனக்கு ஐம்பதாயிரம் ரூபாய் கடன் கிடைத்தது. கடையில் பாவிக்க இறாக்கைகளும் அவர்களே தந்தார்கள்" (வியாபார நிலைய உரிமையாளர், பெண், வயது 51, 2006).

சில தொழில்முயற்சிகள் மீள் தொடங்கப்பட்டதாக இருந்தாலும் பல தொழில்முயற்சிகள் இன்னமும் உறுதியற்ற நிலையிலே இருந்தன. பெரும் தொழில் முயற்சிகளின் இயல்புநிலையடைதலானது உயர்ந்த மட்டத்தில் இருந்தது. மிக அதிகமான முதலீட்டையும் இலகுவாக இயல்புநிலையடையும் தன்மையும் கொண்டிருந்த அவை ஏற்கனவே இருந்தது போலவே உற்பத்தியை மற்றும் சந்தைப்படுத்தலை சார்ந்த பல தொடர்புகளை பராமரித்துக் கொள்ளக்கூடியவையாக இருந்தன. உதாரணமாக ஒரு வியாபாரம் முன்பு இருந்த இடத்திற்கு மிகவும் அருகாமையில் மீள்தொடங்ககூடியதாக இருந்த சந்தர்ப்பங்களிலும், அதே ஊழியர்களை வேலையில் அமர்த்தக்கூடியதாக இருந்த சந்தர்ப்பங்களிலும், அதே கருவிகளை பயன்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருந்த சந்தர்ப்பங்களிலும் துரிதமாக இயல்புநிலையடைந்தது.

முறையான ஊழியர்களுக்குள் நிலவிய வலுவான போக்கானது வணிக ரீதியான தொழில் முயற்சியை மீண்டும் தொடங்கியதுடன் அத்துடன் மீள் இணைவதே ஆகும். இதற்கு பிரதான காரணமாக அமைந்தது இந்த பிரதேசங்களில் முறையான தொழில்வாய்ப்புகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருந்தமையே ஆகும். சிலநேரம் சில ஊழியர்கள் சந்தை வாய்ப்பைக் கொண்டதான தொழில் சார்ந்த திறன்களை – உதாரணமாக கணக்கியல் போன்ற திறன்களை– கொண்டவர்களாக இருந்த சந்தர்ப்பங்களில் அவர்கள் புதிய தொழில்களுகக் மாறினார்கள். ஒரு வியாபாரத்தை மீள் தொடங்குவதற்கான காலப்பிரிவானது ஆறு மாதத்தில் இருந்து தொடங்கி நீண்ட காலம் நீடித்து சென்றதன் காரணமாக காத்திருக்க வேண்டிய நிலைமையும் அவ்வளவு நீண்ட காலத்திற்கு வருமானம் கிடைக்கின்ற ஒரு தொழிலில் ஈடுபடாமல் சமாளித்துக்கொள்ளக்கூடிய நிலைமை பல குடும்பங்களுக்கு இல்லை என்ற நிலைமையும் இதற்கு காரணமாகியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் ஈடுபட்ட வணிக ரீதியான தொழில் முயற்சியுடன் தொடர்ச்சியாக சேர்ந்து இருக்கும் போக்கானது முறைசார்ந்த தொழிலாளர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது முறைசாரா தொழிலாளர்களிடம் குறைவாகவே காணக்கூடியதாக இருந்தது. அவர்களும் ஒரு மாற்றுத் தொழிலைத் தேடிக்கொள்ளும்வரை ஒரு சிறிது காலத்திற்கு தொழிலற்றவர்களாக தான் இருந்தார்கள். அவர்களுக்குள் கட்டட வேலைகள் சாந்த திறன்களைக்கொண்டிருந்தவர்கள் அல்லது ஒப்பந்தங்களின் வலையமைப்பிற்குள் நிலைநிறுத்திக்கொண்டவர்கள் மிகவும் வேகமாக இயல்புநிலையடைந்தார்கள்.

தொழில் முயற்சிகளை மீள் தாபித்துக்கொள்ள ஒரு காணி தேவையாக உள்ளமைக்கும் வணிக ரீதியான செயல்பாடுகளை மீள் தொடங்குவதற்கு ஒரு காணி தேவையாக உள்ளமைக்கும் இடையில் ஒரு வலுவான இணைப்பு காணக்கூடியதாக இருந்தது. தங்களுடைய தொழில்முயற்சிகளை மீள்தாபித்துக்கொள்ளக்கூடிய நிலையில் இருந்த குடும்பங்களின் 40 வீதமான குடும்பங்கள் தங்களுக்கென சொந்தமான காணியிலே தொழில் முயற்சிகளை மீள் தாபித்துக்கொண்டன. அதில் மிகுதியாக இருந்த பகுதியில் தங்களுடைய வீட்டை கட்டிக்கொண்டன. 40 வீதமான குடும்பங்கள் காணி சுவீகரித்தல் காரணமாக பாதிக்கப்பட்ட தங்களுடைய வணிக செயற்பாடுகளை மீள் தொடங்கவில்லை. அக்குடும்பங்களைச் சார்ந்தவர்கள் பெரும்பாலும் சில்லறை கடை வேலைகளில் ஈடுபட்டவர்களாகவும் சீமெந்து வேலைகள் மற்றும் தேயிலை வர்த்தகம் ஆகியவற்றிலும் ஈடுபாடுகொண்டவர்களாகவும் இருந்தார்கள். காணி சுவீகரித்தலில் இருந்து கிட்டத்தட்ட மூன்று வருட காலம் செல்லும்போது வர்த்தக ரீதியான சொத்துகளை இழந்த குடும்பங்களில் 53 வீதமான குடும்பங்கள் தங்களுடைய வணிக ரீதியான செயற்பாடுகளை மீள் தாபித்துக்கொண்டு ஒருவகை இயல்புநிலையடைந்த போக்கை காட்டின. எவ்வாறாயினும் பெரும்பாலானோர்கள் வணிக ரீதியான காணியொன்றில் தங்களுடைய வணிக ரீதியான செயற்பாடுகளை மீள் தாபித்துக்கொள்ளாமல் வசிக்கும் காணியிலேயே மீள தொடங்கியிருந்தார்கள். அவர்களுக்குள் 60 வீதமானவர்களின் வருமானம் அவர்களுடைய காணிகள் சுவீகரிக்கப் பட்டபோது இருந்த வருமான மட்டத்தை அடைந்ததாக இருந்தது. சில்லறை வியாபாரங்கள் போன்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான குடும்பத்தை அடித்தளமாகக்கொண்ட செயற்பாடுகள் தற்போது இயல்புநிலை அடைந்துள்ளவற்றின் ஒரு பகுதியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை மூன்று: வணிக ரீதியான சொத்துக்கள்: காணி சுவீகரித்தலுக்கு முன்னைய நிலைமையுடன் ஒப்பிடும்போது வியாபார வருமானங்களில் மாற்றங்கள்.**

| குடும்ப சதவீதம் | | | |
|---|---|---|---|
| சாதகமான மாற்றங்கள் வீதம் | மாற்றமில்லாத வீதம் | பாதகமான மாற்றங்கள் வீதம் | இல்லமல் போன வீதம |
| 22% | 53% | 3% | 22% |

மூலாதாரம்: வறுமை ஆராய்ச்சி நிலையத் தரவுகள் 2010

தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் விரிவாக்கலும் அதேபோல சந்தை வாய்ப்புகளை அபிவிருத்தி செய்வதும் தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல் திட்டத்தின் துணை குறிக்கோள்களாக இருந்தன. எவ்வாறாயினும் பொதுவாக உற்பத்தியலகுகள் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக மக்கள் தங்களுடைய உற்பத்தி விதிமுறைகளின் பாதகமான விளைவுகளை பற்றி உணரத் தொடங்கினார்கள். மீள்குடியேற்றல் அமுலாக்கல் திட்டத்தில் வியாபார மையங்கள், பேருந்து சுரங்கப்பாதைகள் (bus terminals) மற்றும் பரிவர்த்தனை இடங்கள் (interchange sites) என்ற வகையில் மக்கள் பாதையுடன் இணைக்கப்படும் மற்றும் பிரிந்து வரக்கூடிய இடங்கள் சுட்டிக்காட்டப்படடிருந்தன. ஆயினும் இதுப் பற்றி மக்களிடம் நிச்சயமற்றதன்மையும் ஏமாற்றமடைந்த தன்மையுங்கொண்ட உணர்வுகளே காணக்கூடியதாக இருந்ததுடன் மிகவும் சிறிதளவிலான தெளிவுத் தான் தொடர்ச்சியாக நிலவியது. பரிவர்த்தனை இடங்கள் எவ்வாறு அபிவிருத்தியடையும் என்பதை பற்றியும் இடம்பெயர்ந்தவர்கள் எவ்வாறு அதனுடன் ஈடுபாட்டை மேற்கொள்ளலாம் என்பதை பற்றியும் அல்லது எவ்வாறு உள்ளூர் வியாபாரங்கள் அபிவிருத்தியடையும் என்பது பற்றியும் பொருத்திருந்து பார்ப்போம் என்ற எண்ணமே காணக்கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[stamp]

ஆறாம் அத்தியாயம்

# பாதை நிர்மாண பணிகளுடன் செயலாற்றுதல்

இடம்பெயர்ந்த மக்கள் இயல்புநிலையடையும் வேகத்தை குறைக்க முக்கிய காரணிகளாக இருந்தவற்றிக்குள் சீவனோபாயங்களின் மீதான இடையூறுகள் முக்கியமானவையாகும். இடம்பெற்றுக்கொண்டிருந்த வீதி அமைப்பு வேலைகளை முக்கியமான பாதிப்பை ஏற்படுத்திய அடுத்த காரணியாக குறிப்பிடலாம். உண்மையாகவே வீதி அமைப்பு செயற்பாடுகள் சீவனோபாயங்களின் தகர்ந்த நிலையை மேலும் மோசமாக்கியது. உதாரணமாக சதுப்பு நிலங்களை நிரப்புதலும், வாய்க்கால்கள் தடுக்கப்பட்டமையும், பாதைக்கு அருகில் வசித்த குடும்பங்களின் கால்நடை மற்றும் விவசாயத்தை அடித்தளமாகக் கொண்ட சீவனோபாயங்களின் மீது நேரடியான, உடனடி பாதிப்புகளை ஏற்படுத்தின. நீர் பற்றாக்குறைக் காரணமாக மாத்திரமல்ல தண்ணீர் அதிகம் என்ற காரணமாகவும் நெல்வயல்களும் ஏனைய விவசாய நிலங்களும் கைவிடப்பட்டன. இதற்கு மேலதிகமாக சுற்றுசூழல் முழுவதிலும் புழுதி நிரம்பியிருந்தமையானது பாதையின் இருமருங்குகளில் உள்ள காணிகளை பயன்படுத்த முடியாமல் போனமைக்கு காரணமாகின. பாதைக்கு மிகவும் சமீபமாக மீள்குடியேறியிருந்த குடும்பங்களும், இடம்பெயராமல் இருந்த குடும்பங்களும் வீதி நிர்மாணிப்பு வேலைகள் காரணமாக அதிகமாக பாதிக்கப்பட்டவர்களானார்கள். மக்கள் ஒரு குறிப்பிடத்தக்க காலத்திற்கு கடுமையான வளி மாசடைதலையும், ஒலி மாசடைதலையும் கொண்ட இடத்தில் வாழ வேண்டியவர்களானார்கள். அத்துடன் வெடி வைத்து தகர்த்தல், கட்டுதல், தூண்களை நடுதல் மற்றும் பார ஊர்திகளின் போக்குவரத்து என்பன காரணமாகவும் அதிர்வுகள் ஏற்பட்டன.

### இணக்கபாடுகளும் பலன்களும்

மேல் மற்றும் தென் மாகாணங்களைச் சார்ந்த இருபத்தி நான்கு பிரதேச செயலகங்களின் உள்ளூர் அதிகாரித்துவங்களின் மீது இந்த நிர்மாணிப்பு வேலைகள் நேரடியான பாதிப்பை ஏற்படுத்தின. பெரும் நிர்மாணிப்பு வேலைகள் பல சுற்றுசூழல் சார்ந்த பிரச்சினைகளை உருவாக்கின. அதிவேக நெடுஞ்சாலை அமைத்தலுடன் அதன் அருகாமையிலுள்ள காணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாட்டில் உடனடியான மாற்றம் ஏற்பட்டது. வீதி அமைப்பு வேலைகளுக்கான சேவைகளை வழங்கிய பாதைகள் பெரும் நிலப் பிரதேசத்தில் தண்ணீர் வெளியேறுவதை தடுக்கும் அணைகட்டுகள் போல செயல்பட்டன. தற்காலிக கட்டமைப்புகள் கூட ஐந்து வருடங்களுக்கு மேல் இருந்தமையானது மக்களிடம் பாதகமான விளைவுகளை கொண்டு வருவதற்கு காரணமாகின.

வெள்ளம், தண்ணீர் தேங்கியிருத்தல், நில அரிப்பு மற்றும் வண்டல் உருவாகுதல் என்பன அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிப்பு வேலைகளுடன் சார்ந்தவையாகவே மக்கள் நேரடியாகக் கண்டார்கள். அது பயிர்செய்கையின் மீது தீவிரமான பாதிப்பை ஏற்படுத்தியது. "இந்த பிரதேசத்தில் தண்ணீர் தேங்கிக்கிடக்கின்ற காரணத்தால் பல கறுவா கன்றுகள் அழிந்துபோயின. அது எங்களை நேரடியாக பாதிக்க வைத்தது" (கறுவா விவசாயி, வயது 58, 2007). மேலும் மக்கள் பயணம் செய்யக்கூடிய முறைமையிலும் இறப்பர், தேயிலை மற்றும் கறுவாப்பட்டை போன்ற உற்பத்திகளை வாகனங்களால் திரட்டிக்கொள்வதில் ஏற்கெனவே பின்பற்றிக் கொண்ட வழிகளை மேற்கொள்ள முடியாதவாறு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன.

## நிச்சயமற்றத்தன்மை

பாதை நிர்மாணிப்பு வேலைகள் நீண்ட காலமாக இடம்பெற்றுக்கொண்டு வந்தமையானது மக்களிடம் ஒருவகை ஏமாற்ற நிலைமையை உருவாக்குவதற்கு காரணமாகியது. ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்காக தீர்வுகாணும் பொருட்டு மேற்கொள்ளத்தக்க மிக முக்கிய செயற்திட்டம் எது என்பது பற்றி குடும்பங்கள் அறிந்திருக்கவில்லை. தகவல்களின் தட்டுப்பாடுதான் இந்த பிரச்சினைக்கு காரணமாகியது. "நாங்கள் என்ன செய்ய வெண்டும் என்பதே எங்களுக்கு தெரியாது. உண்மையாகவே எங்களுடைய காணியில் தோட்டம் செய்தல் தான் எங்களுடைய விருப்பம். என்றாலும் அந்த நேரத்தில் எங்களால் ஒன்றுமே அங்கு செய்ய முடியாது. எத்தனை நாட்களுக்கு இப்படி போகும் என்றும் எங்களுக்கு தெரியாது" (விவசாயி, ஆண், வயது 60, 2007).

நிர்மாணிப்பு வேலைகள் காரணமாக மக்களின் வியாபாரங்களும் பாதிப்படைந்தன. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு தங்களுடைய வியாபாரங்களை மீள்தொடங்குவதற்கோ,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அபிவிருத்தி செய்துகொள்ளவோ உள்ள சாத்தியப்பாட்டின் மீது பாதிப்பை ஏற்படத்துவதாக நிர்மாணிப்பு வேலைகள் நடந்துக்கொண்டிருந்தன. மேலும் மீள் குடியேற்றல் தளத்து சுற்றுபுறத்தில் ஏற்பட்டுக்கொண்டிருந்த மாற்றங்களும் நிச்சயமற்ற சூழலை உருவாக்கியது. எவ்வாறாயினும் சில குடும்பங்களுக்கு நிர்மாணிப்பு வேலைகள் நடைப்பெற்றுக்கொண்டிருந்த தளங்களில் வேலை செய்து பணம் சம்பாதித்துக்கொள்ள முடிந்தமையால் நிர்மாணிப்பு வேலைகளின் பாதிப்பை சமப்படுத்திக்கொள்ள முடிந்தது.

அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணிப்பு வேலைகள் சிறிய பாதைகளின் மீது செலுத்திய பாதிப்பானது சீவனோபாயங்களுக்கு அப்பால் சென்றதாக இருந்தது என்பது முரணானதும் எதிரிடையானதுமான ஒன்றாகும். "நாங்கள் தினந்தோறும் அதிகமாக பயன்படுத்திக்கொள்ளப்படும் ஏனைய பாதைகள் பழுதாய்போயுள்ளன. அதிவேக சாலை கட்டும்போது தண்ணீர் அடைக்கப்பட்டதன் காரணமாக பாதைகள் பழுதடைந்துவிட்டன. எனவே பாதைகள் முழுவதும் சேறு. அவர்கள் இந்த அதிவேக சாலை அமைக்கும் வேலைகள் முடியும் வரை மக்கள் எக்கச்செக்கமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கப் போகிறார்கள்" (குடும்பத்தவர், பெண், வயது 78, 2006).

அதிவேக நெடுஞ்சாலைக்கு மிகவும் அண்மித்ததாக அமைந்திருந்த துவிதுர அக்றோ மற்றும் சித்ருஸ்வத்த எனப்படும் மீள்குடியேற்ற தளங்கள் இவ்வாறு கடுமையாக பாதிக்கப்பட்டவையாக இருந்தன. எவ்வாறாயினும் கொலஹகட, கொகர கந்த மற்றும் துடுதுவ போன்ற மீள்குடியேற்ற தளங்கள் அதிவேக நெடுஞ்சாலைக்கு மிகவும் அண்மையில் அமைந்திருந்தாலும் அவை அதிகம் பாதிக்கப்படவில்லை. அவை மரங்கள் மற்றும் குன்றுகள் போன்ற இயற்கையான கவசங்களின் பாதுகாப்பை பெற்றவையாக இருந்தமை இதற்கு காரணமாகும்.

தனியார் சொத்துக்கள் சார்ந்ததாக பார்க்கும்போது பாதை நிர்மாணிப்பு வேலைகள் காரணமாக சேதமடைந்தவைக்கான நட்டஈடு முறைமையானது காணி சுவீகரிப்பு காரணமாக நட்டஈடு வழங்கப்பட்ட முறைமையுடன் வித்தியாசப்படுகின்றதாக அமைந்திருந்தது. பல சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதில் அல்லது சேதத்தை திருத்துவதில் உடன்படுகின்ற கடிதமொன்று ஒப்பந்தக்காரரால் வழங்கப்பட்டதாக இருந்தாலும் ஒன்று நிர்மாணிப்பு வேலைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தியடைந்த பின்போ அல்லது இடம்பெற்றுள்ள சேதமானது நிர்மாணிப்பு வேலைகள் காரணமாகவே ஏற்பட்டுள்ளது என்பது நிரூபிக்கப்பட்ட பின்பே நட்டஈடு வழங்கப்பட்டது. (மற்றும்படி கட்டமைப்பிலுள்ள இயல்பான பலவீனங்கள் காரணமாக ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு வழங்கப்படவில்லை). மேலும் சில வீடுகளுக்கும், சில வசதிகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டிருந்த சந்தர்ப்பங்களில் ஒப்பந்தகாரார்கள் புதிய கட்டடங்களுக்கு நட்டஈடு வழங்குவதில்லை என்று கூறி மீள் கட்டுவதை அதைரியப்படுத்தினார்கள். சிலநேரங்களில் தங்களுடைய சொந்த செலவில் மீள் கட்டிக்கொள்ளுமாறு குடும்பங்கள் வற்புறுத்தப்பட்டன. அத்துடன் இந்த நிர்மாணிப்பு வேலைகள் இடம் பெறுகின்ற காலப்பிரிவிற்குள் அசௌகரியங்களை சமாளித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். "எங்களுடைய மலசலகூடத்தை இடித்துதள்ள வேண்டும் என்பதை அவர்கள் என்னிடம் அறிவித்தார்கள். அதனை திரும்ப கட்ட வேண்டாம், புதிய கட்டடங்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு நாங்கள் நட்டஈடு வழங்குவதில்லை என்றும் அவர்கள் கூறினார்கள். எனவே எங்களால் மலசலக் கூடத்தை திரும்பி கட்ட முடியாது. தங்களுடைய வேலைகள் முடியும் வரை இந்த காணியில் எந்தவொரு கட்டடத்தையும் கட்ட அவர்கள் அனுமதிப்பதில்லை. 2005ஆம் ஆண்டில் தான் வேலைகள் முடியும் என்று இருந்தது. ஆனால் இப்ப அவர்கள் சொல்கிறார்கள் வேலைகள் முடிய 2010 ஆகும் என்று. நாங்கள் பத்து ஆண்டுகளுக்கு இப்படி தான் வாழ வேண்டுமா? காணியை சுற்றி மதிலைக் கட்டுவதற்கு கூட எங்களால் முடியாது. எங்களுக்கு ஒரு பாதுகாப்பும் இல்லை" (விவசாயி, ஆண், வயது 76, 2006).

## பாதுகாப்பு வழங்குவதும் அத்துடன் இணைந்துள்ள நடைமுறை பிரச்சினைகளும்

ஒரு பெரும் நிர்மாணிப்பு செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது குறிப்பிடத்தக்களவு இடையூறுகள் ஏற்படக்கூடியமையானது எதிர்பார்க்கப்பட கூடியதொன்றாகும். குடும்பங்களால் இடையூறுகளை சமாளித்துக்கொள்ளல் என்பது குறுகிய காலத்திற்காக செய்யக்கூடியதாக இருந்தாலும் நீண்டதொரு காலமாக நீடித்து நிலவக்கூடிய இடையூறுகளானது குறிப்பிட்ட பிரதேசத்திற்கு தக்க பாதுகாப்புத் தேவை என்பதை சுட்டிக்காட்டுவதாக தான் உள்ளது. காணி சுவீகரிக்கப்பட்டதன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களில் பெரும்பாலானவை இரண்டாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையாகவும் பாதிக்கப்படுகின்றதாக நெடுஞ்சாலை நிர்மாணிப்பு வேலைகள் அமைந்தன. இந்த நிர்மாணிப்பு வேலைகள் காரணமாக ஏற்படும் பாதிப்புகளுடன் ஒரு கணிசமானளவு காலம் குடும்பங்கள் வாழ தான் வேண்டும் என்பதை இயங்கு முறைமையால் வெளிப்படையாக சொல்லாமல் சொல்லப்படுவதாக இருந்தது.

இச்செயல் திட்டத்தின் சுற்றுச்சூழல் பாதிப்பு சார்ந்த மதிப்பீடானது அடையாளங்காணப்பட்ட முக்கியமான பிரதேசங்களில் நிர்மாணிப்பு வேலைகள் காரணமாக பாதிப்புகளை ஏற்படுவதை தடுப்பதையும் சுற்றுசூழல் முகாமைத்துவ திட்டத்தின் வழியாக அவற்றினை குறைப்பதையும் நோக்கமாக கொண்டிருந்தது. சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடானது பிரதானமாகவே சுற்றுசூழலை சார்ந்தாக இருந்தாலும் பாதிக்கப்பட்ட மக்களின் மீதும் சமுதயாங்களின் மீதும் நிகழக்கூடியதாக தெரிவிக்கப்படும் பாதிப்புகளை பற்றியும் கவனம்செலுத்துகின்ற ஒரு சமூகமய அம்சத்தையும் கொண்டதாக அது செயற்பட்டது. அது சாந்தப்படுத்தலுக்கான நிதி சார்ந்த சேவைகளையும் சிபாரிசு செய்தது. வீதி அபிவிருத்தி அதிகார சபையும் மேற்பார்வை ஆலோசகர்களும் (supervision consultants) குறிப்பிட்ட செயலை அமுல்படுத்துவதை உறுதிபடுத்தும் வகிபாகத்தைகொண்டவர்களாக செயல்பட்டதுடன் ஒப்பந்தக்காரர்கள் சுற்றுச்சூழல் முகாமைத்துவ திட்டத்துடன் இணங்கி செயற்படவும் நிர்மாணிப்பு வேலைகள் காரணமாக ஏற்படும் பாதிப்புகளை சமப்படுத்தல் பொறுப்பைக் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். புவி அமைப்பியல் ஆராய்ச்சி மற்றும் சுரங்க அதிகார சபை, நீர்ப்பாசன திணைக்களம் போன்ற ஏனைய அரசு திணைக்களங்களும் அதிகார சபைகளும் இந்த நிர்மாணிப்பு வேலைகள் சார்ந்த (உதாரணமாக வெடிவைத்து தகர்த்தல், வடிகால் அமைத்தல் போன்றவை) குறிப்பிட்ட பொறுப்புகளைக்கொண்டவையாக இருந்தன. எனவே உயர் மட்டத்து ஒருங்கிணைப்பும் சமயோசிதமான நடவடிக்கைகளும் தேவையாக இருந்தன.

இச்செயல் திட்டத்தை அமுல்படுத்துவதில் கடினமான நிலைமைக்கொண்டிருந்த பாதுகாப்பு சார்ந்த விடயங்கள், வருமான மீள் தாபித்துக்கொள்ளல் நிகழ்ச்சியால் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக திட்டத்தின்படி ஒப்பந்தக்காரர்கள் சேதங்களை இயலுமான அளவு குறைந்த மட்டத்திற்கு கொண்டுவருவதற்கு இயலுமானளவு கூடிய கவனம் செலுத்துவது அவசியம். நிர்மாணிப்பு வேலைகள் காரணமாக பொது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துக்களுக்கோ அல்லது தனியார் சொத்துக்களுக்கோ சேதம் ஏற்படும்போது பாதிக்கப்பட்ட குழுக்களுக்கு, சமுதயாங்களுக்கு அல்லது அரசு முகவர்களுக்கு உடனடியாக நட்டஈடு வழங்கப்படுதல் வேண்டும். ஆயினும் இது நடைமுறைக்கு வரவில்லை. பாதைகளிலும் குறிப்பாக வாய்க்கால் மற்றும் நீர்ப்பாசன தொகுதியிலும் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு இடைக்காலத் தீர்வுகளை வழங்குவதில் முன்னேற்றம் காணக்கூடியதாக இல்லாமை பற்றி மக்கள் போலவே உள்ளூராட்சி அதிகாரித்துவங்களும் கவலை தெரிவித்தார்கள்.


## அரசு தரப்பு விசனங்களும் அவற்றினை அணுகுவதில் சிக்கல்களும்

வீதி நிர்மாணிப்பு வேலைகள் காரணமாக ஏற்படும் பாதிப்புகளை பற்றிய முறைப்பாடுகளின் மட்டத்தை, ஆழத்தை மற்றும் எண்ணிக்கையை பற்றி தயாரான நிலையில் வீதி அபிவிருத்தி சபையோ அல்லது மத்திய சுற்றாடல் அதிகார சபையோ இருக்கவில்லை. இவ்வாறான பாதிப்புகள் ஏற்படலாம், அதற்காக இவ்வாறான பாதுகாப்பு வழிமுறைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற விழிப்புணர்ச்சி மக்களிடம் ஏற்படுத்தப்பட்டிருந்திருப்பின் முறைப்பாடுகளை குறிப்பிடத் தக்களவு குறைத்துக்கொண்டிருக்கலாம்.

கீழ்வரும் வரைப்படம் முறைபாடுகளை பற்றிய கவனம் செலுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட வித்தியாசமான நுழைவாயில்களையும், வழிமுறைகளையும் விபரிக்கின்றது. பலதரப்பட்ட அதிகாரித்துவங்களிடம் முறைப்பாடுகள் மேற்கொள்ளக்கூடிய சாத்தியபாடுகள் இருந்தாலும் கூட தீர்வுகளைத் தேடுவதற்கு அந்தப் பிரச்சினைகளை மேற்பார்வை ஆலோசகர்களிடம் முன்வைக்கும் குறை நிவர்த்திக் குழுக்களிடம் (Grievance redress committees) அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் முன்வைத்தலும் அவசியமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு 08: முறைபாடுகளை கையாளுவதற்காக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள




மூலம்: வறுமை ஆராய்ச்சி நிலையம்

யாரிடம் முறைப்பாடு செய்ய வேண்டும், எது பற்றி முறைப்பாடு செய்யலாம் என்பவற்றினை மக்கள் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அறிந்துகொண்டார்கள். முறைபாடுகளை ஏற்றுக்கொள்ளும் அமைப்பாக குறைநிவர்த்தி குழுக்கள் மக்களிடம் பகிரங்கப்படுத்தப்பட்டன. அக்குழுவிற்கு மேலதிகமாக தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தின் பிராந்திய அலுவலகம், பொலிஸ் நிலையம், கிராம உத்தியோகத்தர் அலுவலகம், மாவட்ட செயலகம், புவி அமைப்பியல் ஆராய்ச்சி மற்றும் சுரங்க பணியகம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை என்பவற்றிடமும் முறைபாடுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தாலும் அவை அவ்வாறு பகீரஙகப்படுத்தப்பட்டவையாக இருக்கவில்லை. மக்கள் தங்களுடைய அனுபவங்களின் வழியாக இவை பிரச்சினைகளை தீர்க்கும் நிறுவனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல என்பது புரிந்துக்கொள்ளப்பட்டபோது அவர்கள் தங்களுடைய முறைபாடுகளை நேரடியாகவே ஒப்பந்தக்காரார்களிடமும் அதேபோல மேற்பார்வை ஆலோசகர்களிடமும் கொண்டு சென்றார்கள். எவ்வாறாயினும் அது முறைப்பாடுகளை அணுகவேண்டிய வழியாக இருக்கவில்லை. உண்மையாகவே குறைநிவர்த்தி குழுக்கள் எவ்வகையான முறைப்பாடுகள் பற்றி கவனம் செலுத்துகின்றன என்பது பற்றியோ அல்லது எவ்வகையான முறைப்பாடுகளை பற்றி கவனம் செலுத்துவதில்லை என்பது பற்றியோ ஒழுங்கான தகவல்கள் பற்றாக்குறை மக்களிடம் நிலவியது. உதாரணமாக தெற்குப் பொக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தின் நெடுஞ்சாலை நிர்மாணிப்பு வேலைகள் தொடங்கிய பின்பு கட்டப்பட்ட எந்தவொரு கட்டமைப்பிலும் ஏற்பட்ட பாதிப்புகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை. அதேநேரம் வெள்ளம் போன்றவற்றினால் பாதைக்கு அப்பால் ஏற்பட்ட பாதிப்புகளை கையாளக்கூடிய பொறிமுறைகளையும் அது கொண்டிருக்கவில்லை.

## பிரதான இடைவெளிகள்

இந்த நிர்மாணிப்பு வேலைகளுடன் தொடர்புடைய குறைகளை நிவர்த்தி செய்யும் செயல் முறையானது ஒரு முறைப்பாட்டினை மேற்கொள்ளல் என்பதற்கு அப்பால் சென்று ஒரு குடும்பத்தால் பங்குக்கொள்ளக்கூடியதானதும், தெளிவாக வரையறுக்கப்பட்டதுமான ஒரு வெளியை வழங்கப்படுகின்றதொன்றாக இருக்கவில்லை. குடும்பங்களுக்கு ஒரு முறையான வகிபாகத்தை அது வழங்கவில்லை. எவ்வாறாயினும் தீர்மானங்கள் எடுக்கும்போது ஒரு குறிப்பிடத்தக்களவான குடும்பப் பங்குக்கொள்ளல் இடம்பெறுகின்றமை அத்தியாவசியத் தேவை என்பது மேற்பார்வை ஆலோசகர்களால் முறைசாரா விதமாக வலியுறுத்தப்பட்டது. எவ்வாறாயினும் இந்த பங்குக்கொள்ளல் என்பது கள ஆராய்ச்சிகளுக்கு என்று மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது. அத்துடன் அது, அதில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்கள் தீர்மானித்தால் மட்டுமே இடம்பெறுகின்றதொன்றாகவும் சமயோசித உபாயங்களுடன் கையாளக்கூடிய திறமையைக் கொண்டதாக குடும்பங்கள் உள்ளனவா, இல்லையா என்பதுடனும் தங்கியிருந்தது. வெடிவைத்து தகர்த்தல், அதிர்வு போன்றவற்றினால் கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட சேதங்களைப் பற்றியவை போன்ற தனிப்பட்ட குடும்பங்களால் மேற்கொள்ளப்பட்ட முறைபாடுகளுக்கு மாத்திரமே முறைபாட்டாளருக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான பின்னூட்டல் (feedback) நிறுவனமயமாக்கப்பட்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையான செயற்பாட்டிற்குள் முறைப்பாட்டினை உள்வாங்கிக்கொள்ள காலம் எடுத்தது போலவே முறைப்பாட்டினை பற்றி விசாரணை செய்யவும், ஒரு தீர்வை பற்றி முடிவு எடுக்கவும், இறுதியாக அந்த தீர்வை அமுல்படுத்தவும் அதிக காலம் எடுத்தது. இந்த செயற்பாடானது பாதிக்கப்பட்டவர்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதை விட நீண்ட காலம் இழுத்தடித்துள்ளது என்பதை நிறுவனமய ஆவனங்களும் குடும்பங்களுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களும் சுட்டிக்காட்டி நிற்கின்றன. வெடிவைத்து தகர்த்தல், அதிர்வுகள் மற்றும் புழுதி போன்ற எதிர்பார்க்கப்பட்ட இடையூறுகளைச் சார்ந்த முறைபாடுகளுக்கும் நிலச் சரிவு போன்ற கடுமையான தாக்கங்கள் சார்ந்த முறைப்பாடுகளுக்கும் துரித நிவாரணங்கள் கிடைத்தன. உதாரணமாக வெடிவைத்து தகர்த்தல் போன்றவை மக்களிடம் அறிவித்து நடைமுறைக்கு கொண்டுவருதல் என்ற வகையில் ஒரு சிறப்பான செயல்முறையை கொண்டதாக இருந்தது. ஆயினும் வடிகால் மற்றும் வண்டல் உருவாகுதல் போன்றவற்றினைச் சார்ந்த முறைப்பாடுகளை பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளவும் தீர்வுகளை வழங்கவும் அதிக காலம் எடுத்தது. அத்துடன் அவை பற்றி மிகவும் குறைவாகவே முறையான கவனம் செலுத்தப்பட்டதன் காரணமாகவும் ஒரு செயல்முறையைக் கொண்டிருக்கவில்லை என்ற காரணத்தாலும் முறைப்பாட்டாளர்கள் ஏமாற்றமடைந்தவர்களானார்கள்.

தீர்வுகளை சிபார்சு செய்வதிலும் ஏற்றுக்கொள்ளப்படுவதிலும் கடுமையாகவே பாரபட்சமாக இருந்தது என்பது நெடுஞ்சாலை நிர்மாணிப்பு செயல்பாட்டில் ஈடுபட்டிக்கொண்டிருந்த நிறுவனங்களின் மீதும் தொழில்நூட்ப அறிவின் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும். சேதங்களையும், இடையூறுகளையும் தெற்குபோக்குவரத்து அபிவிருத்தி திட்டத்து நிர்மாணிப்பு வேலைகளின் காரணமாக ஏற்பட்டவை என்பதை உறுதிபடுத்தல் அத்தியாவசியமானதாக இருந்தது. சம்பந்தப்பட்டவர்களுடன் சமரச முயற்சிகளை மேற்கொள்வதை விட தொழில்நுட்ப தீர்வுகளின் மீது கரிசனைக்காட்டுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டன.

பிரச்சினைகள் இருந்தாலும், நிர்மாணிப்பு வேலைகளை சார்ந்த பாதிப்புகளை கையாளும் செயல்பாட்டில் தொடர்ச்சியான வளர்ச்சியை காணக்கூடியதாக இருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதி வழங்கப்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்ட இந்த அதிவேக நெடுஞ்சாலையின் முதல் பகுதியை சார்ந்த அனுபவங்களில் இருந்து தெற்குபோக்குவரத்து அபிவிருத்தி திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலன்பெற்றது. குறை நிவர்த்திக்குழு பொறிமுறையின் மீள் கட்டியமைக்கப்படுதலுக்கு மேலதிகமாக பொதுசன முறைபாடுகளை தீர்க்கும் மற்றும் கண்காணிக்கும் குழு (Public Complaints and Monitoring Committe) ஒன்று உருவாக்கப்பட்டது. அது வீதி அபிவிருத்தி அதிகார சபை, மேற்பார்வை ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்தக்கரார்கள் சார்ந்த பிரதிநிதிகளைக்கொண்டிருந்தது. இது முறைபாடுகளை சார்ந்ததாக மாத்திரமல்ல சிபார்சு செய்யப்பட்ட நடவடிக்கைகளை சார்ந்ததாகவும் தொடர்ச்சியான ஈடுபாட்டைக்கொண்டதொன்றாகவும் மிகவும் முறையான செயற்பாட்டைக் கொண்டதொன்றாகவும் அமைக்கப்பட்ட குழுவொன்றாகும். சமூக பாதுகாப்பையும் சுயாதீன வெளிப்புற கண்காணிப்பையும் இதில் ஒன்றுசேர்ந்திருந்தது. அது ஏனைய அரசு முகவர்களுடன் மிக இலகுவாக வேலை செய்யக்கூடிய நிலைமையை இந்த செய்திட்டத்திற்கு உருவாக்கி தந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை நான்கு: நிர்மாணிப்பு வேலைகள் சார்ந்த முறைபாடுகளள

| வகை | சர்வதேச ஒத்துழைப்பிற்கானயப்பானிய வங்கியால்நிதி வழங்கப்பட்ட பகுதி | | ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதி வழங்கப்பட்ட பகுதி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் முதலாம் தொகுதி | 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இரண்டாம் தொகுதி | 2008 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் திரளாக சேர்ந்த | 2007 – 2008 | |
| வெள்ளத்துடன் சார்ந்த முறைபாடுகள் | 66 | 82 | வகைப்படுத்தப்படாத | வகைப்படுத்தப்படாத | 148 |
| வெடி வைத்து தகர்த்தல் சார்ந்த முறைபாடுகள் | 8 | 79 | வகைப்படுத்தப்படாத | வகைப்படுத்தப்படாத | 87 |
| புழுதி சார்ந்த முறைபாடுகள் | 37 | 41 | வகைப்படுத்தப்படாத | வகைப்படுத்தப்படாத | 78 |
| பொது மக்களுக்கு அபாயகரமானவை சார்ந்த முறைபாடுகள | வகைப்படுத்தப்படாத | 11 | வகைப்படுத்தப்படாத | வகைப்படுத்தப்படாத | 11 |
| பாதைகளை அடைதல் சார்ந்த முறைபாடுகள | வகைப்படுத்தப்படாத | 28 | 248 | 65 | 341 |
| மேலதிக சுவீகரித்தல் சார்ந்த முறைபாடுகள | வகைப்படுத்தப்படாத | 13 | வகைப்படுத்தப்படாத | வகைப்படுத்தப்படாத | 13 |
| பொருட்களை போக்குவரத்து செய்தலும் பொது பாதைகளை பயன்படுத்திக்கொள்ளலும் சார்ந்த முறைபாடுகள் | வகைப்படுத்தப்படாத | 20 | வகைப்படுத்தப்படாத | வகைப்படுத்தப்படாத | 20 |
| தண்ணீரின் தரமும் அளவும் சார்ந்த முறைபாடுகள் | 9 | 19 | வகைப்படுத்தப்படாத | வகைப்படுத்தப்படாத | 28 |
| இரைச்சல் சார்ந்த முறைபாடுகள் | 6 | 31 | 624 | 63 | 724 |
| அதிர்வு சார்ந்த முறைபாடுகள | 99 | 31 | 4804 | 795 | 5729 |
| சொத்துகளுக்கான சேதம் சார்ந்த முறைபாடுகள் | வகைப்படுத்தப்படாத | 83 | வகைப்படுத்தப்படாத | வகைப்படுத்தப்படாத | 83 |
| பயிர்ச் சேதம் சார்ந்த முறைபாடுகள் | வகைப்படுத்தப்படாத | 37 | 1110 | 212 | 1359 |
| மண் அரிப்பு மற்றும் வண்டல் சார்ந்த முறைபாடுகள் | 15 | 39 | வகைப்படுத்தப்படாத | வகைப்படுத்தப்படாத | 54 |
| எண்ணெய் கசிதல் காரணமாக ஏற்படும் பிரச்சினைகள் சார்ந்த முறைபாடுகள | 2 | வகைப்படுத்தப்படாத | வகைப்படுத்தப்படாத | வகைப்படுத்தப்படாத | 2 |
| வடிகால் மற்றும் நீர்பாசனம் சார்ந்த முறைபாடுகள் | 37 | வகைப்படுத்தப்படாத | வகைப்படுத்தப்படாத | 164 | 210 |
| பார ஊர்திகளின் நடமாட்டம் சார்ந்த முறைபாடுகள | 61 | வகைப்படுத்தப்படாத | வகைப்படுத்தப்படாத | 195 | 256 |
| ஏனைய | 52 | 31 | 19 | 17 | 123 |
| *மொத்தம்* | ***392*** | ***549*** | ***6805*** | ***1511*** | ***9257*** |

மூலம்: தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தின் மேற்பார்வை ஆலோசகர்கள்.

* மேற்பார்வை ஆலோசகர்களின் ஒப்பந்தம் மீள்கட்டமைக்கப்பட்டது. தரவுகள் திரளாக சேர்ந்தவடிவத்தில் வழங்குவதற்கு அவை இணைக்க முடியாதவையாக உள்ளமை தடையாக உள்ளது. சில முறைபாடுகள் ஒன்றன் மேல் ஒன்று படிந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோக்கி நகர்த்தல்

மனிதனால் மேள்கொள்ளப்படும் பொருளாதார செயற்பாட்டின் விளைவான, பிரதானமாக நீர்பாசனம், மின்சாரம் மற்றும் பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு செயல் திட்டங்களினூடான அபிவிருத்தியானது இடப்பெயர்வையும் மீள்குடியேற்றத்தையும் ஏற்படுத்துக்கின்றவையாக தான் உள்ளன. குறிப்பிட்ட செயல் திட்டமானது இருக்கின்ற நிலைமையை விட மேலான நன்மைக்காகவே என்றும் இருக்கின்ற ஏனைய எல்லா மாற்றுவழிகளையும் கவனத்திற்கொண்ட பின்பு இறுதியடைந்ததொன்றாகவே இந்த திட்டம் உள்ளது என்றும் இந்த இடப்பெயர்வை பொதுவாக நியாயப்படுத்தியது.

அபிவிருத்தி செய்திட்டங்களின் காரணமாக மக்கள் இடப்பெயர்ந்தமையானது இலங்கை வரலாற்றை சார்ந்ததொன்றாகும். இடம்பெயர்வை சார்ந்ததும் மீள் குடியேற்றலை சார்ந்ததுமான விளைவுகளுடன் குடும்பங்கள் பல பரம்பரையாக வாழ்ந்துள்ளன. நீர்பாசனத்தை வழங்கிய கலா ஓய திட்டமும், நீர்பாசனத்துடன் மின்சாரத்தையும் வழங்கிய மகாவலி அபிவிருத்தி செயல்திட்டமும் இரு உதாரணங்கள் ஆகும். பாதை அமைப்பதற்காக அல்லது அகலமாக்கப்படுவதற்காக அல்லது நிலவுருவப்படுத்தலுக்காக காணி சுவீகரிப்பு மேற் கொள்ளப்படும் போதும், நடைப்பெற்றுக்கொண்டுள்ள அல்லது நடைபெற உள்ள அபிவிருத்திதிட்டங்களின் போதும் பெரும் எண்ணிக்கையில் மக்கள் இடம்பெயர நேரிடுதல் என்பது எதிர்பார்க்ககூடியதொன்றாகும்.

## தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டம்

அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர வைக்கப்படும் மக்களை நோக்கிய ஒரு புதிய அணுகுமுறை தெற்குபோக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச நிதி வழங்கல் முகவர்களின் கணிசமான ஆதரவுடன் 2000ஆம் ஆண்டில் ஒரு முறைபடுத்தப்பட்ட அடித்தளத்தைக்கொண்டதாக வகுக்கப்பட்டிருந்த இச்சைக்குட்படாத மீள்குடியேற்றல் சார்ந்த தேசிய கொள்கையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(National Involuntary Resettlement Policy) 2001ஆம் ஆண்டில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டதொன்றாகும். தென்னாசியாவில் முதலாவதாக நடைமுறைப்படுத்தப்பட்டதாக விபரிக்கப்படும் இந்த இச்சைக்குட்படாத மீள்குடியேற்றல் சார்ந்த தேசிய கொள்கையானது இடம்பெயர்ந்த மக்களை பாதுகாப்பதற்கு அடிப்படை கோட்பாடுகளை, சட்டங்களை மற்றும் பிரமாணங்களை வழங்கியது. அத்துடன் மீள் குடியேற்றல் செயல்பாட்டின் நியாயமானதும், சமன்பாடானதும் மற்றும் ஒளிவுமறைவற்றதுமான தன்மைப் பற்றிய உத்தரவாதத்தையும் அது வழங்கியது. இருபது அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையைக்கொண்ட மக்களை இடம்பெயர செய்யும் எந்த செயல் திட்டமும் விரிவான மீள்குடியேற்றல் அமுலாக்கல் திட்டங்களை சமர்ப்பிக்கும்படி இச்சைக்குட்படாத மீள்குடியேற்றல் சார்ந்த தேசிய கொள்கையால் செயல்திட்ட அமுலாக்கல் முகவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. அத்துடன் அது நில சவீகரித்தல் காரணமாக வறுமை நிலைமை இடம்பெறக்கூடாது என்பதையும் வலியுறுத்தியது என்பது மிக முக்கியமானது.

இச்சைக்குட்படாத மீள்குடியேற்றல் சார்ந்த தேசிய கொள்கையுடன் இணைந்து செயல்பட்டதன் ஊடாக தெற்கு பொக்குவரத்து அபிவிருத்தி செயல் திட்டத்தால் இடம்பெயர்ந்தவர்களுடைய உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு சில புதிய அம்சங்களை அறிமுகப்படுத்த முடிந்தது. இதன் முக்கியமான அம்சமானது மீள் தாபித்துக்கொள்ளல் பெறுமதி (replacement value) என்பதே ஆகும். இது காணியின் மற்றும் கட்டமைப்புகளின் பெறுமதி என்பதற்கு மேலதிகமாக இடமாற்றம் செய்வதற்கும் மீள்குடியேற்றலுக்குமான எல்லா செலவுகளையும் கொண்டிருந்ததுடன் நட்டஈடு கணிக்கப்படும் இந்த எல்லா செலவுகளையும் கவனத்தில்கொள்ளப்பட்டன. சந்தை பெறுமதியுடன் மீள் இருப்பிடமைத்துக்கொள்ளலை (relocation) சார்ந்த செலவும் உள்ளடக்கப்பட்டதான அணுகுமுறையானது வெறும் சந்தை பெறுமதியை மட்டுமே அடித்தளமாகக்கொண்ட மதிப்பிடுதலை விட பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் இருந்தது. இதன் காரணமாக மக்களின் மீள்குடியேற்றல் இலகுவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்தவை மீள் தாபித்துக்கொள்ளல் என்பது தெற்கு பொக்குவரத்து அபிவிருத்தி செயல் திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றல் செயல்பாட்டின் இரு முக்கிய கோட்பாடுகளில் ஒன்றாக இருந்தது. அடுத்தது காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவின் வழியாக மீள்குடியேற்றல் செயல்பாட்டில் பங்குக்கொள்ளல் ஆகும். மக்களுக்கு பேசவும் கலந்துரையாடி தீர்மானங்களை எடுப்பதற்குமான ஒரு வெளி காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழுவால் உருவாக்கப்பட்டது. மதிப்பீடு செயல்பாடானது சிக்கலானதொன்றாகும் என்பதை பெரும்பாலான மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சூழலிலும் மேலும் அது ஒரு மறைப்பொருளான தன்மையைக்கொண்டிருந்த நிலையிலும் இந்த காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் குழு காரணமாக உள்ளூர் அறிவையும் அதேபோல தொழில்நுட்ப உள்ளீடுகளையும் அடித்தளமாகக்கொண்ட தீர்மானங்களின் நன்மைகளை பெறக்கூடியதாக இருந்தது. அதேபோல ஒரு தனி தொழில்நுட்ப நபரை (technical person) விட ஒரு குழுவால் நியாயமான முடிபுகளை வழங்க முடியும் என்று மக்கள் கருதினார்கள்.

தங்களுடைய காணிகளுக்கு ஆவணமய உறுதிபத்திரங்களை கொண்டிராத குடும்பங்களுக்கும் நட்டஈடு வழங்க வேண்டும் என்பது இந்த செயல் திட்டத்தின் சம உரிமை பற்றிய பொறுப்பை எடுத்துக்காட்டியதாக அமைந்திருந்தது. பல குடும்பங்கள் குறிப்பிட்ட காணியில் பல வருடங்களாக வேலை செய்துவருபவர்களாகவும், வசித்துவந்தவர்களாகவும் இருந்தாலும் அவர்கள் சட்ட ரீதியான உரிமைத்துவத்தை கொண்டவர்களாக இருக்கவில்லை. எனவே அந்த மக்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டமையானது காணி இல்லாமையை தடுக்கவும் இந்த செயல் திட்டத்தின் காரணமாக வறுமை நிலைமை உருவாக்கப்படுவதை தடுக்கவும் உதவியது. மேலும் பெற்றோர்களில் ஒருவர் மட்டுமே வாழுகின்ற நிலைமையிலுள்ள குடும்பங்கள், வயோதிபர்களையும் அங்கவீனர்களையும் கொண்ட குடும்பங்கள் என்றவகையில் குறிப்பாக மிகவும் பலவீனமான (vulnerable) நிலையிருந்த குடும்பங்கள் இந்த மீள் இருப்பிடமைத்துக் கொள்ளல் செயற்பாட்டின்போது விசேட உதவிகளை பெற்றன. மிகவும் பலவீனமான நிலையிலுள்ள குடும்பங்களுக்கு அவர்களுடைய வீடுகளை கட்டிக்கொள்ள உதவியமைப் போன்ற சில உதாரணங்கள் இருந்தாலும் வீதி அபிவிருத்தி அதிகார சபை பொதுவாக மீள்குடியேற்றலின்போது வசதி வழங்குபவராக தான் செயலாற்றியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவனோபாயங்களை மீள் தாபித்துக்கொள்ளல் என்பது கடினம் என்பதையும் அது குறிப்பிடத்தக்க காலம் எடுக்கக்கூடியதொன்றாகும் என்பதையும் தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டம் ஏற்றுக்கொண்டது. மக்களுடைய சீவனோபாயங்களை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கு உதவும்பொருட்டு கடன் வழங்குதல் போன்ற விசேட உதவிகளையும் இந்த செயல்திட்டம் வழங்கியது. ஆயினும் அது இன்னமும் முன்னேற வேண்டிய கட்டத்தில் இருந்தது. இழந்த காணிக்காக ஒரு காணியை வழங்கி குடும்பங்களுக்கு உதவ வேண்டியதாக இருந்தது. உதாரணமாக தங்களுடைய வேலைத் தளங்களை இழந்தவர்களுக்கு பரிவர்த்தனை இடங்களுக்கு (interchange sites) அருகில் காணி வழங்கியுள்ளது. வீடும் சொத்தும் மாத்திரமல்ல வணிக ரீதியானதும் விவசாய ரீதியானதுமான காணிகளை வழங்கி சீவனோபாயங்களை மீள் தாபித்துக்கொள்வதற்கு வசதி வழங்கப்படதாக இருந்திருப்பின் மக்கள் இயல்புநிலையடைவதை துரிதப்படுத்துவதாக அமைந்திருக்கலாம்.

## பின்னோக்கி பார்த்தல்

மீள்குடியேற்றல் செயல்பாடானது மட்டுப்படுத்தப்பட்ட நிதி வளங்களையும் மனித வளங்களையும் கொண்டிருந்ததுடன் அது முழுமையாகவே திட்டமிடப்பட்டதொன்றாகவும் இருக்கவில்லை. சோதனைகளுடனும், தவறுகளுடனும் அமுல்படுத்தப்பட்ட மீள்குடியேற்றல் பணிகள் பூர்த்தியடைந்ததும் பெற்ற அநுபவங்களாலான படிப்பினை மிகவும் அறிதாகவே ஏனைய சூழ்நிலைகளுடனும் நிறுவனங்களுடனும் பகிர்ந்துக்கொள்ளப்பட்டன. அவை மிகவும் அரிதாகவே கைமாற்றப்பட்டன. இந்த இடைவெளியை புரிந்துக்கொண்ட தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல் திட்டத்து செயல்திட்ட பணியாளர்கள் தங்களுடைய அநுபவங்களை ஏனைய நெடுஞ்சாலை செயல்திட்டங்களுடன் பகிர்ந்துக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள். இது கலந்துரையாடலுக்கான ஒரு வெளி திறக்கப்படுவதாக இருந்ததுடன் தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்து பணியாளர்களுக்கு இது எழுப்பக்கூடிய பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகங்கொடுக்கலாம் அல்லது எவ்வாறு அந்த பிரச்சினைகளை தவிர்க்கலாம் அல்லது எவ்வாறு சாந்தப்படுத்தலாம் என்பது பற்றி சில சமிஞ்ஞைகளை காட்டுவதாகவும் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டம் முகங்கொடுத்த பல பிரச்சினைகளுக்கு திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் சார்ந்த பலவீனமே காரணமாகவே இருந்தது. எனவே ஒரு செயல்திட்டத்தை தொடங்குவதற்கு முன்பு அதனை திட்டமிடல் செய்யவும் சரியான முறையில் தயார்படுத்தவும் கால அவகாசம் தேவை என்பதை தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டம் ஏற்றுக்கொண்டது. மேலும் மீள் குடியேற்றல் செயல்பாட்டை முகாமைத்துவம் செய்வதற்கு பொறியியலாளர்களின் எண்ணிக்கையை விட சமூக மற்றும் சுற்றுசூழல் பின்னணிகளைக்கொண்ட பணியாளர்களே அதிகமாக சேர்த்துக்கொள்ளல் வேண்டும் என்பதை இந்த செயல்திட்டம் புரிந்துக்கொண்டது. எனவே சமூக மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்புகளை கண்காணிப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை கட்டமைப்பிற்குள் சுற்றுசூழல் மற்றும் சமூக பிரிவுகளுடன் வேலை செய்வதற்கும் அதேபோல மீள்குடியேற்றல் செயற்பாட்டினை கையாளுவதற்கும் புதிய பதவிகளை உருவாக்கவும் வாடகைக்கு அமர்த்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எவ்வாறாயினும் வளர்சியடைய செய்ய வேண்டிய இன்னொரு பகுதியும் இருந்தது. அதாவது ஒருவருக்கொருவர் மிகவும் பரஸ்பர ஒத்த உணர்ச்சியுடன் இருந்த பாதிக்கப்பட்ட மக்களிடம் இருந்து தகவல்களை பெற்றுக்கொண்டு அவை மிகவும் விரிவானதாக பகிர்ந்துக்கொள்ளல் தேவையாக இருந்தது. ஆயினும் இவற்றினை மேற்கொள்ள உத்தியோகத்தர்களுக்கு அதிகமான காலமும் திறன்களும் தேவையாக இருந்தன. பின்நோக்கி பார்க்கும்போது தவறான தொடர்பாடலை தடுக்கவும் அதேபோல சம்பந்தப்பட்ட எல்லோரிடமும் சரியான தகவல்களை சென்றடைய செய்யும்பொருட்டும் செயல்திட்டத்தை சார்ந்த தகவல்களை பல மட்டங்களைக்கொண்ட பணியாளர்களுடனும் அதேபோல அத்துடன் ஈடுபாடுக்கொண்டிருந்த ஏனையோர்களுடனும் பங்கிட்டுக்கொள்ளல் என்பது மிக முக்கியமான தேவையாகும் என்பதை தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்து பணியாளர் குழாமால் கூட ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த படிப்பினை செயற்பாட்டினை தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்கும் பலப்படுத்துவதற்கும் உதவும் பொருட்டு நிபுணர்களின் ஒன்றுதிரட்டலை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல்கள் தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்திற்குள் இடம்பெற்றன. இந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலினை வெளியிடுதல் கூட தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டம் தன்னுடைய படிப்பினைகளை பங்கிட்டுக்கொள்ள எடுத்த ஒரு முயற்சியாகும்.

## முன்னோக்கி நகர்த்தல்

போரின் பின்விளைவுகளைக் கொண்டுள்ள இலங்கை தன்னுடைய அபிவிருத்தி தந்திரோபாயங்களை இயங்கவைக்கும் பொருட்டு பொருளாதார வளர்ச்சிக்காக வழிவகுக்கும் ஒரு வலுவான உட்கட்டமைப்பை உருவாக்கும் பணியில் இறங்கியுள்ளது. உட்கட்டமைப்புகள் என்பது ஒரு மிக முக்கியமான அபிவிருத்தி வசதி வழங்குவதாகவோ அல்லது ஒரு முன்னோடியாகவோ இருந்தாலும் அவை எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றன என்பதையும் அவற்றிக்காக அர்ப்பணிக்கப்படுகின்றவை எவை என்பது பற்றியும், அவை கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டுமா என்பதை பற்றியும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். மீள் குடியேற்றலை பொறுத்தவரை இடத்தை விட்டு நகர கட்டாயப்படுத்தப்பட்டவர்களின் உரிமைகளையும் உடைமைகளையும் பாதுகாக்கும் பொருட்டு ஒரு மீள்குடியேற்றல் செயல் வழிமுறையையும் இச்சைக்குபடாத மீள்குடியேற்றல் சார்ந்த தேசிய கொள்கையையும் எவ்வாறு பயன்படுத்திக்கொண்டது என்பதையும் தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டம் காட்டியது.

இச்சைக்குட்படாத மீள் குடியேற்றல் சார்ந்த தேசிய கொள்கையானது இயலுமான அளவில் பாரபட்சமற்றதாகவும், சரியான திசையில் செல்கின்றதாகவும், எடுக்கப்பட்ட ஒரு முக்கியமான செயல்முறையாகவே மீள்குடியேற்றல் செயல்பாட்டினை உறுதிபடுத்தியது. செயல்திட்டத்தை அமுல்படுத்துபவர் எவர் என்பது பற்றி கருத்திற்கொள்ளாமல் அது மீள் குடியேற்றல் செயல்பாட்டிற்கு கட்டமைப்பையும், பொறுப்பு கூறுவதையும் வழங்கியது. தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்து மீள்குடியேற்றல் செயற்பாடுகளின் விளைவாக இச்சைக்குட்படாத மீள்குடியேற்றல் சார்ந்த தேசிய கொள்கை மற்றும் ஏனைய விசேட அமைச்சரவை பத்திரங்கள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டதாக இருந்தாலும் கூட மீள் குடியேற்றல் செயல்பாடுகளை விசாரணை செய்வதற்கு முறையான சட்ட உதவியோ, நிறுவனமோ அல்லது ஒரு செயற்குழுவோ வழங்கப்பவில்லை. எனவே அபிவிருத்தி திட்டங்கள் இந்த கொள்கையை எற்றுக்கொண்டு பின்பற்றவும் இல்லை. அத்துடன் சமீபத்திய நகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி செயற்பாடுகளின் போது இடம்பெயரும் மக்களை பற்றி பெரியளவில் கவனத்தில் எடுப்பதில்லை என்பதற்கான சமிக்ஞைகள் உள்ளன. உதாரணமாக தங்களுடைய காணிகளுக்கான உறுதிபத்திரங்கள் இல்லாதவர்களாக இருந்தவர்கள் இச்சைக்குட்படாத மீள்குடியேற்றல் சார்ந்த தேசிய கொள்கையை அமுல்படுத்தியபோது அதை முழுமையாகவே பயன்படுத்திக்கொண்டனர். வெளிவட்ட பாதை செயல்திட்டம் (circular road project), தேசிய நெடுஞ்சாலை செயல்திட்டம், மொரகஹகந்த நீர்தேக்க செயல் திட்டம் மற்றும் குகுலே கங்க நீர் மின்சார செயல்திட்டம் போன்ற பல அபிவிருத்தி திட்டங்கள் இந்த கொள்கைகள் பகுதியாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டன. தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல் திட்டம் மற்றும் லுனாவ சுற்றுசூழல் அபிவிருத்தி மற்றும் சமுதாய அபிவிருத்தி செயல்திட்டம் என்ற இரண்டுமே வழங்குநர்களின் (donors) செல்வாக்குகள் காரணமாகவே இச்சைக்குட்படாத மீள்குடியேற்றல் சார்ந்த தேசிய கொள்கையை பின்பற்றின.

எவ்வாறாயினும் இந்த செயல்திட்டம் அதன் முடிவை நோக்கி நகர்ந்துக்கொண்டிருக்கும் போது இச்சைக்குட்படாத மீள்குடியேற்றல் சார்ந்த தேசிய கொள்கையின் சில அம்சங்களுக்கு சட்ட ரீதியான இணக்கப்பாடு கிடைத்தது. காணி சுவீகரித்தல் சட்டத்திற்கான ஒரு திருத்தமாக 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்ட 2008 இல் காணி சுவீகரித்தல் சட்டம் மீள்குடியேற்றல் பெறுமதியை (அதாவது சந்தை பெறுமதியுடன் சேர்த்து மீள் இருப்பிடத்தை அமைத்துக்கொள்வதற்கான கொடுப்பனவுகள், வியாபார இழப்புகளுக்கான கொடுப்பனவு மற்றும் மீள்கட்டுதல் கொடுபனவு என்ற வகையில் அமைந்திருந்ததன் காரணமாக அது மிகவும் பொருத்தமான நட்டஈடாகியது) அடிப்படையாகக்கொண்ட கொடுப்பனவு எற்றுக்கொள்ளப்பட்டது. அதேநேரம் வயல் காணிகளுக்கு (நிரப்புவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் கமநல சேவை ஆணையாளர் நாயகத்தால் அனுமதிக்கப்படுவதாக இருந்தால் மட்டும்) அபிவிருத்தி பெறுமதியை அடிப்படையாகக்கொண்டதாக கொடுப்பனவு வழங்குவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் வாடகை செலுத்துவர்களுக்கான மீள் இருப்பிடம் அமைத்துக்கொள்வதற்கான நட்டஈடும் எற்றுக்கொள்ளப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்தை பொறுத்தவரை மிகவும் நியாயமான, நேர்மையான முடிவுகளுக்கான முக்கிய காரணியாக விளங்கியது காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றல் குழுவே ஆகும் என்பது ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆயினும் பிந்திய செயல்திட்டங்கள் காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றல் குழுவை பின்பற்றுவதற்கு எடுத்த முயற்சிகளானவை அந்த பெயரை தழுவிக்கொள்வதை நோக்கமாகக்கொண்டதாகவே காணப்பட்டன. அதாவது குழு அங்கத்தவர்களின் இடம் மதிப்பீடு உத்தியோகத்தரால் நிரப்பப்படுவதாக இருந்தன. எனவே அவ்வாறான காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றல் குழுவானது இந்த தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயல்திட்டத்து காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றல் குழுப் போன்ற செல்வாக்கை செலுத்தக்கூடியதொன்றாக அமையவில்லை. எனவே காணி சுவீகரிப்பு சட்டத்தின் 17ஆவது பகுதியின் பிரகாரம் நட்டஈடும் அதேபோல காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றல் குழுவின் நட்டஈடும் என்ற இரண்டுமே குடும்பத்தின் எந்தவொரு பங்குக்கொள்ளலும் இல்லாமல் நிறுவனத்தால் தீர்மாணிக்கப்பட்டன. கொழும்பு-மாத்தறை அதிவேக நெடுஞ்சாலை அமைத்தல் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் நீளமான சமரச பேச்சவார்த்தைகளுக்கு அனுமதிக்கப்பட்ட செயற்பாடொன்றின் நன்மைகளை பெற்றார்கள். இது இடம்பெயர்ந்த மக்களுக்குள் பெரும் கருத்துவேறுபாடுகளையும் அதிருப்திகளையும் ஏற்படுவதை தடுக்கவும் அல்லது தவிர்க்கவும் உதவியது மாத்திரமல்ல, எதிர்காலத்து செயல்திட்டங்களின் போது இதேபோன்ற செயற்பாட்டின் தேவையையும் மேலோங்கி காட்டியது.

## இறுதி எண்ணங்கள்

அகன்றதும் நன்மையளிக்கக்கூடியதுமான அபிவிருத்தி செயல்திட்டமொன்றின் பெயரால் கூட மக்களை இடத்தைவிட்டு செல்ல வற்புறுத்தப்படுவதாக இருக்கும்போது ஏற்படும் இடையூறுகளானது மிகவும் இலகுவாகவே நெருக்கடி நிலையை உருவாக்க காரணமாகும். சீனாவின் மூன்று பள்ளத்தாக்கு செயல்திட்டம் (Three Gorges Project) மில்லியனுக்கும் அதிகமான மக்களை இடம்பெயர வைத்தது. இந்தியாவின் நர்மதா வெளி அபிவிருத்தி செயல்திட்டமும் (Narmada Valley Development Project) அவ்வாறு தான் அமைந்தது. இந்த கடந்த காலத்து நெருக்கடிகள் காரணமாகவே அமைப்புகளும் நிறுவனங்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்ந்தோர் சாா்ந்த ஆபத்தை பற்றி அதிக கவனம் செலுத்தின. காணி இல்லாமை, தொழில் இல்லாமை, வீடுகள் இல்லாமை, விளிம்புநிலைக்கு தள்ளப்படுதல், உணவு பாதுகாப்பின்மை, வறிய சுகாதார நிலைமை என்றவகையில் சுருக்கமாக கூறுவதாக இருந்தால் வறுமை நிலைமையின் கூர்மையான வளர்ச்சி என்பன இந்த ஆபத்துகள் ஆகும். மிகவும் இலகுவாகவே கணிக்கப்படக்கூடியதான நிதி சாா்ந்த செலவுகளும் அதேபோல பெரும்பாலும் கணிப்பிடுவதற்கு முடியாது என்ற அளவிலுள்ள தனிநபா், சமூக, கலாசார மற்றும் சுற்றுச்சூழல் சாா்ந்த செலவுகளும் என்ற வகையில் இருவகையான செலவுகளுமே கொண்ட ஒரு செயல்திட்டத்தின் செலவானது விளைவுகளுக்கு ஒத்ததாக உள்ளதா? என்ற கேள்வி தவிர்க்க முடியாதவாறு எழுப்பக்கூடியது தான்.


பாதை அமைத்தல் செயல்திட்டத்தை அமுலாக்கவதற்கு காணிகள் சுவீகரிக்கப்படுகின்றபோது பாதையின் அடிச்சுவடுகளை குறிக்க நெடுஞ்சாலை பொறியியலாளர்கள் ROW (றோ) என்ற பதத்தை பயன்படுத்திக்கொள்கிறார்கள். Right Of Way என்பதின் சுருக்கமான அது காணியை ஒரு பாதையாக பயன்படுத்திக்கொள்வதற்கு உரிமைகளை வழங்குவதை குறிக்கின்றது. நாங்கள் இந்த அதிவேக நெடுஞ்சாலை என்ற விடயத்திற்கு வரும்போது குறிப்பிட்ட காணியின் மீதான தங்களுடைய உரிமைகளை கைவிடப்பட்ட பலரை பற்றி - ஒரு வீடாக, ஒரு வியாபாரமாக, ஒரு பயிர் நிலமாக தங்களுடைய காணியை பயன்படுத்திய உரிமையை ஏனையோர்களுடைய ஒரு அதிவேக சாலையில் பயணிக்கும் உரிமைக்காக கைவிட்டவர்களைப் பற்றி நாங்கள் சிந்தித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கி (JBIC) என்பனவழங்கிய கடனுதவியுடன் எண்பது பில்லியன் ரூபாயிற்கும் அதிக செலவில் அமைக்கப்பட்ட தெற்கு அதிவேக நெடுஞ்சாலையானது இலங்கையின் நெடுஞ்சாலைகளுள் முதன்மையாந்து என்றவகையில் இலங்கை வரலாற்றின் ஒரு மைற்கல் எனலாம். இடப் பெயர்வினை குறைக்கும் வண்ணம் இந்த நெடுஞ்சாலை செல்லும் வழி வரைப்படமாக்கப்பட்டதாக இருந்தாலும். இந்த பாதையமைத்தல் காரணமாக நான்காயிரம் குடும்பங்கள் இடம்பெயரவும் தங்களுடைய வீடுகளை இழந்தமையும் விவசாய நிலங்களையும் வணிக சொத்துகளையும் இழந்தமையும் உத்தேசமான மதிப்பாக இருந்தது.

இந்தநூலானது தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அமைத்ததனால் இடம்பெயாந்தவர்களின் மீள்குடியேற்றல் செயல்பாட்டினில் கவனம் செலுத்துகின்றதொன்றாகும். தங்களுடைய வீடுகளையும் ஜீவனோபாயங்களையும் இழந்து அவர்களது பயணத்தையும் அவர்களுடைய வாழும் சூழலில் அனுபவித்த மாற்றங்களும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பூதை அமைத்தல் செயல்பாட்டு மேற்பார்வையினை தமது அடிப்படை பணியாகக்கொண்டுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை எவ்வாறு இந்த செயல்திட்டத்தின் சமூக நிகழ்ச்சிகளை அமுல்படுத்தியது. என்பதையும் காட்டுகின்றது. அபிவிருத்தி காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளை பாதுகாக்க வகுக்கப்பட்ட விருப்பமற்ற மீள்குடியேற்றல் சார்ந்த தேசிய கொள்கையை (National Involuntary Resettlement Policy) முதன்முறையாக இலங்கையில் பெரியளவில் அமுல்படுத்தியமைதொடர்பான நுண்ணறிவையும் இந்நூல் வழங்குகின்றது.

இச்செயல்திட்டத்திற்கான மீளக்குடியேற்றத்தின் சுயாதீன வெளியக கண்காணிப்பாளர்களாக நான்கு வருடங்கள் வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) செயற்பட்டது. "வழியுரிமை" என்ற இந்நூலானது விருப்பமின்றிய இடம்பெயர்விலும் மீள்குடியேற்றத்திலும் சாதகமானதும் பாதகமானதுமான விளைவுகளை ஆவணப்படுத்தி உள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபையினதும் பாதிகப்பட்ட மக்களினதும் அனுபவங்களின் வழியாக எவ்வாறு மீள்குடியேற்றல் மேற்கொள்ளப்பட்டது என்றஅனுபவத்தை இந்நூல் பகிர்ந்துகொள்ள முயற்சிக்கிறது. எனவே இது எதிர்கால செயல்திட்டங்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவே அமையும்.

cepa
centre for poverty analysis
29, Gregory's Road, Colombo 7, Sri Lanka
Tel: +94 (011) 4690200, 2676955-8
Fax: +94 (011) 2676 959
E-mail: info@cepa.lk
www.cepa.lk

ADB

The Asia Foundation

ISBN 978-955-1040-65-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org